விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி

பக்கங்கள்: இருபத்து நான்கு — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 மாசி 30 செவ்வாய்க்கிழமை (13.03.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 085

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# போர்க் குற்றங்களைத் தடுக்க ஐ.நா.சபை முயலவில்லை!



## சனல் 4 இயக்குநர் குற்றச்சாட்டு

(லண்டன்), இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட போரின்போது படைத்தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களைத் தடுக்க ஐக்கிய நாடுகள் சபையோ, மேற்குலகமோ ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் மேற் கொள்ளவில்லை என இலங்கையின் கொலைக்களங்கள், தண்டிக்கப்படாத போர்க் குற்றங்கள் என்ற ஆவணப் படத்தின் இயக்குநர் கல்லும் மக்ரே குற்றம் சுமத்தியுள்ளார்.

சர்வதேச சட்டங்களின் கீழ் பொதுமக்களை பாதுகாக்க வேண்டியது முதன்மையான கடமையாக இருக்கின்ற போதிலும், அக்கடமையை நிறைவேற்றுவதில் சர்வதேச சமூகம் தவறிழைத்துவிட்டதாக அவர் பிபிசி சிங்கள செய்திச் சேவைக்கு வழங்கிய (24ஆம் பக்கம் பார்க்க)

# பிரபாகரன் குறித்த பரபரப்பு தகவல் சனல் 4 இடம் சிக்கியுள்ளது?

## டெய்லி மெயில் தகவல் வெளியீடு



(லண்டன்)

சனல் 4 தொலைக்காட்சியிடம் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் குறித்த பரபரப்பான வீடியோவும் கிடைத்துள்ளதாக டெய்லி மெயில் இதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

அதில் மிகக் கொடூரமான முறையில் பிரபாகரன் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டிருப்பதாக கூறப்பட்டுள்ளது.

பிரபாகரனின் 12 வயது மகன் பாலச்சந்திரன் மிக மிக நெருக்கமான முறையில் துப்பாக்கியால் சுட்டு படுகொலை செய்யப்பட்டதாகவும், அது தொடர்பான வீடியோ காட்சியை புதன்கிழமையன்று (இலங்கை நேரப்படி வியாழக்கிழமை அதிகாலை) ஒளிபரப்பப் போவதாக சனல் 4 நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த நிலையில் அந்த வீடியோ காட்சியில் பிரபாகரன் குறித்த பரபரப்புக் காட்சியும் இடம்பெற்றிருப்பதாக தற்போது தகவல் கிடைத்துள்ளது.

இலங்கையின் கொலைக்களங்கள் என்ற பெயரில் 2 ஆண்டுகளுக்கு முன்பு, இலங்கையில் நடந்த ஈழப்போரின் கடைசிக் கட்டத்தில் நடந்த போர்க் குற்றங்கள், படுகொலைகள் குறித்த ஆவணப் படத்தை சனல் 4 ஒளிபரப்பி உலகையே அதிரவைத்தது.

தற்போது அதன் (23ஆம் பக்கம் பார்க்க)

## 'பிரபாகரனின் மரணம்' விரைவில் விவரணப் படம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மரணம் தொடர்பாக விவரணப் படமொன்றை இலங்கை இராணுவம் தயாரிக்கவுள்ளதாக இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜகத் ஜயசூரிய நேற்று தெரிவித்துள்ளார்.

நந்திக்கடல் ஏரியில் இறுதிக் கட்ட யுத்தத்தை நேரில் கண்டவர்களின் சாட்சியங்களை கொண்டதாக இந்த விவரணப் படம் தயாரிக்கப்படவுள்ளதாக முல்லைத்தீவில் படையினர் மத்தியில் உரையாற்றுகையில் இராணுவத் தளபதி கூறினார்.

விடுதலைப் புலிகளின் தலைவரின் மரணம் குறித்த விபரணப் படமொன்றை சனல் 4 தயாரித்துள்ளதாகவும் அதை வெளியிட போவதாகவும் செய்திகள் உள்ளன.

இதற்குப் (23ஆம் பக்கம் பார்க்க)

## சனல் 4 வெளியிட்ட தகவலுக்கு அரசாங்கம் பதிலளிக்கவில்லை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் மனிதாபிமான மற்ற முறையில் கொல்லப்பட்டுள்ளதாக சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட தகவல் குறித்து அரசு பதில் எதுவும் அளிக்கவில்லை என ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் நீதிக்குப் புறம்பாக படைத் தரப்பினால் படுகொலை செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் சனல் 4 தொலைக்காட்சியின் புதிய ஆவணப் படம் தெரிவிக்கும் குற்றச்சாட்டுக் குறித்து ஜனாதிபதியின் ஊடக ஆலோசகரும், பேச்சாளருமான பந்துல ஜெயசேகரவிடம் இந்திய ஊடகம் ஒன்று கேள்வி எழுப்பியுள்ளது.

இதற்குத் தான் இன்னும் அந்த ஆவணப் படத்தைப் பார்க்கவில்லை என பந்துல ஜெயசேகர அதற்குப் பதிலளித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வெளிநாடுகளில் இருக்கின்ற தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் சனல் 4 தொலைக் (24ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையை ஆதரித்து இந்தியா வாக்களிக்காது

### குணதாச அமரசேகர தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத் தொடரில் இலங்கையை ஆதரித்து ஒருபோதும் இந்தியா வாக்களிக்காது என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

எனவே அரசாங்கம் தொடர்ந்தும் இந்தியாவின் பின்னால் செல்லாது மாற்று வியூகங்களை வகுத்து ஜெனிவாத் தீர்மானத்தை எதிர்கொள்ளத் தயாராக வேண்டும் என அவர் கூறியுள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கையில் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி தமிழீழத்தை அமைத்து விட்டால் அமெரிக்காவோ ஏனைய மேற்குலக நாடுகளோ எந்தவிதமான குற்றச்சாட்டுக் களையும் முன்வைக்கப் போவதில்லை.

இலங்கையில் இன்று விடுதலைப் புலிகளுக்கு பதிலாக (23ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை- இந்திய உறவில் விரிசலை ஏற்படுத்தச் சதி!

மீனவர்களின் பிரச்சினையினை தவறான கோணத்தில் பிரசாரப் படுத்துவதனூடாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நட்பில் விரிசல் ஏற்படுத்த மறைமுக சதி நடப்பதாக இந்தியாவுக்கான இலங்கைத் தூதரகம் கவலை வெளியிட்டுள்ளது.

கடந்த 9 ஆம் திகதி இலங்கைக் கடற்பரப்பில் வைத்து இந்திய மீனவர்கள் தாக்கப்பட்டார்கள் என வெளி வந்த செய்திக்கு மறுப்புத் தெரிவித்து டில்லியிலுள்ள இலங்கைத் தூதரகத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவையாவன,

கடந்த 9 ஆம் திகதி இலங்கை கடற்படையினரால் இந்திய மீனவர்கள் தாக்கப்பட்டதாக வெளியான செய்தி தொடர்பாக ஆழமான விசாரணைகளை இலங்கைக் கடற்படை (23ஆம் பக்கம் பார்க்க)

## மின்சாரம் தாக்கி பெண் உயிரிழப்பு

(கரவெட்டி)

தொலைக்காட்சிச் கேபிள் ஊடாக சென்ற மின்சாரம் தாக்கியதில் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் நேற்று மாலை 5.30 மணியளவில் கரணவாய் தெற்கில் இடம்பெற்றுள்ளது.

தோட்டத்தின் ஊடாகச் சென்ற கேபிளில் தொட்டபோது இச்சம்பவம் இடம்பெற்றதாக தெரிவிக்கப் பட்டது.

இதில் நாவற்கலட்டிப் பகுதியைச் சேர்ந்த (24ஆம் பக்கம் பார்க்க)

## பௌத்த நாடாக மாறிவரும் இலங்கை!

### விக்கிரமபாகு கருணாரட்ண குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கை சிங்கள பௌத்த நாடாக மாறிவருகின்றது. இன்று இனவாதத்துடன் ஏனைய மதங்களுக்கு எதிரான மதவாதிகளும் தலை தூக்கியுள்ள்னர். இவ்வாறு இடதுசாரி முன்னணியின் தலைவரும், தெஹிவளை கல்கிசை மாநகர சபை உறுப்பினருமான கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி இதனைத் தடுக்க முனைந்தால் ஆட்சியைக் கவிழ்க்கவும் அரசாங்கத்திற்குள் இருக்கும் அடிப்படைவாதிகள் தயங்க மாட்டார்கள் என அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண மேலும் தெரிவித்துள்ளதாவது,

வவு (23ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அமெரிக்காவின் தீர்மானத்துக்கு இந்தியா ஆதரவளிப்பது தீங்கானது

## ஜனதா கட்சி அட்வைஸ்

(சென்னை)

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தின்போது இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமை மீறல்களுக்காக இலங்கையைக் கண்டித்தும் ஒருதலைப்பட்சமான தீர்மானத்தை ஐ.நாவின் கூட்டத்தில் நிறை வேற்றும் முயற்சிக்கு இந்தியா ஆதரவளிக்க கூடாது என ஜனதா கட்சியின் தலைவர் நேற்றுக் கூறியுள்ளார்.

இத் தீர்மானத்திற்கு இந்தியா ஆதரவளிப்பது காஷ்மீர் மணிப்பூர் தொடர்பில் இது போன்ற தீர்மானங்கள் கொண்டுவரப்படும் நிலைமையை தோற்றுவிக்கும். இலங்கை தமிழர்களின் அபிலாசைகளை நிறைவேற்றும் வகையில் இலங்கை அதிகாரப்பகிர்வை மேற்கொள்ள இந்தியா தூண்டவேண்டும் என சுவாமி கூறினார்.


ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணையகத்தில் உள்ள மனிதவுரிமைக்குழுக்களின் தந்திரவலையில் இந்தியா வீழ்ந்துவிடக் கூடாது என சுவாமி தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

முன்மொழியப்பட்டுள்ள தீர்மானம் தமிழீழ விடுதலைப்புலிகளின் உரிமை மீறல்களை பூரணமாக கவனிக்காது விட்டுள்ளது எனவும் அவர் கூறியிருக்கிறார்.

இவ்வாறான பக்க சார்பான தீர்மானத்திற்கு இந்தியா அளிக்கும் ஆதரவு காஷ்மீர் மணிபூர் தொடர்பாக இந்தியாவுக்கு எதிரான தீர்மானங்களைக் கொண்டுவர வழிவகுப்பதாக அமையும். இந்தியாவுக்கு கெட்டபெயரை கொண்டுவரத் துடிக்கும் தீவிரவாத சக்திகளுக்கு இது நல்லதொரு வாய்ப்பாக அமையும் என சுவாமி கூறினார்.

அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகளுடன் கலந்தாலோசித்த பின் விட்டுக்கொடுப்பு தீர்மானமொன்றை கொண்டுவந்து இலங்கையின்தமிழ்பிரஜைகளின்நியாயமான அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய யாப்புத் திருத்தங்களைக் கொண்டுவந்து அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ள இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு தூண்டுதல் அளிக்க வேண்டும் என சுவாமி கூறினார். (எ-11)





தேசிய விருது பெற்ற யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாருக்கு நேற்று யாழ்.மாவட்ட செயலகத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது. இதில் அரச அதிபர் வரவேற்று செல்லப்படுவதையும் கொழும்பில் நடைபெற்ற விழாவில் விருதுபெற்றபின் ஜனாதிபதியுடன் காணப்படுவதையும் படங்களில் காணலாம்.

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பியை களவாடியது அரசாங்கம்-சம்பந்தன்

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள் பிளவு ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் தொடர்ந்து முயற்சித்து வருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நீண்டகாலமாக இது நடைபெற்று வருகின்றது. எங்களுக்கிடையில் பிளவு ஏற்படுத்த அரசாங்கம் தொடர்ந்து முயற்சித்துவருகிறது. எங்களது கட்சியில் உறுப்பினராக இருந்த ஒரேஒரு சிங்கள நாடாளுமன்ற உறுப்பினரையும் அவர்கள் களவாடிவிட்டனர்.

அவரை பொதுமக்கள் பலர் எதிர்த்த போதிலும், பொதுத்தேர்தலில் வேட்பாளராக நான் நியமனம் செய்தேன். அவர் தேர்தலில் வெற்றி பெற்றார்.பின்னர் அரசாங்கம் அவரை களவாடி விட்டது என அவர் கூறினார்.

நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளையும் பிளவுபடுத்துவதில் அரசாங்கம் ஓரளவு வெற்றி கண்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஐக்கிய தேசியக்கட்சி, மக்கள்விடுதலை முன்னணி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உள்ளிட்ட அரசியல்கட்சிகளை அரசாங்கம் பிளவுபடுத்தியுள்ளது.

எங்களது கட்சிக்குள் பிளவை ஏற்படுத்த அவர்கள் முயற்சித்து வருகின்றனர் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை என அவர் கூறினார். (எ-11)

## திருடமுற்பட்டவர் பிடிக்கப்பட்டார்

(சங்காணை)

சங்காணை சந்தை அருகே கடையொன்றின் முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிள் ஒன்றை திருட முற்பட்ட ஒருவர் பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

மது போதையில் வந்த 45 வயது மதிக்கத்தக்க குறித்த நபர் நேற்று மாலை 5.10 மணியளவில் திருட முற்பட்ட சமயம் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

பிடிக்கப்பட்ட அவர் மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (எ-11)

## காணாமல் போன குடும்பஸ்தர் நேற்று சடலமாக மீட்பு

(கரவெட்டி)

புலோலியில் கடந்த வெள்ளிக்கிழமை காணாமல் போன குடும்பஸ்தர் நேற்று மாலை கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார். புலோலி தெற்கைச் சேர்ந்த மகாதேவன் மதியழகன் (வயது 43) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தை கடந்த வெள்ளிக்கிழமை முதல் காணாமல் போயிருந்தார்.

இந் நிலையில் நேற்றுமாலை புத்தளை மகாவித்தியாலயத்துக்கு அருகில் உள்ள கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

மீட்கப்பட்ட சடலம் பருத்தித்துறைப் பொலிஸாரால் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டது. (எ-11,24)

## சுனாமி முன்னெச்சரிக்கை நிகழ்வு நாளை

(பூநகரி)

பூநகரியில் முழங்காவில், நாச்சிக்குடா மற்றும் இரணை மாநகர் ஆகிய பிரதேசங்களில் நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு சுனாமி முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

கரையோரப் பிரதேசத்தில் உள்ள ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்களை இவ் முன்னெச்சரிக்கை நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதிப் பணிப்பாளர் சுகுணதாஸ் தெரிவித்தார். (எ-11,15)


## கண்ணீர் அஞ்சலி



| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 12 | 12 |
| 06 | 03 |
| 1952 | 2012 |

**திருமதி கனகரட்ணம் மங்களேஸ்வரி**

(கிராம சேவகர், மல்லாவி)

எமது பாடசாலை அதிபர் ப. ரவிந்திரன் அவர்களின் அன்புச் சகோதரி திருமதி கனகரட்ணம் மங்களேஸ்வரியின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பாடசாலைச் சமூகம்
மு/ மாங்குளம் மகாவித்தியாலயம்
மாங்குளம்

(C-6078)


## சிங்களப் பேராசிரியைக்கு திருச்சியிலும் எதிர்ப்பு

(சென்னை)

தமிழ் நாடு திருச்சியில் உள்ள கல்லூரி ஒன்றிற்குப் பேசச் சென்ற சிங்களப் பேராசிரியை ஒருவர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்.

இலங்கைஜெயவர்த்தனபுரபல்கலைக் கழகத்தின் வணிகவியல் துறையின், நிர்வாகப் படிப்புப் பிரிவு தலைவராக உள்ளவர் பேராசிரியை ஹேமமாலி குணதிலகே. இவர் நேற்று திருச்சியில் உள்ள பிஷப் ஹீபர் கல்லூரிக்கு சென்றார்.

அங்கு நடந்த கருத்தரங்கில் அவர் பேசினார். இதை அறிந்த விடுதலைச் சிறுத்தைகள், புதிய தமிழகம் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் திரண்டு வந்தனர்.

ஹேமமாலிக்கு எதிராக போராட்டத்தில் குதித்தனர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது.

இதையடுத்து கல்லூரி நிர்வாகத்தினர் ஹேமமாலியை பின்பக்கமாக வெளியேற்றி வைத்தனர்.

பின்னர்வந்த பொலிஸார். போராட்டத்தில் ஈடுபட்ட 20 பேரை கைது செய்து அப்புறப்படுத்தினர்.

இதேவேளை சமீபத்தில் தமிழ் நாடு நெல்லைச் சென்ற சிங்களப் பேராசிரியை ஒருவர் கடும் எதிர்ப்பால் அங்கிருந்து வெளியேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

## பண்டிதமணி விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

(மட்டுவில்)

மட்டுவில் மாதுமை மழலைகள் கல்வி பூங்காவின் பண்டிதமணி விழாவும் பரிசில் நாள் நிகழ்வு இன்று பிற்பகல் 5.30 மணிக்கு மட்டுவில் மாதுமை கல்வி நிலையத்தில் இயக்குநர் சி.சிவகாந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி கலந்து கொள்ளவுள்ளார். (எ-11)


## தவறிவிட்டது

கலாசாலை வீதி, திருநெல்வேலி எனும் முகவரியை உடைய கலியுகப்பெருமாள் துஸ்யந்தன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (850385289V), விசேட அடையாள அட்டை, வங்கி புத்தகம் என்பன பலாலி வீதிக் கும் பேபி போட்டோ சந்தி, பெருமாள் கோவிலடி, ஆஸ்பத் திரி வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளும்படி மிகவும் பணிவுடன் வேண்டுகிறோம்.

S. இன்பம், 600/4 ஓட்டுமடம்,
மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
TP: 077 9308056, 021 222 8756

(7688)

**EASY ENGLISH**

ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்

**YAALH ENGLISH ACADEMY**

யாழ். நகரில் வகுப்பிட அனுசரணை:

**புதிய உயர் கல்லூரி**

விபரங்களுக்கு :0773212711

(7379)

## நவ மங்கை நிவாஸம் இலவச தையல் பயிற்சி

மேற்படி நிலையத்தில் இலவச தையல் பயிற்சி வகுப்புக்கள் புத்தாண்டு தினத்தையொட்டி ஆரம்பிக்கப்படவுள்ளதால் தையற் பயிற்சி பெற விரும்புவோர்

நவமங்கை நிவாஸம்
ராஜவீதி,
கோப்பாய் மத்தி, கோப்பாய்

எனும் முகவரிக்கு 31.03.2012 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

(7689)

## காணி விற்பனைக்கு

கொக்குவில் ஆடியபாதம் வீதியில் 3 3/4 பரப்பு காணி விற்ப னைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-

**0772284235**

(C-6074-A)

## VACANCIES

Applications are invited for the following positions in a local NGO in Jaffna.

1. **Agriculture instructor (position 1)**
2. **Screen printing, fabric painting, glass painting and framing (one position)**
3. **Marketing advisor to promote the product made through our institution (one position)**

Suitable candidates with diploma in relevant field or equivalent with experience are invited to apply on or before 19 March 2012.

**The Chairman**
**Itham (CACPD), 22, Annaikoddai Road,**
**Kondavil west, Kondavil.**

(7684)

## இன்று ஒரு தகவல்

# நரியின் தந்திரம்

ஓர் ஊரிலே காடு இருந்தது. அந்தக் காட்டில் சிங்கம் ஒன்று காட்டுத்தலைவனாக ஆட்சி புரிந்து வந்தது.

மற்றைய எல்லா விலங்குகளும் அந்தச் சிங்கத்தின் சொற்படி கேட்டு நடப்பது வழமை போல இருந்தது.

அந்தச் சிங்கத்தை எதிர்த்தும் பேசுகிற துணிச்சல் வேறு யாருக்கும் இல்லை. அந்தச் சிங்கத்திற்கு நீண்ட நாட்களாக ஒரு சந்தேகம்.

நரித்தந்திரம் என்று சொல்லுகிறார்கள்... அது எப்படி இருக்கும்?

இதைக் கண்டுபிடிக்க என்ன செய்யலாம்? யோசனை செய்தது கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தது.

அதன்படி–காட்டில் உள்ள எல்லா விலங்குகளையும் வரவழைத்து ஒரு கூட்டம் கூடியது. ஒரு பெரிய திடலில் எல்லா விலங்குகளும் உட்கார்ந்திருந்தது.

எதிரே உள்ள ஒரு மேடையில் சிங்கம் உட்கார்ந்திருந்து பேச நிகழ்த்த ஆரம்பித்தது.

"நண்பர்களே... இப்போது நான் ஒரு கேள்வி கேட்பேன். அதற்கு நீங்கள் எல்லோரும் பதில் சொல்ல வேண்டும்!" அப்படி என்று கூறியது.

என்ன கேள்வி கேட்கப் போகிறாரோ தெரியவில்லையே என்ற பயம் எல்லா விலங்குகளுக்கும் ஏற்பட்டது. ஏதாவது பிழையாகப் பதிலளித்தால் சிங்கத்திற்கு கோபம் வந்து விடும். அதன் பின் என்ன நடக்குமென்று யாராலேயும் சொல்ல முடியாது. எல்லா விலங்குகளும் சிங்கம் தெரிவிக்கப்போவதை ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தது.

ஒரு சின்ன எலியைப் பிடித்தது... அதைத் தன்னுடைய உள்ளங்கையில் வைத்து உயர்த்திக் காட்டி "இது என்ன சொல்லுங்கள் பார்க்கலாம்?" என்றது.

முதலில் ஒரு காட்டுப் பூனை எழுந்து "இது எலி" என்று பதிலளித்தது.

அதன் பின் குரங்கு "இது எலி" என்று சொல்லிவிட்டுப் போய் உட்கார்ந்தது.

அதனைத் தொடர்ந்து ஒரு கரடி வந்து "இது எலி" என்றது.

கடைசியாக வந்த நரி மட்டும் கொஞ்சம் வித்தியாசமாகப் பதில் கூறியது.

"இது எலி" என்று சொல்லவில்லை.

"இதை... எலி என்று சொல்கிறார்கள்!" அப்படி என்றது. அதாவது நரி மனதினுள் என்ன நினைத்தது தெரியுமா?

இது எலி என்பது சிங்கத்திற்கு தெரியாமலா இருக்கும்? அப்படியிருக்கும் போது சிங்கம் எதற்காக இப்படி ஒரு கேள்வியைக் கேட்கிறதோ... தெரியவில்லையே... இந்த வலைக்குள் நான் ஏன் மாட்டிக் கொள்ள வேண்டும்.

மற்றவர்கள் இப்படி சொல்கிறார்கள் என்று நான் சொல்லி விட்டால் என்மேலே எந்தப் பிழையும் கண்டுபிடிக்க முடியாது... இதுதான் நரியின் யோசனை.

இருந்தாலும் அந்தச் சிங்கம் நரியை விட்டு வைப்பதாக இல்லை. மறுபடியும் அந்த நரியை அழைத்தது.

இதோ... பார் நரியே...இவ்வளவு நாளாக நீ எலியைப் பார்த்ததே இல்லையா? இது என்ன என்பது உனக்குத் தெரியாதா? நீ தெளிவாகச் சொல்லவேண்டியதுதானே "இது எலி" அப்படி என்று. அதை விட்டுட்டு ஏதோ ஜோதிடம் சொல்வது மாதிரி சொல்கிறாயே...

சரி உனக்கு ஒரு மாதகால அவகாசம் தருகிறேன்... நீ போய் உன் இனத்தை ஒன்று சேர்த்து மற்றைய நரிகளோடு கலந்தாலோசித்து ஒரு முடிவுக்கு வா... அதன்பின் வந்து சொல்லு இது என்ன பிராணி! என்பதை அவ்வளவு தான். கூட்டம் கலைந்தது.

நரி யோசனையோடு திரும்பிப் போனது... மற்றைய நரிகளிடம் பேசியது.

நாம் எல்லோரும் அது எலி என்று சொன்னால் என்ன ஆபத்து நேரிடுமோ தெரியவில்லையே.

ஒரு மாதம் கடந்த நிலையில் அடுத்த கட்டகூட்டம் நடந்தது.

சிங்கம் கேட்டது என்ன நரியே... என்ன முடிவு எடுத்துள்ளீர்.

ஐயா! நீங்கள் சொன்னதன் பிரகாரம் எல்லோரும் கூடி விவாதித்தோம்.

"சரி என்ன முடிவு?"

"இதை எலி என்று உங்களிடம் சொல்லச் சொன்னார்கள்" என்று தெளிவாகக் கூறியது.

அப்போதும் இது அதிலே தன்னைச்சம்பந்தப்படுத்தவில்லை!

சிங்கத்திற்குச் சிரிப்பு வந்தது.

அதன்பின் கேட்டது... சரி..அதையெல்லாம் விடு... நீ என்ன நினைக்கிறாய்? அதைச் சொல்லு? என்று கேட்டது.

"எஜமானே! நீங்கள் எப்படி நினைக்கிறீர்களோ அப்படித்தான் நானும் நினைக்கிறேன்!" என்றது நரி.

"சரி போய் வா!" என்று கூறியது சிங்கம். இது தான் நரித்தந்திரம் என்பதாகும்.

இன்றைய உலகில் மனிதர்களுக்கு இந்தத் தந்திரம் அதிகமாகத் தேவைப்படுகிறது... அதுவும் அடிக்கடி தேவையாகவுள்ளது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் 991 பேருக்கு மண்ணெண்ணெய் முத்திரை விநியோகம்

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் வசிக்கும் குடும்பங்களில் முதற்கட்டமாக 991 குடும்பங்களுக்கு மட்டும் மண்ணெண்ணெய் முத்திரை வழங்கப்படவுள்ளது.

இதற்கான சகல ஒழுங்குகளையும் உதவி அரசாங்க அதிபர் ஜெயகாந்த் மேற்கொண்டுள்ளார்.

எரிபொருளின் விலை அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து விவசாயிகள், மீனவர்கள் உட்பட மின்சார வசதியில்லாத குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இவர்களின் நலன் கருதி மானிய முறையில் மண்ணெண்ணெய் வழங்குவதற்கான ஒழுங்குகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் சுமார் 8 ஆயிரத்திற்கும் அதிகமான குடும்பங்கள் மீள் குடியமர்த்தப்பட்டுள்ளன, இப்பிரதேசத்தில் மின்சார வசதி இல்லாததினால் அனைவரும் மண்ணெண்ணெயை பயன்படுத்தி வருகிறார்கள்.

புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்கு முல்லைத்தீவு அரசாங்க அதிபரினால் குறைந்த அளவிலான மண்ணெண்ணெய் முத்திரைகள் வழங்கப்பட்டன.

இதனால் சகல குடும்பங்களுக்கும் மண்ணெண்ணெய் முத்திரை வழங்கமுடியாத நிலை உருவாகியுள்ளது.

இதன் முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களில் ஆரம்பத்தில் மீள் குடியேறியவர்கள், சமுர்த்தித் திட்டத்தில் இணைக்கப்பட்டவர்கள் உட்பட அதிக அங்கத்தவர்களைக் கொண்டுள்ள குடும்பங்கள் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஆறு கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த விசுவமடு மேற்கு 145, கிழக்கு 100, மாணிக்கபுரம் 144, வள்ளிபுரம் 150, கோராவில் 293, மக்காங்கண்டல் 159 குடும்பங்களே இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஏனைய எட்டு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் வசிக்கும் மக்களுக்கு தகுதிக்கேற்றவாறு படிப்படியாக மண்ணெண்ணெய் முத்திரைகள் வழங்கப்படவுள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ–7)

# உற்பத்தித்திறன் மற்றும் தர மேம்பாட்டிற்கான செயலமர்வு

வடமாகாணத்தில் 2011ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் புதிதாக நியமனம் செய்யப்பட்ட நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள் மற்றும் முகாமைத்துவ உதவியாளர்களுக்கான அரைநாள் செயலமர்வு ஆளுநரின் வழிகாட்டலுக்கமைய 16ஆம் திகதி வீரசிங்கம் மண்டபத்தில் காலை 8.30 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை நடத்தப்படவுள்ளதாக பணிப்பாளர் சி.கிருஷ்ணானந்தன் அறிவித்துள்ளார்.

மேற்படி பயிற்சி செயலமர்வில் கலந்து கொள்ளத்தக்க வகையில் அழைப்பு கடிதம் கிடைக்காதவர்களும் குறித்த நேரத்திற்கு வருகை தந்து செயலமர்வில் கலந்து கொள்ளலாம்.

மேலும் பயிற்சி செயலமர்வில் கலந்து கொள்வதற்கு ஏதுவாக வடமாகாணத்தை சேர்ந்த மேற்படி உத்தியோகத்தர்களை குறித்த திகதியில் திணைக்கள தலைவர்கள் விடுவித்துதவுமாறும் அவர் கேட்டுள்ளார். (அ)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 100 | 50 |
| உருளைக்கிழங்கு | 70 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 30 | 20 | 40 |
| தக்காளி | 25 | 20 | 20 |
| மரவள்ளிக் கிழங்கு | 40 | 30 | 30 |
| கோவா | 25 | 20 | 20 |
| கரட் | 30 | 40 | 40 |
| பூசணி | 20 | 30 | 30 |
| புடோல் | 50 | 40 | 40 |
| வாழைக்காய் | 20 | 20 | 30 |
| சின்ன வெங்காயம் | 50 | 60 | 40 |
| பெரிய வெங்காயம் | 70 | 80 | 50 |
| பாகற்காய் | 60 | 90 | 70 |
| வெண்டிக்காய் | 40 | 40 | 50 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 | 60 |
| பயற்றங்காய் | 80 | 80 | 70 |
| லீக்ஸ் | 70 | 70 | 60 |
| பீற்றூட் | 20 | 20 | 20 |
| கறிமிளகாய் | 60 | 90 | 50 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 600 |
| போஞ்சி | 70 | 80 | 40 |
| கத்தரிதம்புள்ள | 60 | 70 | 35 |
| கீரை – 1 பிடி | 15 | 30 | 15 |
| தேசிக்காய் | 40 | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 30 |
| வெங்காயப்பூ | 60 | 60 | 60 |

# இராசி பலன்

*13.03.2012*
*(மாசி 30, செவ்வாய்க்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.21 மணிக்கு*
*சஷ்டி பின்னிரவு 2.49 மணிவரை*
*விசாகம் பிற்பகல் 12.44மணிவரை*
*இராகுகாலம் 3.21–4.51 மணிவரை*
*சுபநேரம் 10.51–12.21 மணிவரை*

**மேடம்** வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, விரையங்கள் கூடும், கௌரவக் குறைவான நாள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் சில அச்சுறுத்தல்கள் ஏற்படலாம்.

**இடபம்** சென்ற இடத்தில் செல்வாக்கு அதிகரிக்கும், எடுத்தகாரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், போசன சுகமுண்டு.

**மிதுனம்** செய்தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை எடுப்பீர்கள், வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், உற்சாகமான நாள்.

**கடகம்** தன்னம்பிக்கை துளிர் விடும் நாள், தனவரவு திருப்திகரமாக அமையும், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், காரிய இடையூறுகள் விலகும்.

**சிங்கம்** தாய் வழி உறவில் நன்மையடைவீகள், எதிர்பாராத எதவிகள் கிடைக்கலாம், வாகன' சுகமுண்டு, சுப செய்திகள் வந்து சேரும் நாள், பொருட் சேர்க்கையுண்டு.

**கன்னி** உடன் பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டுவர், மறக்க முடியாத சில சம்பவங்கள் இடம்பெறலாம், விருந்து விழாக்களில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, காரிய அனுகூலமுண்டு.

**துலாம்** வாக்கு மேன்மையுண்டு, புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும், பணப்புழக்கம் அதிகரிக்கும், சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**விருச்சிகம்** விநாயகரை வழிபட்டு இனிமைகாண வேண்டிய நாள், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும், கற்பனைகள் அதிகரிக்கும், போசன சுகமுண்டு.

**தனுசு** காரிய அலைச்சல்கள் ஏற்படலாம், சுப செலவுகள் அதிகரிக்கும், சயன சுகக் குறைவான நாள், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது.

**மகரம்** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், தெய்வீக நாட்டம் அதிகரிக்கும், போசன சுகமுண்டு, உறவினர் சந்திப்புண்டு.

**கும்பம்** தொழிலில் உற்சாகத்தடன் பணி புரிவீர்கள், எடுத்த காரியத்தில் வெற்றி கிடைக்கும், சுபசெய்திகள் வந்து சேரலாம், எதிர்பார்த்த உதவிகள் வந்து சேரலாம்.

**மீனம்** மனக்குழப்பம் தீர்ந்து மகிழ்ச்சி கூடும் நாள், உடல் நலம் சீராகி உற்சாகமடைவீர்கள், பயணாளிகளால் பலனுண்டு, நன்பர்கள் உதவி செய்ய முன் வருவர்.

வளவன்

# வடமராட்சி கிழக்கு கடற்பரப்பில் தென்னிலங்கை மீனவர்கள் ஆதிக்கம்

## தடுக்கக்கோரி மகஜர் கையளிப்பு

(கரவெட்டி)

வடமராட்சி கிழக்கு கடற்பரப்புகளில் தென்னிலங்கை மீனவர்களின் ஆதிக்கம் அதிகரித்துள்ளதனால் அப்பகுதி மீனவர்கள் தொழில் நடவடிக்கையில் ஈடுபட முடியாத நிலை காணப்படுகின்றது.

இதனால் பெரும்பாலான மீனவர்கள் மன உளைச்சலுக்கும் ஆளாகியுள்ளதாக அப்பகுதி மீனவர்களால் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இம்மீன்பிடி நடவடிக்கையில் வடமராட்சி கிழக்கு, வெற்றிலைக்கேணி, தாளையடி, கட்டைக்காடு ஆகிய கடற்பரப்புகளில் நூற்றுக்கு மேற்பட்ட தென்னிலங்கை மீனவர்கள் கடந்த 3 தினங்களாக தங்கி நின்று கடற்றொழில் செய்து வருகின்றனர்.

இது தொடர்பாக அப்பகுதி இராணுவத்தினருக்கு தெரியப்படுத்திய போதும் தென்னிலங்கை மீனவர்கள் ஐந்து தினங்களில் திரும்பிவிடுவார்கள் எனவும் பதிலளித்துள்ளனர்.

இச்சம்பவங்களால் விசனமடைந்த வடமராட்சி மீனவர்கள் யாழ். கடல் நீர்வள உதவிப்பணிப்பாளருக்கு முறைப்பாடு அடங்கிய மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர்.

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டத்தில் வெளிமாவட்ட மீனவர்கள் குறித்த பிரதேசங்களில் அனுமதிப்பத்திரம் இன்றி கடற்றொழில் செய்ய முடியாது என முடிவு எடுக்கப்பட்டிருந்தும் தென்னிலங்கை மீனவர்கள் அத்துமீறி மீன்பிடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-8-24)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

(கல்வயல்)

கல்வயல் சிறி சண்முகனாந்தா வித்தியாலய வருடாந்த மெய்வல்லுநர் போட்டி நாளை மறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு விநாயகமூர்த்தி விளையாட்டு மைதானத்தில் பாடசாலை அதிபர் இ.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ. சிறிஸ் கந்தமூர்த்தி, சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற அதிபர் சே. சிவஞானம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-7-31)

* * * * * * *

(சாவகச்சேரி)

சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுர் போட்டி இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வித்தியாலய மைதானத்தில் பாடசாலை அதிபர் திருமதி ச. தர்மகுலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. சிறிஸ்கந்தமூர்த்தி, சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தம், கௌரவ விருந்தினராக சரசாலை வடக்கு கிராம உத்தியோகத்தர் க. முல்லைமாறன், மக்கள் வங்கி சாவகச்சேரி கிளை உத்தியோகத்தர் க. ஞானசந்திரன், தென்மராட்சி கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் நா. ராஜன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-7-29)

## பொதுக்கூட்டம்

(சாவகச்சேரி)

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய தென்மராட்சி பிரதேச சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு சாவகச்சேரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் சங்கத் தலைவர் சி. சிவகடாட்சம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக பகிரங்க சேவை ஓய்வூதிய நம்பிக்கை நிதிய யாழ். மாவட்ட தலைவர் வி. சிறிசக்திவேல், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலக கணக்காளர் அ. மோகனராஜ் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ-7-29)

# சுனாமிக்கான பாசாங்கு எச்சரிக்கை போலி நடிப்பு

(யாழ்ப்பாணம்)

சுனாமிக்கான பாசாங்கு எச்சரிக்கை மற்றும் போலி நடிப்பு பயிற்சி செயற்பாடுகள் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள செம்பியன்பற்று, தனிப்பனை பிரதேசத்தில் ஜே/ 426 கிராம உத்தியோகத்தர் பிரிவில் இன்று செவ்வாய்க்கிழமை அனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் மேற்கொள்ளப்பட இருப்பதாக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் அறிவித்துள்ளார்.

இந்தப் பயிற்சி சம்பந்தமாக பொது மக்கள் அமைதியாக இருக்குமாறும் இது ஒரு ஒத்திகைச் செயற்பாடு என்பதால் எவரும் குழப்பமடைய தேவையில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# இருதயநோய் விசேட மருத்துமுகாம்

(யாழ்ப்பாணம்)

பாதுகாப்பு படையினரின் 51 ஆவது படைப்பிரிவால் இருதயநோய் தொடர்பான விசேட மருத்துவ முகாமொன்று எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2.30 மணி வரை கோப்பாய் நாவலர் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இம்மருத்துவ முகாமினை கோப்பாய் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையில் முக்கிய பிரதிநிதிகளும் கொழும்பு ஆசிரி தனியார் வைத்தியசாலையின் 5 வைத்திய நிபுணர்கள் உட்பட 25 மருத்துவர்களைக் கொண்ட குழுவொன்று நடத்தவுள்ளதென 51 ஆவது படைப்பிரிவு அறிவித்துள்ளது. (அ-7)




# சாவ.நகரத்தில் 3 உணவகங்களுக்கு ஏ தர சான்றிதழ்கள் வழங்கப்பட்டன

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்டு இயங்கும் 21 உணவகங்களில் 3 உணவகங்கள் சுகாதார திணைக்களத்தினால் ஏ த்ரச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஐந்து உணவகங்களுக்கு சி தரச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளதாகவும் அந்நிலையங்கள் குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் சிபார்சு செய்யப்பட்ட சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும் எனவும் தவறின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சுகாதாரப் பகுதியினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட சங்கத்தானை மோகன்கூல்பார், உதயம் உணவகம், பிரியன் உணவகம் ஆகியவையே ஏ தரச் சான்றிதழ் பெற்றதாக தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் சாவகச்சேரி கைத்தொழில் வணிக மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட உணவக உரிமையாளர்களுடனான கலந்துரையாடலின் போதே மேற்படி அறிவிப்பு சுகாதாரப்பகுதியினரால் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அருகாமையிலுள்ள தேநீரகம் ஒன்றில் புகையிலை உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யாது இருந்தமைக்காக சுகாதார திணைக்களத்தினால் விசேட சான்றிதழ் வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (அ-7-29)

# 63,500 ஆயிரம் ரூபாவை அபராதமாக சாவகச்சேரி நீதிமன்றம் விதித்தது

## ஆபாசப்படம் வைத்திருந்தவருக்கு 50 ஆயிரம் ரூபா

(கரவெட்டி)

வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்றுமுன்தினம் இரவு மதுபோதையில் அநாகரிகமான முறையிலும் கையடக்கத்தொலைபேசியில் ஆபாச படத்துடனும் பொலிசாருக்கு இடையூறு விளைவித்த மூன்று நபர்களுக்கு பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று 63 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்துள்ளது.

வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக 3 நபர்களில் ஒருவர் தனது கையடக்கத்தொலைபேசியில் ஆபாசப் படம் பதிவு செய்து வைத்திருந்ததாகவும் மற்றொரு நபர் சட்ட விரோதமாக கத்தி வைத்திருந்ததாகவும் மற்றையவர் மதுபோதையில் வாகனம் செலுத்தியதாகவும் பொலிஸார் வழக்கில் குறிப்பிட்டுள்ளனர்.

வழக்கை விசாரித்த பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் ஆபாசப்படம் வைத்திருந்தவருக்கு 50 ஆயிரம் ரூபாவும் தடை செய்யப்பட்ட கத்தி வைத்திருந்தவருக்கு 10 ஆயிரத்து 500 ரூபாவும் மதுபோதையில் வாகனம் செலுத்தியவருக்கு 3 ஆயிரம் ரூபாவும் அபராதம் செலுத்துமாறு உத்தரவிட்டிருந்தார். (அ-7-24)



யா/ புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பாடசாலை விளையாட்டுத்துறை செயலாளர் பிலிக்ஸ் மோகன்குமார் ஒலிம்பிக் சுடரேற்றி வைப்பதையும் விருந்தினர் விளையாட்டில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி, அருகில் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- புன்னாலைக்கட்டுவன் செய்தியாளர்)

# எரிபொருள் நெருக்கடியை சமாளிக்க பல்வேறு தரப்புக்களுடன் ஆலோசனை

## மசகு எண்ணெயை நேரடியாக பெறவும் முயற்சி

எரிபொருள் நெருக்கடியை எதிர்கொள்ளும் வகையில் எரிபொருள் பாவனையில் கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு பெற்றோலிய கைத்தொழில் அமைச்சு ஆலோசனை செய்து வருவதாகவும் இது தொடர்பில் அமைச்சு மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபன உயர்மட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் பெற்றோலிய கைத்தொழில் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள் ளார்.

நெருக்கடியை எதிர்கொள்ளும் வகையில் மசகு எண்ணெயை முகவர்களூடாக அன்றி எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து நேரடியாக கொள்வனவு செய்வது தொடர்பிலும் கலந்தாலோசிக்கப்பட்டு வருகின்றது.

மசகு எண்ணெய்க்கான புதிய வளங்களை கண்டுபிடிக்காத பட்சத்தில் எரிபொருள் பாவனைக்கான மேலதிக கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டிய நிலைமை அரசாங்கத்திற்கு ஏற்படும். எனினும் பொது போக்குவரத்து சேவையை முறையாக முன்னெடுக்கும் வகையில் பொது போக்குவரத்துக்கு மானிய முறையில் எரிபொருட்களை வழங்க வேண்டி வரும்.

இது தொடர்பில் அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகளுடன் விரிவாக கலந்துரையாடப்படுகிறது.

ஈரானுக்கு எதிரான அமெரிக்காவின் தடையினால் பாரிய எரிபொருள் தட்டுப்பாட்டிற்கு இலங்கை முகம் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும். ஏனெனில், இலங்கைக்கு தேவையான எரிபொருளில் 93 வீதமானவை ஈரானில் இருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றது. மசகு எண்ணெயை பெற்றுக்கொள்வதற்கான மாற்று வழிமுறை களை ஜூன் மாதத்திற்கு முன்னர் கண்டுபிடி க்காவிடின் பாரிய நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும்.

மேலும் ஹோமஸ் நீரிணையை மூடுவதற்கான சாத்தியக்கூறுகளும் இருக்கின்றன. அவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டால் நிலைமை இன்னும் மோசமடையும். இலங்கையில் ஏற்படக்கூடிய சக்தி நெருக்கடிகளை தவிர்ப்பதற்கான பல்வேறு மட்டங்களில் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படுகின்றன. எரிபொருள் பாவனையில் மேலதிக கட்டுப்பாடுகளை விதிப்பது தொடர்பில் கலந்துரையாடப்படுகின்றது.

எனினும் கட்டுப்பாடுகள் தொடர்பில் தீர்மானிக்கப்படவில்லை. நெருக்கடியான நேரங்களில் பொதுப் போக்குவரத்து சேவைகளில் ஏற்படும் தாக்கங்களை குறைப்பதற்காக முக்கிய சேவைகளுக்கு மட்டும் மானியம் வழங்குவது தொடர்பிலேயே கலந்துரையாடப்படுகின்றது.

மசகு எண்ணெய் பெரல் ஒன்றின் விலை 125 அமெரிக்க டொலருக்கு உயர்ந்துள்ளது. இவ்வாறான நிலையில் மசகு எண்ணெயை நேரடியாக கொள்வனவு செய்வது தொடர்பில் சவுதி மற்றும் ஓமான் அரசாங்கங்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது குறித்து இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன உயரதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டு வருகின்றது.

இதேவேளை, மசகு எண்ணெயை உற்பத்தி செய்யாத கட்டாருடனும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பது குறித்து விரிவாக ஆராயப்படுகிறது. கட்டாரில் மசகு எண்ணெய் உற்பத்தி செய்யப்படாத போதிலும் சமையல் எரிவாயு பாரியளவில் உற்பத்தி செய்யப்படுகின்றது. எண்ணெய் முகவர்கள் இன்றி மசகு எண்ணெயை நாடுகள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து நேரடியாக கொள்வனவு செய்வதற்கும் ஈரான் நெருக்கடியை தவிர்ப்பதற்கு இலங்கைக்கு தனியான வழங்குநர்களை ஏற்பாடு செய்வது தொடர்பிலும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகள் கலந்துரையாடி வருகின்றனர் எனவும் தெரிவித்தார். (அ-2)



யூனியன் அசூரன்ஸ் பருத்தித்துறை கிளையில் ஆயுள் காப்புறுதி செய்து புற்றுநோயால் மரணமடைந்த ரி.சுந்தரேஸ்வரமூர்த்தியின் இழப்பீட்டுக் கொடுப்பனவுத் தொகை அண்மையில் வழங்கப்பட்டது. இதில் இழப்பீட்டுக் கொடுப்பனவுத் தொகையை காப்புறுதி அபிவிருத்தி உத்தியோகத்தர் க.ஞானச்செல்வம் அவரது பாரியாருக்கு வழங்குவதையும் அருகில் வலய முகாமையாளர் சி.என்.மதிவதனன், விற்பனை முகாமையாளர் ரி.குபேந்திரன் ஆகியோர் நிற்பதனையும் படங்களில் காணலாம்.

# முன்னாள் போராளிகளுக்கு 250 கோடி ரூபா செலவு

முன்னாள் போராளிகளுக்காக அரசாங்கம் 250 கோடி ரூபாவை செலவிட்டுள்ளது. யுத்தம் முடிவடைந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் தொடக்கம் இத்தொகை செலவிடப்பட்டுள்ளது.

10ஆயிரத்து 375 க்கு மேற்பட்ட முன்னாள் போராளிகள் மீண்டும் சமூகத்தில் இணைக்கப்பட்டு சுயதொழில் வாய்ப்புக்காக இவர்களுக்கு தொழிற்பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர சமர்ப்பித்த முன்னாள் போராளிகளுக்கு அரச வங்கிகளினூடாக கடன் வழங்கும் திட்டத்திற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இதற்காக அரசாங்கம் 30 கோடி ரூபாவை வழங்கியுள்ளது.

சமூகத்துடன் மீண்டும் இணைக்கப்பட்ட 2 ஆயிரம் முன்னாள் போராளிகளுக்கு கடன் வசதி அளிக்கப்பட்டுள்ளதுடன் பிரதேச செயலாளர்களின் சிபாரிசின் பேரில் ஒருவருக்கு இரண்டரை இலட்சம் ரூபா வரை கடனாக இலங்கை வங்கியினால் வழங்கப்படவுள்ளது. இதேவேளை மேலும் 765 முன்னாள் போராளிகள் மீண்டும் சமூகத்துடன் இணைக்கப்படவுள்ளனர். (அ-7)

# அரசாங்கக் காணிகளை சுவீகரிப்பதற்கு விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளது

அரசாங்கக் காணிகளை மீள சுவீகரித்துக் கொள்வதற்காக விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. அபிவிருத்தி நோக்கங்களுக்காக பகிர்ந்து அளிக்கப்பட்ட காணிகள் உரியமுறையில் பயன்படுத்தப்படுகின்றனவா என ஆராயப்படவுள்ளது.

இவ்வாறு உரிய முறையில் காணிகளை பயன்படுத்தாத தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து காணிகளை அரசாங்கம் மீள சுவீகரிக்கத் திட்டமிட்டுள்ளது.

அபிவிருத்தி நோக்கங்களுக்காக பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட காணிகள் உரிய முறையில் பயன்படுத்தப்படவில்லை என காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் தலைவர் நிமால் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார். (அ-2)

# விகாராதிபதி இடைநிறுத்தம்

மிஹந்தலை ரஜமஹா விகாரையின் விகாராதிபதி வண. நமல் வெவரத்ன சாரதேரர், மல்வத்தை பீடத்தினால் அப்பதவியிலிருந்து உடனடியாக இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

இவ்விகாராதிபதி சிறுவர் துன்புறுத்தல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மல்வத்தை பீடத்தின் இத்தீர்மானம் குறித்து, பௌத்த விவகார ஆணையாளர் நாயகத்துக்கு எழுதிய கடிதமொன்றில் மல்வத்தை மகாநாயக்க பீடத்தின் மாகாநாயக்க தேரர் வண. திப்பட்டுவாவே சுமங்கள தேரரர் அறிவித்துள்ளார்.

மிஹந்தலை ரஜமஹா விகாரையின் புதிய விகாராதிபதியாக வண வலஹாங்குணுவெவ தேரர் நியமிக்கப்பட்டுள்ளார் (அ-2-7)

# சந்தேக நபர் சரணடைந்தார்

(கொழும்பு)

21வயது இளைஞன் ஒருவரின் கொலை தொடர்பாக சந்தேகிக்கப்பட்டு வந்த ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் அலிபேபி என அழைக்கப்படும் வெலிகபொல பிரதேசசபை உறுப்பினரான சப்ஹா வசந்த இரத்தினபுரி பொலிஸ் நிலையத்தில் நேற்றைய தினம் சரணடைந்துள்ளார்.

இவர் கைது செய்யப்பட்டதை கிராமவாசிகள் பட்டாசு கொளுத்தி கொண்டாடினர். இக்கொலைச் சம்பவம் தொடர்பில் கிராமவாசிகள் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டதைத் தொடர்ந்து குறித்த இளைஞனின் மரணச் சடங்கிற்கு விசேட அதிரடிப் படையினர் பாதுகாப்பு வழங்கியுள்ளனர். (அ-2)

# சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடிய நபர்களுக்கு விளக்கமறியல்

(கரவெட்டி)

கொற்றாவத்தை சமரபாகு பகுதியில் இரவு நேரத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் முச்சக்கரவண்டியில் நடமாடிய இரு சந்தேக நபர்களை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கமாறு பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது. சமரபாகு பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு முச்சக்கர வண் டியில் அல்வாயை சேர்ந்த ஒருவரும் யாழ்ப் பாணத்தை சேர்ந்த இன்னொரு நபரும் சந்தேகத்திற்கு முரணான வகையில் நட மாடியுள்ளனர்.

குறித்த இரு சந் தேக நபர்களை கைது செய்த பொலிஸார் நேற்றைய தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி திருமதி சிறிநிதி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிபதி இரு சந்தேக நபர்களையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தர விட்டார். (அ-7-24)

# பிரதான எதிர்க்கட்சிக்குள் உட்கட்சி பூசல் உக்கிரம்?

ஐக்கிய தேசியக் கட்சிக்குள் நிலவி வரும் உட்கட்சி நிலைமை உக்கிரமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் தற்போதைய பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் முன்னாள் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய ஆகியோருக்கு எதிராக கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க நடவடிக்கை எடுத்து வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சஜித் மற்றும் கரு ஆகியோருடன் நெருக்கமான தொடர்புகளை பேணும் உறுப்பினர்களை கட்சியிலிருந்து நீக்க ரணில் முயற் சிப்பதாக தெரிவிக்கப்படுகிறது. உட்கட்சி பூசல் நிலைமை முன் னொரு போதும் இல்லாத வகையில் உயர்வடைந்துள்ளதாக குறிப் பிடப்படுகிறது. கரு,சஜித் மற்றும் தயாசிறி ஆகியோர் தமக்கு எதிராக செயற்பட்டு வருவதாக ரணில் விக்ரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார். பெரும ளவிலான பாராளுமன்ற உறுப்பினர்கள் கரு, சஜித் ஆகியோருக்கு ஆதரவளித்து வருவதாக குறிப்பிடப்படுகிறது. இதேவேளை, கட்சியிலிருந்து தம்மை நிரந்தரமாக விலக்குவதற்கு ரணில் விக்ரமசிங்க முயற்சிப்பதாக சஜித் மற்றும் கரு ஜயசூரிய ஆகியோர் குற்றம் சுமத்தியுள்ளனர். (அ-2)




**கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலய பங்குனி உத்தர பொங்கல் (05.04.2012) விழாவின் போது வாணிபம் மேற்கொள்ளும் வாணிபர்களுக்கான நில ஏல விற்பனை அறிவித்தல்**

நாகதம்பிரான் ஆலய பொங்கல் விழா எதிர்வரும் 05.04.2012 வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. விழாவின் போது வாணிபம் மேற்கொள்ளும் வாணிபர்களுக்கான நில ஏல விற்பனை எதிர்வரும் 25.03.2012 ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

இவ்வண்ணம்
ஆலய பரிபாலன சபை.

# மெய்ஞானம் பெறுதல்



## ஆன்மீகம் 04

எந்தச் சூழலாலும் அசைக்க முடியாத, என்ன வந்தாலும் சரி இதயத்தின் புன்னகையை திருட முடியாத, அந்த முதிர்ச்சி அடைந்த நிலையே ஞானம் பெறுதலாகும். இந்தப் பிரபஞ்சத்திலிருக்கும் அனைத்தும் என்னைச் சேர்ந்தவையே என்பது ஞான சித்தி. அது, வரையறுக்கப்பட்ட எல்லைகளுடன் வரையறுக்கப்பட்ட உணர்வுகளுடன் தன்னை அடையாளம் காண்பதல்ல.

அஞ்ஞானத்தை சுலபமாக அறுதியிட்டுக்கூறலாம். அது, நான் இந்தக் குறிப்பிட்ட இடத்தைச் சேர்ந்தவன் அல்லது தான் அந்தப் பரம்பரையிலிருந்து வந்தவன் என்று தன்னைத் தானே ஒரு வரையறைக்குள் குறுக்கிக் கொள்வது. இது சிறு குழந்தைகள், "என் பொம்மை உன்னுடையதை விட சிறந்தது. என் அப்பா உன் அப்பாவை விட உயர்ந்தவர்" என்று சொல்வதற்கு ஒப்பானது. இந்த உலகம் முழுவதும் பெரும்பாலான மக்கள், மனவளர்ச்சியில் அந்தக் குழந்தைப் பருவத்திலேயே தடைப்பட்டுப்போயுள்ளதாக நான் நினைக்கிறேன்-பொம்மைகள் மட்டுமே மாறியுள்ளன.

"என் நாடு உன் நாட்டை விட சிறந்தது" என்று சிலர் சொல்லலாம். ஒரு கிறீஸ்தவர், பைபிள் நூலே உண்மையானது என்பர். இந்து ஒருவர், வேதங்கள் உண்மையானவை- அவை மிகவும் புராதனமாவை என்பர். முகமத்தியர்கள், குரான்தான் இறைவனின் அறுதியான வார்த்தை என்பார்கள். மக்கள் எதற்காவது புகழாரம் சூட்டுவது, அதன் மேன்மை யைப் போற்ற அல்ல! அவர்கள் அந்தக் குறிப்பிட்ட பாரம்பரியத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால்தான். காலங்காலமாய் இயக்கிவரும் "உணர்வு நிலை" அனைத்திலும் ஒருவர் பெருமை கொண்டு, இது அனைத்தும் என்னைச் சேர்ந்தது என்று உணர்ந்தால் அதுதான் முதிர்ச்சி. இவை எல்லாமே என்னுடைய செல்வம். ஏனெனில்- நான் தெய்வத்தைச் சேர்ந்தவன்.



காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்றாற் போல் கடவுள் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு விதமாக ஞானத்தைக் கொடுத்தார். இப்பிரபஞ்சம் முழுமையையும் அறிந்த ஒருவர் சொல்லக்கூடும்- "அழகான மலர்கள் அனைத்தும் என் தோட்டத்திலிருந்து வந்தவை" என்று மனிதனின் முழு பரிணாம வளர்ச்சியும் யாரோ ஒருவராக இருந்து, யாருமாக இல்லாத நிலைக்கு மாறி -பின் எல்லாருமாக மாறுவதுதான். சிறு குழந்தைகளிடம் இந்த நிர்மலமும், ஒற்றுமை உணர்வும், சேர்ந்த தன்மையும் இருப்பதைக் கவனித்திருக்கிறீர்களா? நாம் வளர வளர அந்த நிர்மலத்தை இழந்து தந்திரமானவர்களாகி விட்டோம். அறிவிலியின் கள்ளங்கபட மற்ற தன் மைக்கும், அறிவாளியின் தந்திரத்திற்கும் எந்தப்பயனும்-மதிப்பும்-இல்லை.

புத்திசாலித்தனமும் நிர்மலமும் கலந்த அரிய கலவையே ஞானம்- வெளியிடத்தக்க வார்த்தைகள் அறிந்தும் மௌனமாயிருத்தல். அந்த நிலையில் மனம் முழுவதுமாக நிகழ் வினாடியில் இருக்கிறது. தேவையானவை அனைத்தும் இயல்பான உடனடி நிகழ்வாக, உனக்குக் காட்டப்படும். நீ அப்படியே உட்கார்- அந்தப்பாடல், கீதம் உன் மூலம்

**பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர்**

பாய்ந்து வரும்.

ஞானம் பெறுதல் என்பது நம் ஆன்மாவில் ஆழ்ந்து செல்வது. நம்முடைய ஆன்மாவின் சூழ் நிலைக்குச் சென்று அங்கிருந்து நம் வாழ்க்கையை வாழ்வதாகும்

(தொடரும்)

# உங்கள் கைரேகை பலன்கள்

**04**

ஒருவருக்கு மணிக்கட்டுக்கு மேலே உள்ள மூன்றாம் பாகம் கம்பீரமாயிருந்தால், அவரது வாழ்க்கை விநோதமானதாயிருக்கும். அவர் அழகை விரும்புபவர். ஆனால், அழகற்றதையே அழகென ஏற்றுக் கொள்ளுபவர். அவருக்குப் பொருள் கிடைத்தாலும் அதைச் சௌகரியமான வழியில் செலவிடத் தெரியாது. அதற் குக்காரணம் அவரின் மூளை சரியாய் வேலை செய்யாதிருப்பதே. அவருக்கு இருப்பது ஸ்தூல புத்தியே என்றாலும், அது தகாதவழிலேயே செல்லும். இப்படிப் பட்டவர்கள் கைரேகை பார்த்துக் கொள்வதும் அபூர்வமே.

ஒருவருக்கு கை முருதுவாயிருந்தால், அவருக்கு மூவுலகையும் ஆளும் சக்தி வாய்ந்திருக்கும். மாதகர்களின் தோற்றமும் நடையுடை பாவனைகளும் அவர்கள் எத்தகைய சக்தியையுடையவர் கள்என்பதை ஊகித்தறிந்து கொள்ளப் பயன்படும் மனோ இராஜியத்தில் தேர்ந்த மேதாவிகள் இவ்வுலகை மதிப்பதில்லை. அவர்கள் மனம் எவ்வளவு ஜெயப்பிரதாபத்தைக் கொடுப்பதாயினும் பொருள் தருவதில்லை. இதற்கு அந்தந்த உலகங்களின் ஆட்சியே காரணமாகும். ஒருவருக்கு நல்ல பகுத்தறிவும், உலக அனுபவமும் ஒன்று சேர்ந்திருக்க வேண்டுமானால், அவருக்கு இது காறும் கூறிவந்த மூவுலகும் ஒன்றுக் கொன்று ஆதாரமாய் அமைந்திருக்க வேண்டும். அவ்விதம் அமைந்தபோதும் கையின் இரண்டாம் பாகமே மேம்பாடு டையதாயிருக்க வேண்டும். அவருக்கு மானசீகமின்றி பிரவிருத்தியில்லையாகையால் அது, அவருக்கு ஒரு பெரிய சாதனமாகும். அவருக்கு முதல் இரண்டு பாகமும் ஒத்திருந்தால் மனோபலத் தினால் பொருளும் நல்ல ஞானமும் உண்டாகும். பன்னிரண்டு பாகங்களும் ஒத்திருந்தால் ஊழியத்தின் மூலம் பொருள்சேரும். முதல் பாகமும் கடைசி பாகமும் ஒத்திருந்தால் அவரது எண் ணங்கள் ஆகாசக் கோட்டையாகவே முடியும். பிரவிருத்தியின் புத்தி செல்லாது. அதனால் அவருக்கு இவ்விரண்டும் பலன் கொடாது. எனவே, ஆதரவாயுள்ள நடுப்பாகமே சிலாகிக்கத் தக்கது.

### கையில் கிரக நிலைகளும் ரேகைக் குறிகளும்

ஏழு கிரகமேடுகளில் நான்கு, சுட்டி விரல்முதல் சுண்டிவிரல்வரை, அவ்விரல்களின் அடியில் அமைந் திருக்கின்றன, இந்நான்கில் இரண்டு கிரக மேடுகள், உள்ளங்கையின் இரு பாகங்களிலும் செங்குத்தாயிருக் கின்றன. கட்டை விரலின் மூன்றாவது அங்குலாஸ்தியே சுக்கிரமேடாய் உள்ளங்கைவரை பரவியிருக்கிறது. இதற்கு அடுத்தாற் போல் இருப்பது சந்திர மேடாகும். செவ்வாய் மேடு மட்டும் இருபாகங்களாய், உள்ளங்கைக்கு மேலே இருதய ரேகையும் ஆயுள்ரேகையும் உற்பத்தியாகும் இடத்தில் அமைந்திருக்கிறது.

ஒருவர் கையைப்பார்க்க ஆரம்பித்ததும் முதலில் அக்கையில் கிரகங்களெல்லாம் தத்தமக்குரிய இடங்களில் சரியாய் அமைந்திருக்கிறனவா என்று கவனிக்க வேண்டும். சிலர் கைகளில் கிரகங்கள் தாங்களிருக்கவேண்டிய இடங்களை விட்டுப் பெயர்ந்து இருக்கக் காணப்படும்.

புதிதாய் ரேகை பார்க்கப் பழகுவோர்க்கு கிரகநிலைகளை அறிந்து கொள்வது சற்று சிரமாக இருக்கும். அவர்கள் பலரின் கைகளைப் பார்த்துப் பழகி நிதானித்து அவைகளை அறிய வேண்டும். சிலர் கைகளில் கிரக ஆதிக்கம் புலப்படாததும் இருக்கும். இப்படிப்பட்ட கைகளிலுள்ள கிரக ஆதிக்கத்தைப் பல கைகளைப் பார்த்து பழகிய அனுபவத்தைக் கொண்டே அறியவேண்டும். ஒரு கையிலுள்ள கிரகநிலை, அக்கையை உடையோர் எத்தகையர் என்பதை தெரிவிப்பதாகும். ஒவ்வொரு விரலுக்கு அடியிலும் ஒரு கிரகமிருக்கிறது. தேகதத்துவ சாஸ்த்திரப்படி அக்கிரகங்கள் ஒவ்வொன்றும் ஒருசிறு பந்துபோலிருக்கும். அல்லது தட்டையாய்ச் சதைப்பற்றுடையதாயிருக்கும். இதனால் கிரகமேடுகள் உயர்ந்து தோன்றும். கையைப்பார்க்க ஆரம்பித்ததும், முதலாவது அதில் ஆதிக்க அல்லது ஆட்சிக்கிரகம் எது என ஆராய்ந்து அறியவேண்டும். கிரகங்களால் நன்மையுமுண்டு. தீமையுமுண்டு. சிலகைகளில் இருகிரகங்கள் ஒரே மாதிரி அமைந்திருக்கும். சிலகிரகங்கள் அமைந்திராது. சிலகைகளில் கிரகநிலை அளவுக்கு மிஞ்சிய நிலையிலும் இருக்கும். கிரகம் ஓரளவுக்குட்பட்டு



கிரகம் என்பது முக்கோண சந்தி

அமைந்திருந்தால், அது நல்ல பலனைத் தருவதைக் குறிக்கும். கிரக அமைப்பே இல்லாவிடில் அது, விரோதமான பலன்களைக் குறிப்பாய்த் தெரிவிப்பதாகும். ஒருவர் கையில் கிரகநிலை அளவுக்கு மிஞ்சி இருந்தால் அவருடைய விவகாரங்கள் எல்லாம் (சுகத்திலும் துக்கத்திலும்) அதீதப் பட்டிருக்கும். அதாவது அவர் நல்லோருக்கு நல்லவராகவும் தீயோருக்கு தீயவராயுமிருப்பர். ஒவ்வொரு கிரக மேட்டிலும் பலாபலன்களைக் குறிப்பிட்டுக்காட்டவே ரேகைகள் அமைகின்றன. இந்த ரேகைக்குறிகள் சுகத்தையும் கஷ்டத்தையும் அளந்து காட்டுவனவாகும்.

சிலர் கைகளில் கிரகங்கள் இடம் விட்டுப் புரண்டிருக்கும். அதாவது அவைகள் இரண்டு விரல்களுக்கும் மத்தியிலோ அல்லது அடுத்திருக்கும் கிரகத்தைச் சார்ந்தோ அமைந்திருக்கும். உதாரணமாக ஆள்காட்டி விரலை எடுத்துக் கொள்வோம், அந்த விரலுக்கடியிலுள்ள மேட்டில் குரு கிரகம் அமையவேண்டும். ஆனால் அக்குரு கிரகம் சிலர்கைகளில் சனியோடு சார்ந்திருக்கும். இப்படியே சனியும் குருகிரக மேட்டைச் சார்ந்திருக்கும் படியும் அமையும் மங்கலான பார்வையை யுடையவர்கள் பூதக்கண்ணாடி கொண்டு இவைகளைப்பார்ப்பது நல்லது. கிரக மேடைகளில் ஏற்படும் ரேகைகள் மெல்லியவைகளாய் இருக்கும். அவைகளின் சந்திப்பை முக்கியமாய் கவனிக்க வேண்டும். படத்தில் காணும் முக்கோணச் சந்திப்பைக் கவனியுங்கள். விரலுக்கு நோரே அதன் அடியில் இம் மாதிரி யான சந்திப்பு அமைந்திருக்க வேண்டும். ஒருவர் கையில் கிரக மேடு உப்பலாய், சதைப்பிடித்துத் தொடுவதற்கு மிகவும்

**சக்தி**

மிருதுவா யிருந்தால், அந்தக்கிரகத்தின் பலனை அவர் உபயோகப்படுத்திக் கொள்ள வில்லை. என்பதை அது அறிவிக்கும்.

(தொடரும்)


# கட்டுமானத்தை அழிப்பது சுலபம் அதை அமைப்பது மிக்க கடினம்

## இதையே நாம் செய்கிறோம் என்கிறார் பசில்



அழிந்து போன இக்குளத்தை மீள கட்டியமைத்ததனூடாக இம்மக்களின் வாழ்வாதாரம் மேம்படவுள்ளதென்ற மகிழ்வுடன் நான் உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன் என அமைச்சர் பசில்ராஜபக்ஷ் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கல்மடு குளத்தை புனரமைக்கப்பட்டு விவசாய நட வடிக்கைகளுக்கு நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரி



வித்தார்.அவர்மேலும்தெரிவிக்கையில்,

அழிந்து போன இக்குளத்தை மீள கட்டியமைத்ததனூடாக இம்மக்களின் வாழ்வாதாரம் மீளவும் மேம்படுத்தப்பட்டுள்ளதென்ற மகிழ்வுடன் நான் இன்று உங்களை சந்திக்கிறேன்.இந்த நாட்டில் இன, மத, பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் சென்று ஒற்றுமையான தேசத்தை கட்டியெழுப்ப வேண்டுமென்பதே ஜனாதிபதியின் நோக்கமாகும்.

இந்நோக்கிற்கமைவாகவே அவர் நாட்டின் அனைத்து மக்களையும் தனது பிள்ளைகள் போல எண்ணி செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறார். இப்பிரதேசத்திலே அனைத்து கட்டுமானங்களும் இன்று மீளமைக்கப்பட்டு வருகின்றன. ஒரு கட்டுமானத்தை சிதைப்பதென்பது மிக இலகுவான காரியம். ஆனால்,அதை அமைப்பதென்பது மிகக் கடினம். அத்தகைய பணியைத் தான் இன்று நாம் முன்னெடுத்து வருகின்றோம். நீண்ட கால சிந்தனையுடனும் எதிர்கால சந்ததியினரின் நலனையும் கருத்திற் கொண்டு மேற்கொண்டு வரும் இப்பணியை சிலர் மிக இலகுவாக உதாசீனம் செய்து வருகின்றனர்.

கடந்த காலத்தில் எமது நாட்டில் இரண்டு தலைமுறையினர் நிம்மதியற்ற வாழ்விற்குள் தள்ளப்பட்டனர்.

எனவே, அவ்விரு தலைமுறையினரும் அனுபவிக்காத ஒரு மகிழ்வான இயல்புச் சூழலை வரும் காலத் தலைமுறையினருக்கு வழங்க வேண்டுமென்பதே ஜனாதிபதியின் குறிக்கோள். அத்தோடு வடக்கின் அபிவிருத்தியென்பது முன்பிருந்ததை விட இருமடங்கு மேலானதாக அமைய வேண்டும்மென்பதும் அவரின் நோக்கம். அதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகவே இக்குளத்தின் அபிவிருத்தி பணிகள் அமைந்துள்ளன.

அந்த வகையில் இம்மாவட்டத்தில் இரணைமடுக்குளத்திற்கு அடுத்தபடி நிலையை இன்று இக்குளம் எட்டியுள்ளது. இதேவேளை, தருமபுரம், புளியம்பொக்கணை ஆகிய பகுதிகளுக்கும் நீர் விநியோகத்தை மேற்கொள்வதற்கான நடவடிக்கை களையும் நாம் மேற்கொண்டுள்ளோம்.

இதேவேளை, இக்குளத்தின் அழிவிற்கும் இப்பிரதேசங்களின் அழிவிற்கும் ஆலோசனை வழங்கியவர்கள் இனிவரும் காலத்திலெனும் மக்களின் ஒற்றுமைக்காகவும் மேம்பாட்டுக்காகவும் உழைக்க முன்வர வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். இதேவேளை, கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு சகல வசதிகளும் கொண்ட நிரந்தர கட்டடத்திற்கான அடிக்கல் ஞாயிற்றுக்கிழமை நாட்டப்பட்டது.

கிளிநாச்சி புகையிரத நிலையம் அமையவுள்ள பிரதேசத்திற்கு முன்பாகவுள்ள திருநகர் வீதியில் சுமார் 600 மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் மூன்று கட்டங்களாக மாவட்ட செயலகம் நிர்மாணிக்கப்படவுள்ளது. இதற்கமைய முதற்கட்ட பணிகளுக்காக சுமார் 165 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மூன்று ஆண்டுகளுக்கு பின்னர் புனரமைக்கப்பட்ட கிளிநொச்சி கல்மடுக்குளம் அமைச்சர் பஷில் ராஜபக்ஷவினால் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்க ப்பட்டது. 2 ஆயிரம் குளங்களைபுனரமைப்பு செய்யும் திட்டத்தின் கீழ் சுமார் 800 மில்லியன் ரூபாய் செலவில் இந்த குளம் புனரமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வுகளில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில்ராஜபக்ஷ, பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கைத்தொழில் மற்றும் முதலீட்டு அமைச்சர் றிசாத் பதியுதீன், வடமாகாண ஆளுநர் ஜி.ஏ. சந்திரசிறி, நாடாளுமன்ற குழுக்களின் பிரதி தலைவர் எம். சந்திரகுமார் மற்றும் கிளிநொச்சி மாவட்ட செயலாளர் ரூபவதி கேதீஸ்வரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ)

## இந்திய மீனவர்களை தாக்கவில்லை

### கடற்படை தெரிவிப்பு

இந்திய மீனவர்கள் தாக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டினை இலங்கை கடற்படை மறுத்துள்ளது.

கடந்த 9ஆம் திகதி நடைபெற்றதாக கூறப்படும் இச்சம்பவம் தொடர்பில் தாம் விசாரணை மேற்கொண்டதாகவும் அத்தகைய தாக்குதல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லையெனவும் இலங்கை கடற்படை தெரிவிக்கின்றது.

இச்சம்பவம் தொடர்பில் பல இந்திய ஊடகங்களில் செய்திகள் வெளியாகிய போதிலும் அவை ஆதாரமற்றவை எனக் கடற்படை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்தகைய குற்றச்சாட்டுக்கள் இந்திய மற்றும் இலங்கை இடையிலான இராஜதந்திர உறவுகளைப் பாதிக்குமென இலங்கைக் கடற்படை சுட்டிக்காட்டியள்ளது.

மேலும்இந்தியமீனவர்களுக்குஇலங்கைக் கடற்படை பல்வேறு சந்தர்ப்பங்களில் மனிதாபிமான ரீதியில் உதவிகளை மேற்கொண்டுள்ளதுடன் எதிர்காலத்திலும் இத்தகைய உதவிகளை மேற்கொள்ளத் தயாராகவுள்ளதாகவும் கடற்படை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.(அ-2)

## உல்லாசப் பயணத்துறை மூலம் தேசிய வருமானத்தைபெற திட்டம்

தெற்காசியநாடுகளை விட இலங்கையில் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகளின் வருகையும் நாட்டின் பொருளாதாரமும் வளர்ச்சியடைந்து வருகின்றன. இதற்கமைய வெளிநாட்டு உல்லாசப் பயணத்துறை மூலம் நாட்டின் தேசிய வருமானத்திற்கு அதிகளவு பங்களிப்பை வழங்கும் வகையில் விசேட வேலைத்திட்டமொன்றை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தர நிர்ணய பிரிவின் பணிப்பாளர் திருமதி மாலனி கனேகொட தெரிவித்தார்.

இலங்கை சுற்றுலா கைத்தொழில் சம்மேளனத்தின் வேண்டுதலின் பேரில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையால் கிழக்கில் நடத்தப்பட்ட முதலாவது நடமாடும் சேவை பொத்துவில் அறுகம்பை ரைஸ்டார் ஹோட்டலில் பிரதேச சபையின் தவிசாளர் எம்.எஸ். ஏ. வாஸித்தலைமையில் நடைபெற்றது.

இங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வெளிநாட்டு உல்லாசப் பயணத்துறை மூலம் மேலும் அதிக வருமானத்தை பெறும் வகையில் முதலீட்டு சபையினூடாக 50 ஆயிரம் ஹோட்டல் அறைகளை நிர்மாணிப்பதற்கான வேலை த்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை, 2016 ஆம் ஆண்டில் சுற்றுலாத்துறை பிரயாணிகளின் வருகை 25 இலட்சமாக எதிர்பார்க்கப்படுவதுடன் இதன் மூலம் இரண்டு பில்லியன் அமெரிக்க டொலர் வருமானத்தை ஈட்ட முடியும்.

மேலும் அடுத்த ஐந்து வருடங்களில் வெளிநாட்டு முதலீடாக மூன்று பில்லியன் டொலர் எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் நேரடியாக ஐந்து இலட்சம் பேருக்கு தொழில் வாய்ப்பும் வழங்குவதற்கான சந்தர்ப்பமும் ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, உல்லாசப் பயணத்துறையின் சொர்க்கபுரியாக திகழும் அறுகம்பை சர்வதேச அலையாடல் (கடல் அலையில் சறுக்கி விளையாடல்) போட்டிக்கு பேர் பெற்ற இடமாக திகழ்கின்றது. இங்கு தற்போது சுமுகமான நிலை ஏற்பட்டுள்ளதால் அதிகளவிலான சுற்றுலாத்துறை பிரயாணிகள் வருவதற்கான சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

எனவே, இங்கு சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையிலான வசதி வாய்ப்புக்கள் ஏற்படுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது. அந்த வகையில் இலங்கை சுற்றுலா கைத்தொழில் சம்மேளனத்தின் வேண்டுதலின் பேரில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையால் கிழக்கில் முதலாவது நடமாடும் சேவை நடத்தப்படுகின்றது.

இதற்கமைய இப்பகுதி இதுகால வரை பதிவு செய்யப்படாது இயங்கி வந்த 60 ஹோட்டல்கள் பதிவு செய்யப்பட்டதுடன் சுற்றுலாத்துறையை செயற்றிறன் மிக்க இலாபமீட்டும் தொழிலாக மாற்றுவதற்கான ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

மேலும் உல்லாசப் பயணிகளை கவரும் வகையில் உள்ளூர் உற்பத்திகளைக் கொண்டு ருசியானதும் போசாக்குமிக்கதுமான உணவு வகைகளை தயாரிக்கும் முறைகள் பற்றி விசேட சமையற்கலை நிபுணரினால் பயிற்சியும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## எரிபொருள் நிவாரணம் வழங்குமாறு இலங்கை எதனையும் கோரவில்லை

### அமெரிக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

எரிபொருள் நிவாரணங்களை வழங்குமாறு இலங்கை அரசாங்கம் இதுவரையில் கோரவில்லை எனவும் ஈரான் மீது அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடையை அடிப்படையாகக் கொண்டு இலங்கை நிவாரணங்கள் எதனையும் கோரவில்லை என அமெரிக்கத் தூதரக உயரதிகாரி எட்வர்ட் ஹெர்த்னீ தெரிவித்துள்ளார். எரிபொருள் இறக்குமதி தொடர்பான நிவாரணங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் ஈரானிடமிருந்து இறக்குமதி செய்யும் அளவு கனிசமாகக் குறைக்கப்பட வேண்டுமெனவும் ஈரான் மீது பொருளாதாரத்தடை விதித்த காரணத்தினால் ஏதேனும் சலுகைகளை வழங்க வேண்டுமென அமெரிக்காவிடம் இலங்கை இதுவரையில் உத்தியோகபூர்வமாக கோரவில்லை என சுட்டிக்காட்டியுள்ளார்.

எரிபொருள் இறக்குமதி தொடர்பில் இலங்கை திறைசேரி அதிகாரிகளுடன் அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் ஏற்கனவே பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் இலங்கை தற்போது ஈரானிடமிருந்து 93 வீதமான அளவு மசகு எண்ணெயை இறக்குமதி செய்வதாகவும் பத்து வீத இறக்குமதி குறைப்பு அமெரிக்க சலுகைகளைப் பெற்றுக் கொள்ள ஏதுவாக அமையுமா என்பது சந்தேகமே எனவும் சுட்டிக்காட்டி யுள்ளார். (அ-7)

# நீரிழிவு நோய்க்கான காரணங்கள்

**எப்படிப்பட்ட மனிதர்களுக்கு நீரிழிவு நோய் வருகிறது?**

பின்வரும் மனிதர்களுக்கு நீரிழிவு நோய் வருவதற்கான வாய்ப்புகள் அதிகமாகும்.

- வயதானவர்கள், உடல் பருத்தவர்கள், இருந்த இடத்திலேயே இருப்பவர்கள்
- உயர் இரத்த அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள், கொழுப்பு சத்து அதிகம் உடையவர்கள்
- நீரிழிவு நோயாளிகளின் குடும்பத்தில் பிறந்தவர்கள்
- கருவுற்ற காலத்தில் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்ட பெண்கள்
- காயங்கள் ஆறுவதற்கு நீண்ட நாட்கள் எடுப்பவர்கள், சயரோகம் உடையவர்கள்
- இளம் வயதிலேயே கண்புரை நோய்க்கு ஆளானவர்கள்
- தங்கள் உயரத்திற்கு பொருத்தமான உடல் எடையை விட 20% அதிக எடை உடையவர்கள்

**நீரிழிவு பரம்பரை நோயா?**

ஆம். இது பரம்பரை நோய் தான். பொதுவாக 40-50 வயதில் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்ப வரலாற்றை உற்று நோக்கினால் அவர்களின் குடும்பத்தில் நீரிழிவு நோய் இருப்பது தெரிய வரும். இந்நோய் பெற்றோரிடமிருந்து குழந்தைகளுக்கும் தாய்வழி மற்றும் தந்தை வழி தாத்தா, பாட்டியிடமிருந்து பெற்றோர்களுக்கும் வருகிறது. தாய், தந்தை இருவருக்கும் நீரிழிவு நோய் இருந்தால் குழந்தைகளுக்கு ஏதேனும் ஓர் வயதில் நீரிழிவு நோய் கட்டாயம் வரும். தாய் அல்லது தந்தை இருவரில் யாரேனும் ஒருவர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டிருந்தால் குழந்தைகளுக்கு பெரும்பாலும் நீரிழிவு நோய் வருவதற்கு 50 % வாய்ப்பு உண்டு. இதிலிருந்து நீரிழிவு ஒரு பரம்பரை நோய் என்றே தெரியவருகிறது. எனினும் பெற்றோர்களுக்கு இருந்தால் குழந்தைகளுக்கும் ஏன் இந்த நோய் வரவேண்டும் என்பதற்காக உண்மையான காரணத்தை மருத்துவர்கள் இது வரை அறியவில்லை.

**சுகமான வாழ்க்கை வாழ்பவர்களுக்கும் நீரிழிவு நோய்க்கும் ஏதேனும் தொடர்புண்டா?**

உடலிற்கு அதிகமான வேலை கொடுக்காதவர்களுக்கும் இருந்த இடத்தில் இருந்தே பணி புரிபவர்களுக்கும் கடுமையாக உழைப்பவர்களை விட நீரிழிவு நோய் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

உடல் உழைப்பு, உடற்பயிற்சி, விளையாட்டு,யோகா போன்ற செயல்களினால் மனித உடல் தொடர்ந்து முறையாகவும் ஒழுங்காகவும் செயற்படுகின்றது.

இதற்கு மாறாக கொழுப்புச் சத்து உடையவர் உடல் உழைப்பு இல்லாதிருத்தல் அவரது உடல் எடை அதிகரித்து அவருக்கு நீரிழிவு நோய் வருவதற்கான வாய்ப்பு அதிகமாகும்.

கடினமாக உழைப்பதினால் ஒருவன் தனது இரத்தத்திலுள்ள சீனியை அதிகம் பயன்படுத்துகிறான். இதன் காரணமாக கணையத்தின் பணிச்சுமை குறைக்கப்படுகிறது. எனவே, ஒருவன் தனக்கு நீரிழிவு நோய் வரக்கூடாது என விரும்பினால் அவன் தன்னால் முடிந்தளவு தனது உடலிற்கு வேலை கொடுக்க வேண்டும்.

**தொற்று நோய் கிருமிகளினால் நீரிழிவு நோய் வருமா?**

சில சந்தர்ப்பங்களில்தொற்று நோய் கிருமிகளும் நீரிழிவு நோய் வருவதற்கான காரணங்களில் ஒன்றாக காணப்படுகின்றன. ரினோ (Rhino) தொற்று நோய் கிருமிகள் தாக்கத்தினால் அவை கணையத்திலுள்ள பீட்டா (Beta)செல்களை அழித்து விடுகின்றன. தொற்று நோய் கிருமிகளை எதிர்ப்பதற்காகவே உற்பத்தியாகும்நோய் எதிர்ப்புப் பொருட்கள் (Antibodies)கணையத்தை தாக்குகின்றன. இதன் காரணமாக பீட்டா செல்கள் பாதிப்புக்குள்ளாகின்றன. விளைவு இன்சுலின் சுரப்பது குறைகிறது அல்லது முற்றிலும் நின்று போகிறது. இதனால் ஒருவருக்கு நீரிழிவு நோய் வருகிறது. இதனால் பொதுவாக வகை I நீரிழிவு நோயை குழந்தைகளிடம் காணலாம்.

**சில வகையான மருந்துகளை பயன்படுத்துவதால் நீரிழிவு நோய் வருமா?**

சில குறிப்பிட்ட வகை மருந்துகள் கணையத்தின் செயற்பாட்டிற்கு ஊறுவிளைவிக்கின்றன. சிறுநீர் கழிவினை தூண்டும் மருந்துகள், உயர் இரத்த அழுத்தத்திற்கு பயன்படுத்தப்படும் ஸ்டீராய்டுகள், சரும வியாதிகளுக்கான மருந்துகள் மற்றும் கருத்தடை மருந்து மாத்திரைகள் போன்றவற்றை நீண்ட காலம் பயன்படுத்தி வந்தால் இவை கணையத்தின் செயற்பாட்டிற்கு ஊறுவிளைவிக்கும். இதன் காரணமாக இன்சுலின் உற்பத்தி குறையும். நீரிழிவு நோய் வருவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கும்.

**சில நோய்களினால் நீரிழிவு நோய் வருமா?**

ஆம். சில வகையான நோய்களினால் நீரிழிவு நோய் வரும். அவை இதயநோய்கள், கணையவீக்கம் போன்றவை ஆகும். இந்நோய்களினால் ஒருவருக்கு நீரிழிவு நோய் வருவதற்கான வாய்ப்பு அதிகமாகும்.

**புகைபிடித்தல், மது அருந்துதல் இவற்றிற்கும் நீரிழிவு நோய்க்கும் தொடர்புண்டா?**

புகைபிடித்தல், மது அருந்துதல் இவற்றிற்கும் நீரிழிவு நோய்க்கும் நெருங்கிய தொடர்புண்டு. நாளொன்றுக்கு20 சிகரெட்களுக்கு மேல் புகைப்பவர்களுக்கு 40 வீதத்தினருக்கு மேல் நீரிழிவு நோய் வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. இதுபோன்று தான் மது அருந்துபவர்களுக்கும் நீரிழிவு நோய் வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது.

**நீரிழிவு நோய்க்கு மனஉளைச்சலும் ஒரு காரணமா?**

நீரழிவு நோய் வருவதற்கான வாய்ப்புள்ளவர்கள் மனஉளைச்சலுக்கு ஆளானால் அவர்களிடம் நீரிழிவு நோய் வருவதற்கான அறிகுறிகள் உடனே தோன்றி விடும். அதாவது ஒரு சில வருடங்கள் கழித்து வரவேண்டிய நீரிழிவு நோய் மனஉளைச்சல்காரர்களுக்கு விரைவில் வந்து விடும்.

**ஒரு சிலரின் பணிகளுக்கும் நீரிழிவு நோய்க்கும் தொடர்புண்டா?**

ஆம். ஒருவர் செய்யும் பணிக்கும் நீரிழிவு நோய்க்கும் நேரடி தொடர்புண்டு. உடல் உழைப்பில்லாத பணி செய்பவர்களுக்கு நீரிழிவு நோய் வருவதற்கான வாய்ப்பு அதிகமாகும். உதாரணமாக :- அலுவலர்கள், ஆசிரியர்கள், கடைக்காரர்கள், வழக்கறிஞர்கள் போன்றவர்களை கூறலாம். இவர்கள் பெரும்பாலான நேரம் அமர்ந்தே பணிபுரிகின்றனர் .இதன் காரணமாக உடலிலுள்ள சீனியின் வளர்சிதை மாற்றம் (metabolisn) பாதிக்கப்படுகிறது.




01

இதற்கு மாறாக உடல் உழைப்பு தேவைப்படும் கூலியாட்கள் ,விளையாட்டு வீரர்கள், விவசாயிகள் போன்றவர்களுக்கு நீரிழிவு நோய் வருவதற்கான வாய்ப்பு இருப்பதில்லை.

## டாக்டர்.A.K.ஜிங்கான்

**மனஉளைச்சலின் காரணமாக நீரிழிவு நோய்க்கான அறிகுறிகள் தோன்றுமா?**

ஒருவருக்கு நீரிழிவு நோய் இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். ஆனால், அவருக்கு அது தெரியாது என்றால் பதற்றமான சூழ்நிலைகள் அவரிடம் நீரிழிவு நோய்க்கான அறிகுறிகளை தோற்றுவிக்கும்.

வீட் டில் ஒரு துக்கம் அல்லது துயர சம்பவம் நிகழ்ந்தால் ஒருவரிடம் நீரிழிவு நோய்க்கான அறிகுறிகள் தோன்றும் காரணம் மன உளைச்சல் தான்.

**சாதாரண மனிதனிடம் எந்த சூழ்நிலைகளின் காரணமாக நீரிழிவு நோய் உண்டாகிறது?**

நீரிழிவு நோய் ஒருபரம்பரை வியாதியாகும். அதனால் ஒரே குடும்பத்தை சேர்ந்த பலருக்கு அது வரலாம். கடந்த சில ஆண்டுகளாக நீரிழிவு நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது.

இன்றைய பரபரப்பான உலகில் உடற்பயிற்சி செய்வதற்கெல்லாம் ஒருவருக்கு நேரம் கிடையாது.


வேகமாக மாறி வரும்,உடல் உழைப்பில்லாத சுகமான வாழ்க்கை, உணவுப் பழக்கம், சுற்றுச்சூழல் மாசு முதலியவற்றின் காரணமாக சாதாரண மனிதனுக்கும் நீரிழிவு நோய் வருகின்றது.

உடல் பருத்தவர்கள், உடல் எடை அதிகமுள்ளவர்களுக்கு நீரிழிவு நோய் வருவதற்கான வாய்ப்பு அதிகமாகும்.

# புற்றுநோய்க்கு புதிய சிகிச்சை

**புற்றுநோய் என்றால் மரணம்தான் என்கின்ற நிலைமை மாறிவிட்டதா டாக்டர்?**

பெரும்பாலான மனிதர்கள் அப்படித் தான் நினைக்கிறார்கள். புற்றுநோய் என்றால் மரணத்தைத் தழுவ வேண்டியதுதான் என்றிருந்த நிலைமை எவ்வளவோ இப்போது மாறிவிட்டது. இன்றைய மருத்துவ விஞ்ஞானம் வளர்ந்த நிலையும் மக்களிடையே ஏற்பட்டிருக்கின்ற விழிப்புணர்ச்சியும் புற்றுநோயாளிகள் மரணத்திலிருந்து மீளலாம் என்கின்ற நிலையை அடைந்துள்ளது. இதில் ஒரே ஒரு விடயம் என்னவெனில், புற்றுநோயின் ஆரம்ப நிலையிலேயே தெரிய வந்தால் முற்றிலும் பூரணமாகக் குணப்படுத்திவிடலாம் என்பதுதான்.





**புற்றுநோயை எப்படிக் கண்டறிகிறீர்கள்?**

புற்றுநோயை ஸ்கிரீனிங் டெஸ்ட் என்கின்ற ஒரு நான்கைந்து சோதனைகளை கொண்டுதான் உறுதி செய்கிறோம். இந்த சோதனைகளை ஆணா, பெண்ணா, வயது மற்றும் வந்திருக்கும் நோயின் நிலைமை பொறுத்து ஆளுக்கு ஆள் மாறுபடும். பெண்ணாக இருந்தால் அடிவயிற்றில் அல்ட்ரா சவுண்டு சோதனை, பிறப்புறுப்பில் பாப்ஸ் மியர் டெஸ்ட், மார்பகத்திற்கு மேமோகிராம் டெஸ்ட், மார்பக எக்ஸ்ரே, இரத்த சோதனையும் செய்யப்படும். ஆண்களாக இருந்தால் மார்பக எக்ஸ்ரே, அல்ட்ரா சவுண்ட் டெஸ்ட், புராஸ்டேட் சுரப்பி சோதனை செய்வோம். இது தவிர ஆண், பெண் யாராக இருந்தாலும் இரத்தத்தில் உள்ள டியூமர் மார்க்கர் சோதனையும் Colonoscopy எனும் சாதனத்தில் சோதனையும் செய்து புற்றுநோயை ஆண்டுக்கு ஒருமுறை முப்பது வயதிற்கு மேற்பட்டவர்கள் செய்து கொள்வது புற்றுநோயை பற்றிய விழிப்புணர்ச்சியுடன் இருக்க உதவும்.

**எந்த மாதிரியான புற்றுநோய் அதிகமாக உள்ளது? ஏன்?**

பெண்களுக்குக் கர்ப்பப்பை வாய்ப் பகுதியில் வருகிற புற்றுநோய், காது, மூக்கு, தொண்டையில் வரும் புற்றுநோய், மார்பகப் புற்றுநோய் பரவலாக உள்ளது. இதுவே ஆண்களுக்கு வயதான காலத்தில் புராஸ்டேட் சுரப்பியில் வருகிற புற்றுநோயும் ஆண், பெண் இருவருக்கும் வருகிற நுரையீரல் புற்றுநோய், வயிறு குடல் பகுதியில் வருகிற புற்றுநோயும் அதிகளவில் உள்ளது. இன்று குறிப்பாக இதுபோன்ற புற்றுநோய் அதிகரித்திருக்கக் காரணம் வாழ்க்கைமுறை மாற்றம் தான். அதிவேக வாழ்க்கை கொடுத்த அழுத்தம் காரணமாகத்தான் இதுபோன்ற நோய்கள் வருகின்றன. As is Your Life Style so is Your cancer. அதாவது நமது வாழ்க்கை முறைக்கு ஏற்ற மாதிரிதான் நமக்கு வருகிற புற்று நோயும் இருக்கும் என்பார்கள். அது முற்றிலும் நிஜயம். இது தவிர பெண்களுக்கு மார்பக மற்றும் கருப்பை புற்றுநோய் வரக் காரணம் அவர்கள் அதிக அளவில் கருத்தடை மாத்திரைகளை விழுங்குவது, காலதாமதமான திருமணம், காலதாமத கர்ப்பம் போன்றவை காரணமாகும்.




**ஒவ்வொரு உறுப்புகளில் வரும் புற்றுநோயின் அறிகுறிகள் எப்படி இருக்கும்?**

01



மார்பக புற்றுநோயை மார்பகத்தில் வலியில்லாத கட்டி, மார்பக அமைப்பில் மாற்றம், மார்பகக் காம்பில் நீர் கசிவு, மார்பகக் காம்பு உள்ளிழுத்துக் கொள்ளுதல் போன்ற அறிகுறிகளால் அறியலாம்.

கருப்பை வாய் புற்றுநோயை பிறப்புறுப்பில் இரத்தக் கசிவு, வெள்ளைப்படுதல், உடல் உறவிற்குப் பின்னர் இரத்தக் கசிவு, மெனோபாஸ்க்குப் பின்னரும் இரத்தப்போக்கு போன்ற அறிகுறிமூலம் அறியலாம்.

## டாக்டர்.எஸ்.அலெக்ஸ் ஏ.பிரசாத்,MD.,DNB.,
## சென்னை-10.

காது, மூக்கு தொண்டையில் வரும் புற்றுநோயை வாய், தொண்டைப்பகுதியில் நீண்ட நாள் வலியில்லாத, ஆறாத புண், வாய்ப்பகுதியில் வெள்ளை அல்லது சிவப்புத் தோலுரிதல், குரல் மாற்றம், உணவு விழுங்க முடியாமை போன்றவற்றால் கண்டறியலாம்.

நுரையீரல் புற்றுநோய் நிற்காத தொடர் இருமல், சளியுடன் இரத்தம் வருதல், குரல் மாற்றம், நெஞ்சுவலி, மூச்சு வாங்குதல் போன்ற அறிகுறி மூலம் வெளிப்படும்.

வயிறு, குடல் புற்றுநோய்... மலத்துடன் இரத்தக்கசிவு, மலச்சிக்கலுடன் அடிக்கடி முறையற்று மலங்கழிக்கிற நிலைமை, அஜீரணம், தீராத வயிற்றுவலி போன்ற அறிகுறிகளாக வெளிப்படும்.


(தொடரும்)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 68










காக்கசஸின் வெற்றியையும் வீரத்தையும் அத்தேச மக்களால் பலவிதத்திலும் ஆற்றப்பட்ட சேவைகள் தியாகங்களையும் வெளிப்படுத்தி நிற்கும் நினைவாலயங்கள்

மாற்றவே முடியவில்லை. மாறாக வடக்கு ஆபிரிக்காவிலிருந்து தன் விமானப்படயில் ஒருபகுதியை சோவியத்-ஜேர்மனியப் போர்முனைக்கு அனுப்பும்படி இது கட்டாயப்படுத்தப் பட்டது.

காக்கசஸின் மக்களினங்களை ருஷ்ய மக்களுக்கு எதிராக வைக்க பாஷிஸ்ட்டுகள் கொண்டிருந்த நம்பிக்கைகள் காக்கசஸிற்கான சமரில் அடியோடு தகர்ந்து வீழ்ந்தன. மாபெரும் ருஷ்ய மக்களோடும் நாட்டின் மற்ற மக்களினங்களோடும் சேர்ந்து காக்கசஸ் மக்களினத்தினர் சோஷலிச தாயகத்தை வீரத்தோடு பாதுகாத்து நின்றனர். காக்கசஸ் தேசிய இனங்களைக்கொண்டு தோற்றுவிக்கப்பட்ட 12 தேசிய யூனிட்டுகள் ட்ரான்ஸ் காக்கசஸ் சேனையில் சண்டையிட்டன என்று கூறுவதே போதுமானது. ஒரே நாட்டுப்பற்று வீச்சில் ஒன்றிணைந்த காக்கசஸ் மக்களினங்கள் எதிரியை வெற்றி கொள்வதற்குத் தேவையான எல்லாப் பொருளாயுத முன்தேவைகளையும் தோற்றுவித்தனர். காக்கசஸில் இயந்திரத் துப்பாக்கிகள், தானியங்கித் துப்பாக்கிகள், ஆயுதத்தளபாடங்கள், பீரங்கிகள் ஏன் விமானங்கள்கூட உற்பத்தி செய்யப்பட்டன. சோவியத் இராணுவத்திற்குத்தேவையான உணவுப் பொருட்களையும் இராணுவச் சீருடைகளையும் தருவதில் காக்கசஸ் மக்கள் பெரும்பங்காற்றினர். வடக்கு காக்கசஸ் பூராவும் கெரில்லாப்படை அணிகள் தோற்று விக்கப்பட்டன. ருஷ்யர்கள், உக்ரேனியர்கள், பைலோ ருஷ்யர்கள் ஜார்ஜியர்கள், ஆர்மீனியர்கள், ஒஸ்ஸேதீன், சிச்சேன், இன்கூஷ் மற்றும் கபார்தீன் இனத்தவர்கள், சோவியத் யூனியனின் இன்னும்பல மக்களினத்தவர்கள் ஆகியோர் இவற்றில் பங்கேற்றனர். கிராஸ்னதார் பிராந்தியத்தில் மட்டும் 87 கெரில்லாப் படையணிகள் இயங்கின. கரச்சாயெவ்,



கஸ்பியன்கடல்- (சற்றர்லைற்படம்)

றன. விமானப்படையுடனும் கப்பற்படையுடனும் கெரில்லா வீரர்களுடனும் நெருக்கமாக இணைந்து செயற்பட்டன. இந்தப் பன்முகப்போர் அனுபவம் பின்னால் கிரீமியா, கர்பாத்து ஆகிய இடங்களுக்காக நடந்த சமர்களிலும் 1944 இல் கருங்கடலின் வடக்கு மற்றும் மேற்குக் கரைகளை விடுவிக்கும்போதும் வெற்றிகரமாகப் பயன்படுத்தப்பட்டது.

ஹிட்லருடைய கொலைப் பாதகர்களை நியூறென்பர்க் விசாரணையில் விசாரித்தபோது முன்கூட்டியே திட்டமிடப்பட்ட வன்முறை, அரக்கத்தனம், இவற்றை வெளிநாட்டுக் கொள்கையில் சேர்த்துக்கொண்டது. பல மக்களினங்களை வேண்டுமென்றே சுட்டு அழித்தது, ஆகியவற்றிற்கான மறுக்க முடியாத நிரூபணங்கள் முன் வைக்கப்பட்டன. கிராஸ்னதார் பிராந்தியத்தில் மட்டும் பாசிச ஜேர்மனிய ஆக்கிரமிப்பாளர்கள் 61ஆயிரத்து 540 பேர்களை -முக்கியமாகப் பெண்கள், முதியோர், குழந்தைகளை சுட்டனர்.

*களையும் கடும் சிறைவாசத்திற்காக ஜேர்மனிக்கு அனுப்பினார். மக்களை நச்சுவாயுவால் கொல்லும் விசேட உபகரணங்களைக்கொண்ட வாகனங்களாகிய நச்சுவண்டிகளை ஜேர்மனியர்கள் முதன்முதலாக வடக்கு காக்கசஸில்தான் சோதித்துப் பயன்படுத்தத் தொடங்கினார்.*

### லெனின்கிராட் முற்றுகை உடைப்பு (1943ஜனவரி12-30)

ஸ்ராலின்கிராட் அருகேயும் காக்கசஸிலும் சோவியத்துருப்புகள் அடைந்த வெற்றி தென்மேற்கு மற்றும் மேற்கு திசைகளில் மட்டுமின்றி வடமேற்குத் திசையிலும் அனுகூலமான சூழ்நிலைகளைத் தோற்றுவித்தது. நமது எல்லா சேமப்படைகளையும் தெற்கே இட்டுச்சென்ற பாசிஸ்டுகளால், இங்கே தமது துருப்புகளைப் பலப்படத்த இயலவில்லை. லெனின் கிராட் நகரின் முற்றுகையை உடைக்கும் வர்யப்பு ஏற்பட்டது. இந்நடவடிக்கையை செம்பதாகை விருது பெற்ற பால்டிக் கப்பற் படையுடனும் தொலைதூர விமானப் படையுடனும் சேர்ந்து நிறை வேற்றுமாறு லெனின்கிராட் சேனைக்கும் (தளபதி ஜெனரல் கோவரவ்) கோவ்ஹல் சேனைக்கும் (தளபதி ஜெனரல் மெரெட்ஸ்கோவ்) உயர் மட்ட பிராதான படைத் தலைமையகம் கட்டளையிட்டது. ஷ்லிஸெல்புர்க்- சின்யாவின் தற்காப்பின் முகப்பின் வழியே எதிரெதிரான திசையில் தாக்குதலைத்தொடுத்து லதோகா ஏரிக்குத் தெற்கே எதிரியின் படைத்திரட்டை முறியடித்து முற்றுகை வளையத்தை உடைத்து, லெனின்கிராட் நகரை நாட்டின் மத்திய பிரதேசங்களுடன் இணைக்

# யுத்தத்தின் போக்கில் ஏற்பட்ட திருப்புமுனை

ஸ்ராலின்கிராட் அருகேயும் டோனிலும் காக்கசஸிலும் சோவியத் யூனியன் அடைந்த வெற்றிமத்திய கிழக்கிலும் மத்தியதரைக்கடற் பிரதேசத்திலும் நேசநாடுகளின் நிலையை கணிசமாகப் பலப்படுத்தியது. வடக்கு ஆபிரிக்காவில் ஜெனரல் ரோமெலின் இராணுவத்தை வெற்றிகொள்ள உதவியது. மத்திய கிழக்கில் செயற்படுவதெற்கென விஷேடமாக உருவாக்கப்பட்ட "F"என்ற விஷேட கோர்பஷை ஹிட்லர் படைத்தலைமையால் சோவியத்-ஜெர்மனியப் போர் முனையிலிருந்து இறுதிவரை இடம்

காக்கசஸில் எதிரிவிமானங்களின் குண்டு மழைக்குள் மாட்டிக் கொண்டு தப்பமுயலும் அத்தேசத்தின் அழகானமான்-துணிச்சலான படப்படிப்பாளனின் *-கிளிக்*



செர்கேஸ் சுயாட்சி பிரதேசங்களின் மலைகளில் கெரில்லாவீரர்கள் மிகப் பெரும் வீரத்தை வெளிப்படுத்தினர்.

காக்கசஸிற்கான சமரை ஸ்ராலின் கிராட் சமரிலிருந்து தனியப் பிரித்துப் பார்க்கக் கூடாது. போராட்டம் முழுவதும் காக்கசஸில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகளுடைய போக்கின் மீது ஸ்ராலின்கிராட் சமர் பெரும் செல்வாக்கு செலுத்தியது. தன் பங்கிற்கு காக்கசஸில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கைகள் ஸ்ராலின்கிராட் சமரின் ஆயுதப் போராட்டப் போக்கின்மீது மிகநல்ல செல்வாக் கைச்செலுத்தியது. பரஸ்பர தொடர்புடைய இச்சமர்கள் ஷோவியத் உயர்மட்ட படைத்தலமையால் திறமையாக வழிநடத்தப்பட்டன. காக்கசஸிற்கான சமரில் சோவியத் துருப்புகள் பல்வேறு வகையான இடங்களில் சமவெளிகள், மலையடிவாரங்கள், குன்றுகளில்-போரிடுவதில் நல்ல அனுபவத்தைப் பெற்



ஜேர்மன் நாஜிகளால் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு கொல்லப்பட்ட சோவியத் செம்படைவீரர்கள்

தூக்கிலிட்டனர். நச்சு வண்டிகளில் சாகடித்தனர். கெஸ்டப்போ சிறைகளில் சித்தரவதை செய்தனர். சுமார் 32 ஆயிரம் இளைஞர்களையும் யுவதி


கும் தரை மார்க்கங்களை புனரமைப்பதுதான் இந்நடவடிக்கையின் நோக்கமாகும்.

(தொடரும்)

# காஷ்மீர் பிரச்சினைகளும் உண்டு அமெ. விடயத்தில் யோசித்து செயற்படுங்கள்

## இந்தியாவுக்கு சம்பிக்க ஆலோசனை

**காஷ்மீர் விவகாரத்தை கொண்ட இந்தியாவானது அமெரிக்காவின் அடுத்த இலக்காக இருக்கலாம். எனவே,ஜெனீவாவில் அமெரிக்காவின் தீர்மானத்தை இந்தியா எதிர்க்கும். ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்காவின் தீர்மானம் சமர்ப்பிக்கப்படும் போது இந்தியா புத்திசாலித்தனமான தீர்மானமொன்றை மேற்கொண்டு சீனா, ரஷ்யா ஆகியவற்றுடன் இணைந்திருக்கும் என நம்புவதாக மின்சக்தி எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**



இந்து சமுத்திர பிராந்தியத்தில் தமது செல்வாக்கை நிலைநாட்டும் நோக்கத்தின் ஒரு முயற்சியாகவே இத்தீர்மானத்தை அமெரிக்கா கொண்டுவந்துள்ளதாக மேற்குலக சக்திகள் அவற்றை நாடு எதிர்கொள்வது எப்படி? எனும் தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் கூறினார்.

அவர்கள் ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் போன்று இந்த நாடு இருக்க வேண்டுமென விரும்புகிறார்கள். அபிவிருத்தியடைவதையும் வலிமையடைவதையும் தடுப்பதற்கு அவர்கள் அனைத்தையும் மேற்கொள்கிறார்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகளை யுத்தத்தில் தோற்கடித்தது ஒரு பாரிய வெற்றியாகும். அது உலக சமாதானத்தை நோக்கிய ஒரு பெரும் நகர்வாகும் என அவர் கூறினார். ஐரோப்பிய, அமெரிக்க, பிரித்தானிய தேர்தல் பிரசாரங்கள் பெரும்பாலும் பயங்கரவாத அமைப்புகளின் நிதியின் மூலம் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் குற்றம் சுமத்தினார்.

ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளு மன்றக் குழுதலைவர் வண. அதுரெலிய தேரர் உரையாற்றுகையில், வெவ்வேறு கால கட்டங்களில் உள்நாட்டு பிரச்சினைகள் நிலவிய போது இந்நாடு வெளிநாட்டவர்களின் கைகளில் வீழ்ந்தது. எனவே, நாம் அனைவரும் ஒன்றிணைந்து எந்தவொரு சவாலையும் எதிர்கொள்ளக்கூடிய தன்னிறைவான நாடாக இந்நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும் என கூறினார்.

இதற்காக அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகளினால் சந்தைப்படுத்தும் உணவு, பானங்களை தவிர்க்க வேண்டும். மற்றது எளிமையான வாழ்க்கையை பின்பற்ற வேண்டும் என அவர் கூறினார்.

மேல் மாகாண அமைச்சர் உதய கம்மன்பில உரையாற்றுகையில், உலகின் மிக கொடிய பயங்கரவாத இயக்கத்தை நாம் தோற்கடித்த நிலையில் தலிபான்களை தோற்கடிப்பதற்கு அமெரிக்காவும் அதன் சகாக்களும் இன்னும் ஆப்கானிஸ்தானில் போராடிக் கொண்டிருப்பதால் அவர்கள் எம் மீது கோபமாக இருக்கிறார்கள். (அ-2)

# இந்திய மீனவர்கள் மீதான தாக்குதல் குறித்து இலங்கையுடன் பேசுங்கள்

## இந்திய அரசு தூதரகத்திற்கு பணிப்பு

இந்திய மீனவர்கள் மீதான தாக்குதல்கள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துமாறு தூதரகத்திற்கு இந்திய அரசாங்கம் பணிப்புரை விடுத்துள்ளது.

16 இந்திய மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தியதாகவும் இராமேஸ்வரம் பிரதேசத்தை சேர்ந்த மீனவர்களே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளனர். தாக்கப்பட்ட மீனவர்கள் காயமடைந்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

தாக்குதல் சம்பவம் குறித்து இலங்கை அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துமாறு இந்திய வெளிவிவகார அமைச்சு இலங்கைக்கான இந்திய தூதரகத்திற்கு பணிப்புரை விடுத்துள்ளது.

கற்கள், குண்டாந்தடிகள் போன்றவற்றினால் இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தியதாக குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை, இந்த தாக்குதல்களை மனித உரிமை மீறலாக கருதப்பட வேண்டுமென உள்ளூர் மீனவ தலைவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். (அ-7)

# தலவில கடலில் மூழ்கிய நால்வர் மீட்பு; ஒருவர் மாயம்

(கொழும்பு)

தலவில, புனித அர்ச் அன்னம்மாள் தேவாலயத்துக்கு அருகில் கடலில் நீராடிக் கொண்டிருந்த ஐவர் கடலில் மூழ்கினர். உடனடியாக கடலில் குதித்த பலர் மூழ்கிய ஐவருள் நான்கு பேரை மீட்டனர். ஒருவர் கடலில் மூழ்கி காணாமற் போயுள்ளார்.

தலவில தேவாலய திருவிழாவில் பங்கு பற்றச் சென்றவர்களே கடலில் மூழ்கியுள்ளனர். காணாமற் போனவர் 21 வயதுடைய சுரேஷ்குமார பெர்னாண்டோ என்பவராவார்.

காணாமற் போனவரைக் கண்டு பிடிக்க கற்பிட்டி கடற்படை முகாமின் அதிகாரிகள் பெருமுயற்சி மேற்கொண்ட போதும் இது வரை அவர் கண்டுபிடிக்கப்படவில்லை. இச் சம்பவம் தொடர்பாக கற்பிட்டி பொலிஸார் தொடர் ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-2)

# நிரந்தர முகவரியில் வாக்காளர்கள் இல்லை; வாக்காளர் அட்டை வழங்குவதில் சிக்கல்

## முல்லை.பிரதி தேர்தல் ஆணையாளர் தெரிவிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று உள்ளூராட்சி மன்றங்களுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை பகிர்ந்தளிப்பதில் சிக்கல்கள் தோன்றியுள்ளதாக தேர்தல்கள் செயலகம் குறிப்பிடுகின்றது.

வாக்காளர் பெயர் பட்டியலிலுள்ள முகவரிகளில் அனேகமான வாக்காளர்கள் தற்போது தங்கியிருக்காமை இதற்கான காரணமென வன்னி மாவட்ட பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எஸ்.சுதாகரன் தெரிவித்துள்ளார்.

அவ்வாறான வாக்காளர்கள் 30 சதவீத மானவர்கள் இதுவரையில் இனங்காணப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார். இந்த குழுவினர் யாழ்ப்பாணம், வவுனியா உள்ளிட்ட சில மாவட்டங்களிலுள்ள உறவினர்களின் வீடுகளில் தற்போது தங்கியுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளதென மாவட்ட பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் கூறினார்.

இவ்வாறான நபர்கள் வாக்காளர் அட்டைகளை பெற்றுக் கொள்வதற்காக தாம் தங்கியுள்ள முகவரி உள்ள பிரதேச தபாலகங்களுக்கு சென்று அவற்றை பெற்றுக் கொள்ள வேண்டுமென அவர் குறிப்பிட்டார்.

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருவதுடன் எதிர்வரும் 17 ஆம் திகதிவரை இந்த நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளதாக வன்னி மாவட்ட பிரதித் தேர்தல்கள் ஆணையாளர் எஸ்.சுதாகரன் மேலும் சுட்டிக்காட்டினார். (அ-2)

# விரிவுரையாளருக்கு விண்ணப்பம் கோரல்


(யாழ்ப்பாணம்)

திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்.பிராந்திய நிலையத்திற்கு சட்டத்துறைக்கான ஒப்பந்த அடிப்படையிலான விரிவுரையாளர் அல்லது ஒப்பந்த அடிப்படையிலான செயற்றிட்ட உதவியாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பதவிக்கு விண்ணப்பிக்கவுள்ள விண்ணப்பதாரிகள் சுயமாக தயாரிக்கப்பட்ட முழு விபரங்கள் அடங்கிய சுய விபரக்கோவையை எதிர்வரும் 17 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னர் இணைப்பாளர், இலங்கை திறந்த பல்கலைக்கழகம், யாழ்.பிராந்திய நிலையம், பிறவுண் வீதி, கொக்குவில் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது நேரிலோ அனுப்பி வைக்குமாறும் இணைப்பாளர் அறிவித்துள்ளார். (அ)



யாழ். பல்கலைக்கழக மாணவி விஜிதா ரகுநாதனின் நிசாப்தில் வலியும் உயிர்துடிப்பும் எனும் கவிதை நூல் வெளியீட்டு விழா அண்மையில் வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொணட இ.வரதீஸ்வரன் முதற்பிரதியை வர்த்தகர் ஜெகநாதனுக்கு வழங்குவதையும் அறிமுக உரையை ஆசிரியர் த.அஜந்தகுமார் ஆற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.செல்வதீபன்)






# சிறுவர் அரங்கம்

38

# அம்புலி மாமா கதைகள்

## சுயமாக முடிவெடுக்க வேண்டும்



இலட்சுமிபுரியில் ராமன், சோமன், கரன் என்ற மூன்று நண்பர்கள் வசித்து வந்தனர். மூவரும் விவசாயிகள். அவர்களுள் ராமனும் சோமனும் புத்திசாலிகள்.

தங்களுடைய பிரச்சினைகளை தாங்களே சமாளித்துக் கொள்வார்கள். ஆனால் கரன் எந்தவொரு விடயத்திலும் தன் நண்பர்களின் அபிப்பிராயப் படியே நடப்பான்.

ஒராண்டு வயல்களில் நல்ல விளைச்சல் உண்டாயிற்று. அந்த ஆண்டு தலைநகரத்தில் நடைபெறும் வசந்தோற்சவத்தில் பங்கேற்க வேண்டுமென்ற ஆசை ராமனுக்கும் சோமனுக்கும் உண்டாயிற்று.

உடனே கரனுக்கும் அவர்களுடன் செல்ல ஆசை உண்டாயிற்று. ஆனால் நண்பர் கள் இருவரும் கரனிடம், "நீண்ட பயணம். செல்லும் வழியில் எத்தனையோ இடஞ்சல்கள் உண்டாகலாம்.

உன்னால் அவற்றை சமாளிக்க இயலாது. நீ வர வேண்டாம்!" என்று சொல்லிப் பார்த்தனர். ஆனால் கரன் தானும் வந்துதான் ஆகவேண்டு மெனப் பிடிவாதம் செய்தான். ஆக மூவருமாக தலைநகரத்தை நோக்கிப் புறப்பட்டனர்.

மூன்று நாட்கள் தொடர்ந்து பயணம்செய்த பின் ஒருகாட்டு வழியாகச் செல்ல நேர்ந்தது.

இரண்டு மலைகளுக்கிடையே 'ஒருநதி பாய்ந்தோடிக் கொண்டிருந்தது.

மூவருக்கும் அந்த நதியில் படகில் பயணம் செய்யவேண்டி வந்தது. திடீரென நதியில் வெள்ளப்பெருக்கு அதிகரித்து, படகை நதி தன்போக்கில் எங்கேயோ இழுத்துச் செல்ல ஆரம்பித்தது.

மூவரும் ஒருவரையொருவர் கெட்டியாகப் பிடித்துக் கொண்டனர். இறுதியில் படகு ஒரு தீவில் ஒதுங்கியது.

இந்த மட்டும் உயிர் தப்பிப் பிழைத்தோம் என்று மகிழ்ந்தாலும் பசி அவர்களை வாட்டி வதைத்தது.

அப்போது அத்தீவில் ஒரு பெரிய மாமரம் தென்பட, ராமன் மரத்திலேறத் தொடங்கினான்.



அப்போது மரத்திலிருந்து ஒரு பெரிய பூதம் அவர்கள் முன் குதித்தது.

"யாரடா நீங்கீள்? என்னுடைய மாமரத்தில் உங்களுக்கு என்ன வேலை?" என்று கர்ஜித்தது.

பூதத்தைக் கண்டவுடன், மூவரும் பயத்தில் ஓட, பூதம் அவர்களைக் கூப்பிட்டு, "பயப்படாதீர்கள்! நான் உங்களை ஒன்றும் செய்யமாட்டேன்! இங்கே வாருங்கள்!" என்று அழைத்தது. மூவரும் தயங்கிக்கொண்டே பூதத்தை அணுகினர்.

"நீங்கள் இத்தீவிற்கு எப்படி வந்தீர்கள்?" என்று பூதம் கேட்கவும் நண்பர்கள் தங்கள் சோகக் கதையைக் கூறினார்கள்.

அவர்களைக் கண்டு இரங்கிய பூதம் அவர்களுக்குச் சாப்பிட பல மாம்பழங்களைப் பறித்துத் தந்தது.

மூவரும் பூதத்திற்கு நன்றி கூறினர். அவர்களிடம் பூதம், "இங்கிருந்து உங்களால் எங்குமே செல்லமுடியாது.

ஆதலால் நான் உங்கள் ஒவ்வொருவருக்கும் ஒரேயொரு வரம் தருகிறேன். ஆனால் ஒரு நிபந்தனை. மூவருமே ஒரேமாதிரியான வரம் கேட்கக்கூடாது. இப்போது கேளுங்கள்!" என்றது.

உடனே ராமன், "எனக்கு என் வீடு சேர்ந்தால் போதும்!" என்றான். அடுத்தகணமே அவன் தன் வீட்டை அடைந்தான்.

"நான் தலைநகரத்திற்குச் சென்று வசந்தோற்சவம் பார்க்க விரும்புகிறேன்!" என்று சோமன் கூற, பூதம் அவனை அங்கே அனுப்பி விட்டது. கடைசியில் மிஞ்சியது கரன்தான்! ஆனால் புதிதாக இப்போது என்னவரம் கேட்பது என்றே கரனுக்குத் தோன்றவில்லை.

அவரவர்கள் தங்களுக்கு வேண்டிய வரத்தைக் கேட்டு விட்டு மறைந்து விட்டனர். குழம்பிப் போன கரன் பூதத்திடம், "என்ன வரம் கேட்பதென்றே எனக்குத் தோன்றவில்லை.

எனக்கு என் நண்பர்களைக் கலந்தாலோசிக்க வேண்டும் அவர்களை இங்கே வரவழைத்து விடு!" என்று உளறிக்கொட்ட, அடுத்தகணமே ராமனும் சோமனும் திரும்பி வந்துவிட்டனர். வரம் கொடுத்த பூதம் மறைந்து விட்டது.

ஏனைய இருவருக்கும் கரன் மீது கடுங்கோபம் ஏற்பட்டது. "இதற்காகத்தான் நீ எங்களுடன் வரவேண்டாம் என்று அப்போதே சொன்னோம்! கேட்டாயா? உன்னால் இப்போது நாங்களும் மாட்டிக்கொண்டோம்.

இனி இங்கிருந்து வீட்டிற்கு எப்படிச் செல்வது?'' என்று புலம்பித் தீர்த்தனர்.

ஆனால் பூதம் மறுபடியும் அவர்கள் முன் தோன்றியது.

கரனை நோக்கி, "என்னப்பா? நண்பர்களைக் கலந்தாலோசித்தாயா?'' என்று கேட்டது.

உடனே ஏனைய இருவரும் பூதத்தின் கால்களில் விழுந்து, "எங்களைக் கலந்தாலோசிக்காமல் எந்தக்காரியத்திலும் இவனால் சுயமாக முடிவு எடுக்கமுடியாது.

இவனால் நாங்களும் இப்போது சிக்கிக் கொண்டோம்.

இவனை எங்கள் கிராமத்தில் அம்மன் கோயிலுக்கு அனுப்பி விடு.

அதேபோல், நாங்கள் முன்னமே கேட்டபடி அதேயிடங்களுக்கு எங்களுக்கு அனுப்பி வை!" என்று கெஞ்சினர்.

பூதம் பலமாகச் சிரித்துக் கொண்டே, "ஏனையவர்களைக் கலந்தாலோசிப்பது தவறில்லை. ஆனால் இறுதியில் முடிவு எடுப்பதை நாம்தான் செய்ய வேண்டும்" என்று சொல்லிய பின்னர் அவர்கள் மூவரையும் அவர்கள் குறிப்பிட்ட இடங்களுக்கு அனுப்பிவைத்தது.

மற்றவர்களின் யோசனைப் படியே எப்போதும் செயற்படுவது விவேகமில்லை என்பதைக் கரனும் புரிந்து கொண்டான்.



இனி தானே நன்கு யோசித்து முடிவெடுப்பது தான் சாலச் சிறந்தது என்று தெரிந்து கொண்டான்.

# ஈராக்கை மூன்று துண்டாக்கியது போல் இலங்கையைக் கூறுபோட அமெ. முயற்சி

## ஈராக் யுத்தக்குற்றத்திற்கு யார் பொறுப்பு கேள்வியெழுப்புகிறார் மைத்திரிபால



(கொழும்பு)

**ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா சமர்ப்பித்திருக்கும் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தினால் நாடு பிளவுபடவே வழி வகுக்கும்.**

**அமெரிக்கா தலைமையிலான மேற்குலக நாடுகள் முழு உலக மக்களுக்கும் எதிராகவே செயற்படுகின்றன.**

**அமெரிக்காவினதும் மேற்குலக நாடுகளினதும் பிடிக்குள் இருந்த பொருளாதார சுபீட்சம் ஆசிய நாடுகளுக்கு கைமாறி இருப்பதை அந்த நாடுகளால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறசேன தெரிவித்துள்ளார்.**

அமெரிக்கா சமர்ப்பித்துள்ள பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பொலன்னறுவையில் நடத்தப்பட்ட சமய நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பொருளாதார சுபீட்சத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் நாடுகளில் குழப்பங்களையும் சீரழிவுகளையும் மட்டுமின்றி அந்த நாடுகளை துண்டாடவும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகளின் சூழ்ச்சிகளின் காரணமாக லிபியாவும் சூடானும் துண்டாடப்பட்டு விட்டன. ஆப்கானிஸ்தான்ன தொடர்ந்தும் மோசமாக தாக்குகின்றார்கள். பாகிஸ்தானையும் தாக்குகிறார்கள்.

ஈராக்கை மூன்று துண்டாக்கியுள்ளார்கள். ஈரானை தாக்கத் தயாராகிறார்கள். மாலைதீவுக்கும் இதனையே செய்தார்கள்.

அமெரிக்காவும் மேற்கு நாடுகள் சிலவும் இங்கு பயங்கரவாதம் முழுமையாக ஒழிக்கப்பட்டதை தவறான, பிழையான நடவடிக்கையாக பார்க்கின்றன. பயங்கரவாதம் காரணமாக மக்கள் அனுபவித்த துன்ப துயரங்கள் குறித்து சிறிதளவேனும் கவனம் செலுத்தவில்லை.

புலிகள் முழுமையாக ஒழிக்கப்பட்டாலும் கடல் கடந்த புலிகள் சக்திமிக்க நாடுகளுக்கு எதிரான பொய்த் தகவல்களை வழங்கி சதிகளிலும் சூழ்ச்சிகளிலும் ஈடுபட்டிருக்கின்றார்கள்.

அதன் வெளிப்பாடே அமெரிக்கா பிரேரணை கொண்டு வந்திருக்கின்றது. இதேபோல வெவ்வேறு விதமாக சதிகளும் சூழ்ச்சிகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த நடவடிக்கைகளின் ஊடாக இலங்கைக்குள் மீண்டும் பயங்கரவாதத்தை கொண்டு வரவும் நாட்டில் மீண்டும் அழிவுகளை ஏற்படுத்தவும் இரத்தம் ஓடச் செய்யவும் வழி செய்யப்படுகின்றது இதற்கு ஒருபோதும் மக்கள் இடமளிக்க மாட்டார்கள்.

அமெரிக்கா கடல் கடந்துள்ள புலிகளைத் திருப்திப்படுத்துவதற்காக மனித உரிமை மீறலில் இலங்கை ஈடுபட்டதாக கூறுகின்றது.

மனித உரிமை பாதுகாப்பு குறித்து குற்றம்சாட்ட அமெரிக்காவுக்கு எந்த அருகதையும் கிடையாது.

அவர்கள் ஈராக்கில் இலட்சக்காணக்கான அப்பாவி மக்களைப் படுகொலை செய்துள்ளார்கள். இருபது ஆண்டு வியட்நாம் போரில் ஆயிரக்கணக்கான அப்பாவிகளை கொன்றழித்துள்ளார்கள். அதேநிலைதான் ஆப்கானிஸ்தானிலும் நடக்கின்றது.

அமெரிக்காவின் பிரேரணைக்கு எதிராக இந்நாட்டில் வாழுகின்ற தமிழ் மக்கள் கூட கடும் எதிர்ப்புத் தெரிவிக்கின்றார்கள்.

எமக்கு எதிராக தெரிவிக்கப்படும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டை நிராகரிக்கின்றார்கள்.

இது இலங்கைக்கு மிக முக்கியமான காலகட்டம். நாம் அமெரிக்காவின் யோசனையை நடைமுறைப்படுத்தினால் அது நாடு பிளவுபடவும் துண்டாடப்படவுமே வழி செய்யும்.

இந்த நிலைமையை உணர்ந்து இலங்கைக்கு எதிரான சதிகளையும் சூழ்ச்சிகளையும் முறியடிப்பதற்காக அணி திரளவேண்டும் என்று மேலும் கூறியுள்ளார். (அ-7-2)

## ஆப்கான் பிரஜைகள் இலங்கையில் கைது

(கொழும்பு)

கட்டுநாயக்க பண்டார நாயக்க விமான நிலையத்தில் புலனாய்வுப் பிரிவினரால் ஆப்கானிஸ்தான் பிரஜைகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒரே குடும்பத்தை சேர்ந்த ஏழு பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.தந்தை, தாய் மற்றும் பிள் ளைகள் இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களாவார். இவர்கள் போலியான வீசா ஆவணங்களைப் பயன்படுத்தி ஜேர்மனிக்கு செல்ல முற்பட்டபோது சந்தேகத்தின் பேரில் ஆப்கான் பிரஜை களை கைது செய்ததாக புலனாய்வுப்பிரிவினர் தெரிவித்துள்ளனர். (அ-7)

## ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

### விசுவாசத்தை வாழ்வில் காட்டுவோம்



விசுவாசம் என்பது ஒருவர் மேல் நாம் கொண்டிருக்கும் பற்று என்று கூறலாம். அதாவது வாழ்விலும் தாழ்விலும் அவரே தனக்கு ஏகதுணை என்ற நினைப்போடு அவரில் முழுமையான நம்பிக்கை கொண்டு வாழும் வாழ்வே விசுவாச வாழ்வு ஆகும்.

இன்று மனிதம் சிதைக்கப்படுகின்றது. பணத்திற்காகவும் சுயலாபத்திற்காகவும் மனிதனுடைய உரிமைகள் விலை போகின்ற துர்ப்பாக்கிய நிலையே எமது சமுதாயத்தில் தலை தூக்கியுள்ளது. உண்மையை பேசுபவன் உவலகறியாதவன் என்றும் ஏமாற்றி பிழைக்கத் தெரியாதவன், அனுபவமில்லாதவன் என்றும் நீதி நியாயம் பேசுபவர்களை புரட்சிக்காரர் என்றும் முத்திரை குத்தி மக்களை ஒரு மயக்க நிலைக்கு அழைத்துச் செல்லும் இக்காலத்தில் எமது விசுவாசம் குடத்தில் இட்ட விளக்காக அல்ல மாறாக சமூகத்தில் படர்ந்திருக்கும் பொய்களும் போலிகளும் எரியூட்டும் பிளம்பாக மாற வேண்டும்.

மக்களின் மயக்க நிலைகளை தெளிய உண்மை நிலையை அவர்கள் உணர, சமூகம் ஒரு நல்ல மாற்றத்தை அடைய் எமது இன்றைய பணிகள் அமைய வேண்டும்

காலத்தின் அறிகுறிகளை அறிந்து நற்செய்தியின் ஒளியில் அதற்கு விளக்கம் கொடுப்பது திருச்சபையின் கடமை என்கிறது.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் (இ.உ.தி 4). எனவே கிறிஸ்துவின் பணியாளர்களாகிய எமது விசுவாசம் குறுகிய நோக்கங்களுக்கும் கோணல் மனப்பான்மைகளுக்கும் இடங்கொடாமல் உலகத்தை நோக்கி ஒரு பரந்த விசுவாசமாக அமைய வேண்டும்.

விசுவாசத்தை பாதுகாக்க நாம் உலகத்தை விட்டு ஓட நினைப்பது நாம் உண்மையான கிறிஸ்தவர்கள் அல்ல. நம் விசுவாசம் என்னும் உறுதி பெறவில்லை என்பதனையே காட்டுகின்றது. எமது விசுவாசம் உறுதியானது என்றால் அது எமது பணிகளிலே குறிப்பாக நற்செய்தி அறிவுப் பணியிலே வெளிப்பட வேண்டும்.

எனவே இன்றைய காலத்தின் தேவையினை சமூக நோக்கில் விளங்கிக் கொண்டு கிறிஸ்தவ விழுமியங்களை தங்கள் வாழ்வில் பிரதிபலித்து தாம் கொண்டிருக்கும் விசுவாசத்திற்கு செயல். வடிவம் கொடுப்பதே இன்றைய தேவை. அதுவே அர்த்தமுள்ள கிறிஸ்தவ வாழ்வும் ஆகும்.

அருட் சகோதரர்
றமேஸ் அ.ம.தி

## சிறுபான்மை மக்கள் பெரும்பான்மை மக்களுடன் சேர்ந்து வாழ்கின்றனர்- பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் சிறுபான்மை மக்கள் பெரும்பான்மை மக்களுடன் இணைந்து வாழ்ந்து வருகின்றார்கள் என்பதனை சர்வதேச சமூகத்திற்கு வெளிப்படுத்த வேண்டுமென பிரதமர் டி.எம். ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

அதிகளவான சிறுபான்மை மக்கள் பெரும்பான்மை மக்களுடன் வாழ்ந்து வருகின்றார்கள் என சனத்தொகை மதிப்பீட்டின் போது வெளிப்படுத்த முடியும். மேலும் வடக்கு கிழக்கு வாழ் தமிழ், முஸ்லிம்களை விடவும் தெற்கில் வாழ்ந்து வரும் முஸ்லிம் தமிழர்களின் எண்ணிக்கை அதிகமாகும்.

இந்த உண்மையை குடிசன மதிப்பீட்டு புள்ளி விபுரங்களின் அடிப்படையில் வெளிப்படுத்த வேண்டும். அபிவிருத்தி அடைந்து வரும் நாடு என்ற ரீதியில் சனத்தொகை மதிப்பீட்டு நடவடிக்கைகள் மிகவும் அவசிமானது எனவும் கொழும்பு பிரதமர் இல்லத்தில் சனத்தொகை மதிப்பீட்டாளர்கள் கணக்கெடுப்பு நடத்திய போது பிரதமர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (2-7)

## பிளேக் இலங்கைக்கு எதிராக சூழ்ச்சி; திவயின பத்திரிகை குற்றச்சாட்டு


இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதுவர் றொபேட் ஓ பிளேக் இலங்கைக்கு எதிராக சூழ்ச்சி செய்து வருவதாக திவயின பத்திரிகை குற்றம் சுமத்தியுள்ளது.

ஜெனீவா மனித உரிமைகள் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக பிரேரணை முன்வைக்கும் திட்டத்தின் பின்னணியில் பிளேக் செயற்பட்டு வருகின்றார்.

முன்னாள் தூதுவர் பிளேக் இலங்கையில் இடம்பெற்ற சகல விடயங்கள் பற்றியும் அறிந்திருப்பதாக ஜெனீவா அமர்வுகளில் அமெரிக்க இராஜதந்திரயொருவர் தெரிவித்துள்ளார். எனவே, இலங்கைக்கு எதிரான பிரேரணை நிறைவேற்றும் திட்டத்தில் பிளேக்கின் பங்களிப்பு முக்கியமானது என திவயின தெரிவித்துள்ளது. (2-7)

# வவு.இல் மாதா திருச்சொரூபம் அகற்றப்பட்டமை இன நல்லுறவை சீர்குலைக்கும் செயற்பாடு

## செல்வம் எம்.பி.தெரிவிப்பு



(கொழும்பு)

வவுனியா இளமருதங்குளம் கார்மேல் மாதா தேவாலயத்தில் உள்ள மடு மாதாவின் திருச்சொரூபம் கடந்த சனிக்கிழமை அதிகாலை அகற்றப்பட்டமை இன நல்லுறவை சீர்குலைக்கும் செயல் எனவும் குறித்த செயற்பாட்டை தான் வன்மையாக கண்டிப்பதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சனிக்கிழமை காலை 5.45 மணிக்கும் 6.45 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் வவுனியா வடக்குப் பகுதியில் அமைந்திருக்கும் இளமருதங்குளம் கார் மேல் மாதா தேவாலயத்தில் உள்ள மடு மாதா திருச்சொரூபம் அகற்றப்பட்டுள்ளது.

தேவாலயத்தினுள் புகுந்தவர்கள் அங்கு வைக்கப்பட்டிருந்த மடுமாதாவினுடைய திருச்சொரூப்த்தை எடுத்து ஆலயத்தின் மத்திய பகுதி யின் நிலத்தில் வைத்து திருச்சொரூபத்தின் மீது நீரை ஊற்றியுள்ளனர்.

அதேவேளை கார்மேல் மாதாவின் திருச்சொரூபம் வைக்கப்பட்டிருந்த கூட்டினை உடைத்து மாதாவின் கழுத்தில் அணிவிக்கப்பட்டிருந்த மாலைகளை கழற்றி வீசி எறிந்துள்ளனர்.

அதிகாலையில் தேவாலயத்தினுள் புகுந்து அங்கிருந்த மாதாவின் திருச்சொரூபத்தினை அகற்றி இவ்வாறு செய்தவர்கள் எவரென இது வரை தெரியவில்லை.

குறித்த சம்பவம் மிகவும் வேதனையினை ஏற்படுத்தியுள்ளது. இன, மத வேறுபாடு எவையும் இன்றி அனைவரும் வழிபடும் அன்னை மடுமாதாவின் திருச்சொரூபத்திற்கு இச்செயற்பாட்டினை ஈடுபட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

நாட்டின் பல பாகங்களிலும் வீதிகளில் புத்தர் சிலைகள் வைக்கப்பட்டுபாதுகாக்கப்படுகின்றது. ஆனால், ஆலயத்தினுள் உள்ள மடு மாதாவில் திருச்சொரூபத்திற்கு இப்படி ஒரு பாதுகாப்பற்ற நிலமை ஏற்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தினால் அப்பகுதியில் உள்ள கிறிஸ்தவ மக்கள் மத்தியில் கடும் சீற்றம் ஏற்பட்டுள்ளது. எனவே, பாதுகாப்புத் தரப்பினர் குறித்த சம்பவம் தொடர்பில் உடன் விசாரணைகளை மேற்கொண்டு சம்பவத்தில் தொடர்புடையவர்களை சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (7)

# கோல்டன் கீ நிதிமோசடி; சந்தேக நபர் பிரிட்டனில்

## இன்டர்போல் தெரிவிப்பு

கோல்டன் கீ நிறுவனம் 26 பில்லியன் ரூபா வாடிக்கையாளர் பணத்தை மோசடி செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சிசிலி கொத்தலாவல பிரித்தானியாவில் சட்ட ரீதியாக வாழ்ந்து வருவதாக இன்டர்போல் எனப்படும் சர்வதேச பொலிஸ்துறை அறிவித்துள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற மிகப் பெரிய நிதி மோசடிகளில் ஒன்றாகக் கருதப்படும் கோல்டன் கீ நிதி மோசடிச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான நபர்களில் ஒருவராக கருதப்படுகின்றார். இலங்கையின் முதன் னிலை வர்த்தக நிறுவனங்களில் ஒன்றான செலிங்கோ குழும நிறுவ னத்தின் ஸ்தாபகப் பணிப்பாளர் லலித் கொத்தலாவலவின் மனைவியே இந்த சிசிலி கொத்தலாவல என்பது குறிப்பிடத்தக்கது.

கோல்டன் கீ நிறுவனம் 26 பில்லியன் ரூபா வாடிக்கையாளர் பணத்தை மோசடி செய்துள்ளதாகவும் சிசிலி கொத்தலாவல மத்திய லண்டனில் வாழ்ந்து வருவதாக இன்டர்போல் அதிகாரி இஷான் [illegible] தெரிவித்துள்ளார். மேலும் இவர் 2018 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 19 ஆம் திகதி வரையில் பிரித்தானியாவில் தங்கியிருப்பதற்கு சட்டரீதியான விசா வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-7)




★ 1639-ஹாவர்ட் பல்கலைக்கழகத்துக்கு சமயவாதி ஜோன் ஹவார்ட் என்பவரின் பெயர் இடப்பட்டது.

★ 1781-வில்லியம் ஹேர்ச்செல் யுரேனஸ் கோளைக் கண்டுபிடித்தார்.

★ 1811-பிரித்தானியர் பிரெஞ்சுப் படைகளை லீசா என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் தோற்கடித்தனர்.

★ 1881-ரஷ்யாவின் சார் மன்னன் இரண்டாம் அலெக்சாண்டர் தனது மாளிகைக்கு அருகில் நடந்த குண்டு வீச்சில் கொலை செய்யப்பட்டான். (ஜூலியன் நாட்காட்டியில் இது மார்ச் 1 இல் இடம்பெற்றது)

★ 1900-பிரான்சில் பெண்கள் மற்றும் சிறுவர்களின் வேலை நேரம் சட்டப்படி 11 மணி நேரமாகக் குறைக்கப்பட்டது.

★ 1908-நெல்லைக்கு வந்த வ.உ.சி. சுப்பிரமணிய சிவாபத்மநாப அய்யங்கார் கைது செய்யப்பட்டதால் திருநெல்வேலியில் எழுச்சி ஏற்பட்டது.

★ 1921-மொங்கோலியா சீனாவிடம் இருந்து தனது விடுதலையை அறிவித்தது.

★ 1940-இந்திய விடுதலைப் போராட்ட வீரர் உத்தம் சிங் லண்டனில் காக்ஸ்டன் ஹால் என்ற இடத்தில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் வைத்து இந்தியாவின் முன்னாள் ஆளுநர் மைக்கேல் டயர் என்பவரை சுட்டுக் கொன்றார்.

★ 1943-ஜேர்மனியப் படைகள் போலந்தின் யூதக் குடியேற்றங்களை அழித்தன.

★ 1954-வியட்நாம் போர்: வியட்மின் படைகள் பிரெஞ்சுப் படைகளைத் தாக்கின.

★ 1957-கியூபா ஜனாதிபதி புல்ஜென்சியோ பட்டீஸ்டாவைக் கொல்ல மாணவ தீவிரவாதிகள் எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்தது.

★ 1969-அப்பல்லோ 9 விண்கலம் பாதுகாப்பாக பூமி திரும்பியது.

★ 1979-கிரெனடாவில் இடம்பெற்ற புரட்சி ஒன்றில் அதன் பிரதமர் எரிக் கெய்ரி பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.

★ 1992- கிழக்கு துருக்கியில் இடம்பெற்ற (6.8 ரிக்டர் அளவு) நிலநடுக்கத்தில் 500 பேருக்கு மேல் உயிரிழந்தனர்.

★ 1996-ஸ்கொட்லாந்து டன்பிளேன் நகரில் இடம்பெற்ற சூட்டு நிகழ்வில் 16 மாணவர்களும் ஓர் ஆசிரியரும் உயிரிழந்தனர். கொலையாளி தன்னைத் தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டான்.

★ 1997-அமெரிக்காவின் பீனிக்ஸ் நகரின் மீது பீனிக்ஸ் வெளிச்சங்கள் தெரிந்தன.

★ 2003-இத்தாலியில் 350,000 ஆண்டு பழைமையான மனித அடிச்சுவடுகள் கண்டுபிடிக்கப்பட்டதாக நேச்சர் இதழ் அறிவித்தது.

★ 2007-2007 உலகக் கோப்பை துடுப்பாட்டம் (கிரிக்கெட்) போட்டிகள் மேற்கிந்தியத் தீவுகளில் ஆரம்பம்.


**பிறப்பு**

★ 1733-ஜோசப் பிரீஸ்ட்லி, ஒட்சிசனை கண்டுபிடித்தவர் (இ.1804)

**இறப்புக்கள்**

★ 1936-கா.நமச்சிவாயம், தமிழறிஞர் (பி.1876)

★ 1975-ஐவோ ஆண்டிரிக், நோபல் பரிசு பெற்றவர் (பி.1892)




★ 1839- இந்தியாவின் நவீன தொழிற்றுறையின் முன்னோடி ஜாம்ஷெட்ஜி டாடாவின் பிறந்த தினம் (இ.1904)

# இராணுவம் மனித உரிமை மீறலில் ஈடுபட்டதா?

## கோத்தபாய கேள்வி



(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கெதிராக அமெரிக்கா கொண்டு வந்துள்ள பிரேரணை நியாயமற்றது என பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ கடுமையாகச் சாடியுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் இறுதிக்கட்டத்தில் இராணுவத்தினர் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாக அமெரிக்காவின் குற்றச்சாட்டு ஆதாரமற்ற என்றும் இந்த நகர்வு நியாயமற்றது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் மூத்த தலைவர்களான சூசை மற்றும் தமிழ்ச்செல்வன் ஆகியோரின் குடும்பங்கள் இராணுவத்தினரால் நன்றாக கவனிக்கப்படுவதாகவும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் பெற்றோரையும் நன்றாக பராமரித்ததாகவும் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இலங்கைக்கெதிரான அமெரிக்காவின் தீர்மானத்தை முறியடிக்க ஒன்றுபட்டு நிற்க வேண்டும் என்றும் கோத்தபாய ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

மகரகமவில் பௌத்த விகாரை ஒன்றில் இடம்பெற்ற வழிபாட்டை அடுத்து உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். (அ-7)

# ஒட்டகத்திற்கும் இந்த நிலையா?

(கொழும்பு)


தெஹிவளை மிருகக்காட்சி சாலையிலிருந்த ஒட்டகமொன்று கர்ப்பமாகியுள்ளதாக கருதி அதற்கு சிகிச்சை அளிக்கப்பட்ட போது உயிரிழந்துள்ளது. மிருக வைத்தியர் ஒருவரின் அறிவுறுத்தலின் படி இச்சிகிச்சை அளிக்கப்பட்டது.

எனினும் மேற்படி ஒட்டகம் கர்ப்பமடையவில்லை என்பது பின்னர் கண்டுபிடிக்கப்பட்டதுடன் ஒட்டகம் இறந்தமை குறித்து முழுமையான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக மிருகக்காட்சி சாலையின் பணிப்பாளர் பிரபாஷ்வரசேக குணரட்ன தெரிவித்தார்.

மருத்தவரின் கட்டணம், மருந்துகள் உட்பட இச்சிகிச்சைக்கு சுமார் 60 ஆயிரம் ரூபா செலவிடப்பட்டுள்ளது. ரோஸி எனப் பெயரிடப்பட்ட 8 வயதான இந்த ஒட்டகம் ரஷ்யாவிலிருந்து கொண்டுவரப்பட்டதாகவும். பிந்து எனப் பெயரிடப்பட்ட அதன் துணை இப்போது தனித்துள்ளது. (அ-2)

# அதிசய உலகம்...

## மனிதர்களை உணவாக உண்ணும் இராட்சத சிலந்தி நண்டு இனம்



ஜப்பானை ஒட்டியுள்ள பசுபிக் கடல் பகுதியில் 1200 அடி ஆழத்தில் இராட்சத சிலந்தி நண்டுகள் காணப்படுகின்றன. இவை சுமார் 12 அடி அகலத்தில் கால்களை பரப்பிக் கொண்டு ஒட்டகச் சிவிங்கியைப் போல் நடந்து பார்ப்பவர்களை பிரமிக்க வைக்கிறது.

இது 4 அடி உயரம் வரை வளர்கிறது. கடலுக்குள் ஆராய்ச்சி செய்யும் ரோவர் என்ற நீர்மூழ்கிக் கருவிகள் மூலம் இந்த நண்டுகளை ஆராய்ச்சிக்காகப் பிடிக்கின்றனர்.

இந்த இராட்சத சிலந்தி நண்டுகள் 50 ஆண்டுகாலம் வரை உயிர் வாழ்கின்றன. இது கடல் விபத்தில் இறந்துபோன மனிதர்களை உணவாக உட்கொள்கிறது.

## உலகின் மிகப் பெரிய மலர்



பெஸல் நகர தாவரவியல் பூங்காவில் பூத்திருக்கும் அரிய ரக டைடான் அரும் மலரை காண்பதற்கு பெருந்திரளான மக்கள் அங்கு வந்த வண்ணம் உள்ளனர். உலகில் பூக்கும் மிகப் பெரிய மலர் இனங்களில் இதுவும் ஒன்றாகும். இதை ஒரு இயற்கையின் அற்புதமாகவே மக்கள் பார்க்கின்றனர். கடும் சுகந்தம் கொண்ட இந்த மலர் மஞ்சள் நிற மின்குமிழ் ஒன்றின் வடிவில் சுமார் இரண்டு மீற்றர் உயரத்துக்கு நீண்டு வளருகின்றது. இந்த மலர் பெரியவெள்ளி தினத்தன்று பூக்க ஆரம்பித்துள்ளது. இதன் விஞ்ஞானப் பெயர் Amorphophallustitanium என்பதாகும். இந்தோனேசியாவின் சுமாத்திரா தீவுப் பகுதியில் உள்ள மழை வீழ்ச்சி காடுகள் தான் இதன் தோற்ற இடம்.

அங்கு இவை சுமார் மூன்று மீற்றர் உயரத்திற்கு வளரும் பண்பு கொண்டவை. இவை அரிதாகப் பூக்கும் ஒரு மலரினம். இதன் சுகந்தம் பூச்சிகளையும் வண்டுகளையும் கவர்ந்து இழுக்கக் கூடியவை.ஒரு சில நாட்களில் இது வாடிப் போய்விடும்.

பெஸல் நகரில் இந்தப் பூ இந்தளவுக்கு வளர 17 ஆண்டுகள் எடுத்துள்ளன. உலகம் முழுவதும் இதனை ஒத்த 134 பிரதிகள் உள்ளன.அவற்றுள் அரைவாசிக்கும் அதிகமானவை அமெரிக்காவில் உள்ளன.

## நாய்க்குட்டியை ஈன்ற ஆடு சீனாவில் அதிசயச்சம்பவம்




நாளுக்கு நாள் எம்மை நம்ப மறுக்கும் பல்வேறு விசித்திரங்கள் உலகில் எங்கோ ஓர் மூலையில் நடந்து கொண்டு தான் இருக்கிறது. இந்த வரிசையில் சீனாவில் உள்ள பண்ணை ஒன்றில் ஆடு ஒன்று நாய்க்குட்டி ஒன்றை பிரசவித்து உள்ளது. மிருக வைத்திய நிபுணர்கள் கண்களை நம்ப மறுக்கின்றார். பண்ணை உரிமையாளரோ அதிசயிக்கின்றார். குட்டியின் வாய், மூக்கு, கண்கள், வால்போன்ற உறுப்புக்கள் நாய் ஒன்றுக்கு உரியனவே என்றும் நாய் குட்டி ஒன்றை போலவே இக்குட்டியின் விளையாட்டுக்கள், குறும்புகள் உள்ளன. ஆனால் ஆடுகளின் உரோமத்தை இக்குட்டி கொண்டுள்ளது. கடந்த 20 வருடங்களாக ஆடுகளை வளர்த்து வருகின்றார் என்றும் முதல் தடவையாக இவ்வதிசயம் நேர்ந்து உள்ளது என்றும் பண்ணை உரிமையாளர் தெரிவித்துள்ளார்.

## குட்டி சைக்கிளில் உலக சாதனை



எத்தனையோ உலக சாதனையாளர்களை பார்த்திருக்கின்றோம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான வழிகளை பயன்படுத்தி சாதனைமேற்கொள்கின்றனர். இங்கே ஒருவரும் அவ்வாறே ஒரு உலக சாதனைக்கு முயற்சிக்கின்றார். சுவீடன் நாட்டைச் சேர்ந்த Peter Rosendhl என்பவர் உலகிலேயே மிகவும் சிறிய சைக்கிள்களில் சவாரி செய்து கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

## கடலுக்கடியில் முதன் முதலில் நட்சத்திர ஹோட்டல்



நாம் அனைவருக்கும் பல நட்சத்திர ஹோட்டல்களை பார்த்திருப்போம். ஆனால் கடலுக்கு அடியில் பார்த்திருக்கிறீர்களா. படத்தைப் பாருங்கள். இந்த நட்சத்திர அந்தஸ்து கொண்ட ஹைடிரோபாலிஸ் ஹோட்டல் டுபாயில் உள்ளது. இது உலகின் முதன் முதலில் கடலுக்கு அடியில் உருவாக்கப்பட்டதாகும். சுமார் 300 ஹெக்டேயர் பரப்பும் 66 அடி உயரமும் கொண்டது.

2006 ஆம் ஆண்டு இதன் கட்டடப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஹைடிரோபோலிஸை வடிவமைத்தவர் Joachim Hauser ஆவார். ஹைடிரோபோலிஸின் மேற்பகுதியில் திரையரங்கம் மற்றும் உணவகமும் உள்ளது.

## பெற்றோல் தயாரித்து கொடுக்கும் பக்றீரியா

எரிபொருள் ஒருபுறம் தீர்ந்து வருகிறது. மறுபுறம் மாசு பெருகி வருகிறது. எரிபொருளின் தேவையையும் பூர்த்தி செய்து மாசையும் கட்டுப்படுத்துகிறது ஒரு பக்றீரியா. அதிசயமாக இருக்கிறதா! காற்றில் காபனீரொட்சைட் அளவு அதிகரிப்பதால் மாசு பெருகி உள்ளது. இந்த காபனீரொட்சைட்டை உறிஞ்சி பெற்றோலாக வெளியிடுகிறது இந்த பக்றீரியா. இதனால் ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடித்த மகிழ்ச்சியில் இருக்கிறார்கள் கலிபோர்னியா பல்கலைக்கழக விஞ்ஞானிகள்.

சையனோபக்றீரியம் என்ற பக்றீரியாவில் நுண்ணுயிரியல் விஞ்ஞானிகள் செயற்கையாக சில மாற்றங்களை ஏற்படுத்தினர். இதற்காக பக்றீரியாவில் ருபிஸ்கோ என்னும் நொதியம் சேர்க்கப்பட்டது. அதன் பின்னர் இந்த பக்றீரியாக்கள் காபனீரொட்சைட்டை சுவாசித்து இசோப்புட்டால்டிகைடு என்ற வாயுவாக வெளியிடுகிறது. இதை எளிமையாக மாற்றி இசோப்புட்டனால் என்ற எரிபொருள் தயாரிக்கப்படுகிறது. இது பெற்றோலுக்கு சிறந்த மாற்று எரிபொருளாகும்.

இதுவரை தாவரங்கள் மற்றும் பூஞ்சைகளில் இருந்து மாற்று எரிபொருள் தயாரிக்கப்படுகிறது. இதில் பல்வேறு மாற்றங்களைத் தாண்டி எரிபொருள் கிடைக்கும்.ஆனால் இந்த பக்றீரியாமுறையில் எளிமையாக குறைந்த செலவில் சிறந்த எரிபொருளை உற்பத்தி செய்ய முடிகிறது. இதன் மேலும் ஒரு சிறப்பம்சமாக இந்த பக்றீரியாக்கள் சூரிய ஒளியை கிரகித்தும் எரிபொருள் உற்பத்தி செய்துவிடும் அதாவது சூரிய ஒளியில் இருந்து காபனீரொட்சைட்டை பிரித்து பிறகு அதை இசோப்புட்டால் டிகைடாக மாற்றும். எனவே இந்த பக்றீரியாக்களைக் கொண்டு இரட்டை வழியில் நிறைய பெற்றோல் தயாரிக்க முடியும் என விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

# ஜெனீவா தீர்மானம் ஊடாக இலங்கையில் அமெரிக்கா எதற்கு முயற்சிக்கிறது?




அமெரிக்கா இறுதியில் இலங்கை விடயத்திலான பிரேரணையை ஐ.நா. மனித உரிமை பேரவையில் சமர்ப்பித்துவிட்டது.

அமெரிக்கா அதனை சமர்ப்பிக்கும் முன் ஏதோ வானம் சரிந்து விழப்போவதைப் போல் பெரும் ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் செய்த ஆளும்கட்சி அது சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் ஒன்றுமே நடக்காததைப்போல் இருக்கிறது.

இந்தப் பிரேரணையில் மூன்று விடயங்கள்தான் வலியுறுத்தப்பட்டுள்ளது. சர்வதேச சட்டத்தை மீறியதாக கூறப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் ஆக்கபூர்வமான சிபார்சுகளை நிறைவேற்றல்தான் இதில் முக்கியமான விடயமாக இருக்கின்றது.

அடுத்த மனித உரிமை பேரவைக் கூட்டம் நடைபெறும் போது அரசாங்கம் ஆணைக்குழுவின் சிபார்சுகளில் எந்தளவு நிறைவேற்றியிருக்கிறது. மேலும் என்னென்ன செய்ய திட்டமிடப்பட்டுள்ளது என்பதைப் பற்றிய அறிக்கையொன்று அக்கூட்டத்தின் போது சமர்ப்பிக்க வேண்டும் என்பது மற்றொரு விடயமாகும். இந்த விடயத்தில் அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஸ்தானிகராலயத்தின் உதவியையும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பது மூன்றாவது விடயமாகும்.

அரசாங்கத்தின் ஆதரவாளர்கள் கூறியவதைபோல் அமெரிக்க நாட்டை ஆக்கிரமிக்கும் நிலைமையோ அல்லது ஜனாதிபதியை மின்சாரக் கதிரையில் வைத்து மரண தண்டனை வழங்க வேண்டும் என்றோ, குறைந்த பட்சம் இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் போர்க்குற்றங்களைப் பற்றி விசாரணை செய்வதற்காக சர்வதேச விசாரணைக்குழுவொன்றை நியமிக்க வேண்டும் என்றோ அந்தப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டு இருக்கவில்லை.

பிரேரணையின் முதலாவதும் முக்கியமானதுமான விடயம் அதாவது கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் ஆக்கபூர்வமான சிபார்சுகளை நிறைவேற்றல் என்பது அரசாங்கத்திற்கு எவ்வகையிலும் பிரச்சினையாக இருக்க முடியாது. ஏனெனில் தாம் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை நிறைவேற்றுவதற்கு தான் நடவடிக்கை எடுத்து வருவதாகவே அரசாங்கமும் தொடர்ந்து கூறி வருகின்றது.

ஆனால், தாம் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளில் எந்தளவு நிறைவேற்றியிருக்கின்றோம், மேலும் என்னென்ன செய்யப்போகிறோம் என்பதைப் பற்றிய அறிக்கையொன்றை அடுத்த மனித உரிமை பேரவைக் கூட்டத்தின் போது சமர்ப்பிக்க வேண்டும் என்பதும் இந்த விடயத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஸ்தானிகராலயத்தின் உதவியையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதும் தான் அரசாங்கத்திற்கு தலையிடியாக தெரிகிறது.

> **இப்போது அரசாங்கம் நம்பிக்கை பற்றிய பிரச்சினையையே எதிர்நோக்கியிருக்கின்றது. எனவே, அப்பிரச்சினை தற்போதைய ஜெனீவா மாநாட்டுக்கு அப்பாலும் நீண்ட காலத்திற்கு அரசாங்கத்தை மிரட்டிக் கொண்டே இருக்கும் போல்தான் தெரிகிறது. அதிலிருந்து தப்புவதற்கு ஒரே வழிதான் அரசாங்கத்திற்கு இருக்கின்றது. தாமே தயாரித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை அமுலாக்குவதே அந்த வழியாகும்.**

## அமெரிக்கா சமர்ப்பித்துள்ளது நம்பிக்கையில்லா பிரேரணையே

ஏனெனில் எமது நாட்டில் எமது பிரச்சினையொன்றை தீர்த்துக்கொள்ள நாம் எடுக்கும் நடவடிக்கைகளைப் பற்றி நாம் எங்கோ உள்ள சர்வதேச நிறுவனம் ஒன்றுக்கு என்ன வகை சொல்ல வேண்டும் என்பதே அரசாங்கத்தின் ஒரு கேள்வியாக இருக்கின்றது. மறுபுறத்தில் இந்த விடயத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஸ்தானிகராலயத்தின் உதவியையும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ள முற்பட்டால் அது இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிட ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஸ்தானிகராலயத்திற்கு வழங்கும் அனுமதிப்பத்திரமாக அமையும் என்றும் அரசாங்கம் கருதுகின்றது.

உண்மையிலேயே அரசாங்கத்தின் இந்த வாதம் தவறானது அல்ல. மேற்கண்டவாறு அடுத்த மனித உரிமை பேரவைக் கூட்டத்தின்போது அறிக்கை சமர்ப்பிப்பதன் மூலமும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஸ்தானிகராலயத்தின் உதவியையும் ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்வதன் மூலமும் ஐக்கிய நாடுகள் அதிகாரிகளுக்கு இலங்கை விடயத்தில் தலையிட கூடுதலான சந்தர்ப்பம் கிடைத்துவிடும்.

அமெரிக்கா அதனை மிக சூசகமாகவும் பண்பான முறையிலும் இராஜதந்திர ரீதியாகவும் வசனமாக்கி பிரேரணையில் உள்ளடக்கியுள்ளது. இது இலங்கையர்கள் விரும்பினாலும் இல்லாவிட்டாலும் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் என்ற விடயங்களில் அமெரிக்கா இலங்கை அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைக்கவில்லை என்பதையே எடுத்துக் காட்டுகின்றது. அதனால்தான் அரசாங்கத்தின் ஆணைக்குழுவின் சிபார்சுகளை அமுலாக்குவதனையும் சர்வதேச நிறுவனம் ஒன்று மேற்பார்வை செய்ய வேண்டும் என்று அமெரிக்கா அந்தப் பிரேரணை மூலம் கூறுகின்றது.

இதற்கு சர்வதேச ரீதியில் பலர் காரணம் கூறியிருகின்றார்கள். பிரஜைகள் பாதுகாப்பு, ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்குப் பொறுப்பான அமெரிக்க துணை செயலாளர் மரியோ ஒட்டேரோ கடந்த 3 ஆம் திகதி மனித உரிமை பேரவைக் கூட்டத்தில் பேசும் போது மனித உரிமைகள் விடயத்தில் இலங்கை அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று சர்வதேச சமூகம் மூன்று வருடங்கள் காத்திருந்தது என்று கூறினார்.

பொறுப்புக்கூறல் விடயத்தில் சர்வதேச நெருக்குதல் அதிகரிக்கவே இராணுவ தளபதி லெப்டினண்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய கடந்த மாதம் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள சில விடயங்களைப் பற்றி விசாரிப்பதற்கென விசாரணை நீதிமன்றமொன்றை நியமித்தார். அப்போது இலங்கை நெருக்குதல் வரும் போதெல்லாம் தமக்கு ஆதரவான ஆணையாளர்களை உள்ளடக்கிய ஆணைக்குழுக்களை நியமிக்கும் நீண்ட வரலாற்றைக் கொண்ட நாடாகும் என ஹியூமன் ரைட்ஸ் வோச் நிறுவனத்தின் ஆசிய பிராந்திய பணிப்பாளர் பிரட் அடம்ஸ் கூறியிருந்தார்.

பொறுப்புக்கூறல் சம்பந்தமாக சர்வதேச சமூகம் பிரச்சினை எழுப்பும் போது ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இலங்கை அரசாங்கம் ஆணைக்குழுவொன்றை நியமிக்கும் அந்த ஆணைக்குழு நீண்ட காலத்தை செலவளித்து விட்டு வெறுமையில் முடிந்துவிடும் என்று அவரே அரசாங்கம் நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்த போது கூறியிருந்தார்.

ஹியூமன் ரைட்ஸ் வோச் நிறுவனமானது, சர்வதேச அபிப்பிராயங்களை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கும் அமைப்பாகும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதுதான் அரசாங்கம் இன்று எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினையாகும். சர்வதேச சமூகம் என தம்மை அழைத்துக் கொள்ளும் மேற்கத்தைய நாடுகள் மனித உரிமை விடயத்தில் சில நாடுகளுக்கு வேற்றுமை காட்டுவதாக அரசாங்கம் கூறுவது உண்மையே. அதேபோல் புலிகளுக்கும் அரச படைகளுக்கும் இடையிலான போரின் இறுதிக்கட்டத்தின் போது போரை நிறுத்துமாறு மேற்கத்தைய நாடுகள் கூறியதை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாததன் காரணமாகவே தற்போது அந்நாடுகள் இலங்கைக்கு நெருக்குதலை கொடுத்து வருகின்றன என்றும் அரசாங்கம் கூறி வருகின்றது.

அதுவும் உண்மையாக இருக்கலாம். ஏனெனில் மனித உரிமைகள் தான் பிரச்சினை என்றால் இஸ்ரேலிய படையினரும் அமெரிக்க படையினரும் முள்ளிவாய்க்காலில் இடம்பெற்றதாக கூறப்படும் சம்பவங்களைவிட படுபாதகச் செயல்களில் ஈடுபட்டு வருகின்ற போதிலும் மேற்கு நாடுகளில் எவரும் அந்த மனித உரிமை மீறல்களை பற்றி பேசுவதில்லை.

இவை எவ்வளவுதான் உண்மையாக இருப்பினும் இப்போது அரசாங்கம் நம்பிக்கை பற்றிய பிரச்சினையையே எதிர்நோக்கியிருக்கின்றது. எனவே, அப்பிரச்சினை தற்போதைய ஜெனீவா மாநாட்டுக்கு அப்பாலும் நீண்ட காலத்திற்கு அரசாங்கத்தை மிரட்டிக் கொண்டே இருக்கும் போல்தான் தெரிகிறது. அதிலிருந்து தப்புவதற்கு ஒரேவழிதான் அரசாங்கத்திற்கு இருக்கின்றது. தாமே தயாரித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை அமுலாக்குவதே அந்த வழியாகும்.


ஆனால், தேசப்பற்றை முன்நிறுத்தி செயற்பட்டுக்கொண்டு இருக்கும் அரசாங்கத்திற்கு இது இலேசான விடயம் அல்ல. மேலும் அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்க வேண்டிவரும். யோகி, எழிலன் ஆகியோர் காணாமல் போனதையிட்டு இராணுவவீரர்கள் சிலரை விசாரணை செய்ய வேண்டிவரும்.

புலிகளும் நம்பிக்கையை பற்றிய இந்தப் பிரச்சினையை எதிர் நோக்கியிருந்தார்கள். அது அவர்களது வீழ்ச்சிக்கும் முக்கிய காரணமாக அமைந்தது. புலிகள் மீது குற்றச்சாட்டுகள் வரும்போது ஒன்றில் அதை மறுத்தார்கள். அல்லது நியாயப்படுத்தினார்கள்.

அது அவ்வப்போது குற்றம்சாட்டுவோரை வாயடைக்கச் செய்தபோதிலும் அக்குற்றச்சாட்டுக்கள் புலிகளின் பிரத்தியேக கோவையில் சேர்க்கப்பட்டுக்கொண்டே வந்தன. அவற்றின் கூட்டு மொத்த புலிகளை 32 நாடுகளில் தடைசெய்ய காரணமாக அமைந்தது. இறுதியில் அது உலக நாடுகளின் ஆதரவை குறைத்து அவர்களின் தோல்விக்கும் ஒரு காரணமாகியது. சிறிய நாடுகளுக்கும் அமைப்புக்களுக்கும் உலக அரசியலில் நம்பகத்தன்மை அவ்வளவு முக்கியமானதாக இருக்கின்றது.

**எம்.எஸ்.எம்.ஐயூப்**

# இத்தாலிக்கு ஒரு நீதி... இலங்கைக்கு ஒரு நீதியா..?



கேரளத்தின் கொல்லாம் கடற்பகுதியில் மீன் பிடித்த 2 மீனவர்களை "என்ரிக்கா கேலெக்ஸி" என்ற இத்தாலியக் கப்பலின் பாதுகாவலர்கள் சுட்டுக் கொல்கிறார்கள். சில நிமிடங்களில் *ஆலேர்ட்* ஆகிறது கேரளா. கடலோரப் பாதுகாப் புப்படை கப்பலும் கடற்படை ஹெலிகப்ரரும் துப்பாக்கிச் சூடு நடத்தி கப்பலை நிறுத்துகின்றன. பாதுகாவலர்கள் மீது கொலை வழக்கு பதிவுசெய்து கைது செய் கிறார்கள். பலியான மீனவர்களின் குடும்பங்களுக்கு 5இலட்சம் நிவாரணம் வழங்கியது கேரள அரசு. இறந்த ஒரு கேரளா மீனவரின் மனைவிக்கு மீன்வளத்துறையில் பணியும் வழங்கப்படுகிறது. கேரளாக் காரனான மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் அந்தோனி நேரடியாகக் களத்தில் இறங்குகிறார். இத்தாலித் தூதரை அழைத்துக் கண்டிக்கிறார்கள்.

நன்றாகக் கவனியுங்கள்... சம்பந்தப்பட்ட கப்பல் சோனியா பிறந்த இத்தாலியைச் சேர்ந்தது. இத்தாலிய வெளியுறவு அமைச்சரே, அலறிக் கொண்டு ஓடி வருகிறார். ஆனாலும் இந்திய சட்டத்தின்படி நடவடிக்கை என்கிறது மத்திய அரசு.

அப்படியே கேரளாவிலிருந்து தமிழகத்துக்கு வந்து தெற்காசிய மீனவர் தோழமை அமைப்பின் பொதுச் சொயலாளர் சர்ச்சில் சொல்வதைக் கேளுங்கள். "அரசு இந்தியக் கடலோரக் காவற்படை **அபிடவிட்** தாக்கல் செய்கிறது. கேரள மீன வருக்கு பாதிப்பென்றால் இத்தாலி யையே எதிர்க்கத்துணிகிற மத்திய அரசு தமிழக மீனவர்களை சாகடிக் கும் இலங்கையோடு கைகுலுக்கி நட்பு வளர்ப்பது ஏன்...?"



இத்தாலி கப்பல் பாதுகாவலர்கள் சுட்டதில் இறந்த அஜீஸ்பிங்கி தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்தான். ஆனால், கொல்லத்தில் தங்கி கேரள மீனவர்களோடு தொழில் செய்தவர். அவருக்கு கேரள அரசு 5 இலட்சம் வழங்கியுள்ளது. தமிழகம் கோரிக்கை விடுத்தால் அவரது மனைவிக்கு வேலை வழங்குவதாக அறிவித்திருக்கிறார் முதல்வர் உம்மன் சாண்டி. இதே சமயம் ஐம்பது கிலோமீட்டர் இந்தப்பக்கம் குமரியில் நடந்திருந்தால்...?

"கடந்த 10 வருடங்களில் நூத்துக்கும் மேற்பட்ட குமரி மீனவர்கள் காணாமற்போயிருக்காங்க. புயல், மழை நேரத்தில் காணாமற்போனா, இயற்கை பாதிப்புன்னு நம்பலாம். ஆனா, சாதரணமாக மீன் பிடிக்கப்போன பலரைக்காணல. கப்பல்கள் மோதியோ இம்மாதிரி தாக்கப்பட்டோதான் அவங்களும் இறந்திருக்கணும்ன்னு சந்தேகப்படுகிறோம். காணாமற்போன மீனவர்களைக் கண்டு பிடிக்கிறது கடலோர காவற்படையோட வேலை. ஆனா, இதுவரைக்கும் ஒரு மீனவரைக்கூட அவங்க கண்டுபிடிச்சது கிடையாது. கடல்ல காணாமற்போனவங்களை ஹெலிகப்பர்ல்ல தேடினாத்தான் கண்டுபிடிக்க முடியும். இங்கேயுள்ள கடலோரக் காவற்படைகிட்ட நவீன இரக ஹெலிகப்டர் இருக்கு. ஆனா, அதன் மூலம் தேடினா 9 இலட்ச ரூபாய் செலவாகுமாம். காணாமற்போன மீனவருக்கு நிவாரணம் கொடுத்தா 1 இலட்சத்தோட முடிஞ்சுடுமேன்னு கணக்கு சொல்றாங்க..." என்று வருந்துகிறார் தென்னிந்திய மீனவர் சங்கத்தலைவர் கு. பாரதி.

"பாகிஸ்தானுக்கும் நமக்கும் எவ்வளவோ பிரச்சினை ஆனா, வழிதவறி அங்கே போயிட்டா மரியாதையா நடத்தி கோட்ல ஒப்படைப்பாங்க. குறிப்பிட்ட நாளுக்குப்பிறகு. விடுதலை பண்ணி அனுப்பிடுவாங்க. அதேமாதிரிதான் பங்களாதேஷ். இலங்கை மீனவர்களுக்கும் நமக்கும் எந்தப்பிர்சினையுமில்லை. சின்னச்சின்ன விவகாரங்களை நாங்களே பேசித் தீர்த்துக்குறோம்... நம்ம மீனவர் திசைமாறி இலங்கைக்குப் போயிட்டா அந்நாட்டு மீனவர்கள்தான் நமக்கு தகவல் சொல்றாங்க. தூதரெல்லாம் அதுக்குப்பிறகுதான் வருவார். பிரச்சினையை உருவாக்கிறது இலங்கை கடற்படைதான். கடலை முழுமையா ஆக்கிரமிக்க இலங்கை முயற்சி செய்யுது. தமிழ் நாட்டு மீனவர்கள் வர்றது அவங்க இரகசிய செயற்பாடுகளுக்கு இடைஞ்சலாயிருக்கு. அதனாலதான் வன்முறையில் இறங்குறாங்க.

இலங்கையோட அடி, மீனவர்கள் மேல் மட்டுமே விழுகிறதில்லை... உண்மையில் அது இந்தியா மேல் விழுகிற அடி. கச்சதீவில் சீனா இராணுவத்தினர் தங்கியிருக்கிறதா தகவல் இருக்கு. அப்பப்போ கடல்ல சீன மீனவர்கள் மீன்பிடிக்கிறத பார்க்க முடியுது. மெல்ல கடல்ல சீனாவோட ஆதிக்கம் பரவிக்கிட்டுருக்கு. இதைப் புரிஞ்சுக்காம பாம்புக்குப் பால் வார்க்குது இந்தியா..." என்கிறார் பாரதி.

இத்தாலி காவலாளர்கள் மேல் எடுத்தது போல், இலங்கை மீது நடவடிக்கை எடுக்க முடியாதா? "தமிழக மீனவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்க வேண்டும்..." என்று வழக்குப்போட்ட மதுரை வழக்கறிஞர் ஸ்டாலினிடம் கூறுகையில்,

"நிச்சயம் முடியும், மத்திய அரசை மட்டுமே இதில் நான் குற்றம் சொல்ல மாட்டேன். தமிழக அரசும் இந்த விவகாரத்தில் தன்னோட பொறுப்பை தட்டிக்கழிக்குது'. தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துறது யார் என்பது ஒருபக்கம் இருக்கட்டும். இதில் எத்தனை சம்பவங்கள் கொலை வழக்கு பதிவு பண்ணி எப்.ஐ.ஆர் போட்டு கைது நடவடிக்கை எடுத்திருக் காங்க. எல்லா வழக்குகளும் அப்படியே தூங்குது. இலங்கை தூதரகத்துக்கு நோட்டீஸ் அனுப்பி விசாரணைக்கு ஒத்துழைப்பு கேட்கலாம். தனிப்படை அமைத்து இலங்கை சென்று விசாரணை செய்யலாம். இலங்கைக்கும் நமக்கும் கைதி பரிமாற்ற உறவு இருக்கு. ஒவ்வொரு நாட்டுக்கும் 12 நாட்டிக்கல்மைல் தொலைவு கடல் எல்லை. அதுக்குப் பிறகு இருப்பது சர்வதேச எல்லை. இலங் கைக்கும் இந்தியாவிற்கும் உள்ள மொத்த தூரமே 13 நாட்டிக்கல் மைல்தான். இதை வச்சு எப்படி எல்லை பிரிக்க முடியும். எல்லை தாண்டுறதா சொல்லி தாக்குதல் நடத்துறது அப்பட்டமான வன்முறை" என் கிறார் ஸ்டாலின்.



ஸ்டாலின்



சர்ச்சில்



பாரதி

இத்தாலிக்கு ஒரு நீதி, இலங்கைக்கு ஒரு நீதி, கேரளாவிற்கு ஒரு நீதி, தமிழகத்திற்கு ஒரு நீதி, இந்த விடயத்தில் தமிழகம் கேரளாவிடமிருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்.

நன்றி :குமுதம்

புள்ளி விபரப்படி 1991 முதல் 2011 வரை சிங்கள மீனவர்கள் மற்றும் கடற்படையால் 167 க்கும் அதிகமான தாக்குதல்கள் நடந்துள்ளன. 85 க்கும் மேற்பட்டோர் இறந்துள்ளார்கள். 180 இற்கும் அதிகமானோருக்குக் காயம். இதுவரை தாக்குதலில் சம்பந்தப்பட்ட எவர் மீதும் நடவடிக்கை இல்லை. எவரையும் கைது செய்யவில்லை. போதாக் குறைக்கு "தமிழக மீனவர்கள் மீதுதான் தவறு" என்று

# தவறிழைக்கும் சாரதிகளே கவனம்; உங்களுக்கு இருக்கிறது ஆப்பு

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் கடந்த வாரம் நிறைவேற்றப்பட்ட புதிய சட்டத்தின்படி தவறிழைக்கும் சாரதிகளுக்கான தண்டனை வழங்கும் புள்ளித்திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இது தொடர்பில் விரைவில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என பொலிஸ் பேச்சாளர் எஸ்.பி.அஜித் ரோஹண தெரிவித்தார்.

நீண்டகால அடிப்படையில் இத் திட்டம் கணனி மயப்படுத்தப்படும் எனவும் ஆரம்பத்தில் இது தொடர்பில் படிவமொன்று ஒழுங்கு செய்யப்பட்டு தண்டனை புள்ளிகள் பதிவு செய்யப்படும். சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருக்கும் அனைவருக்கும் இது உரித்துடையதாகும்.

ஒரு வருட காலத்திற்குள் 18 தொடக்கம் 23 தண்டனை புள்ளிகளை ஒருவர் பெற்றிருந்தால் அவருக்கு மோட்டார் வாகன பதிவு திணைக்கள ஆணையாளரால் எச்சரிக்கை விடுக்கப்படும். 23 புள்ளிகளுக்கு அதிகமாக பெற்றிருப்பின் அவரது சாரதி அனுமதிப் பத்திரம் ஒருவருட காலத்திற்கு இடைநிறுத்தி வைக்கப்படும்.

இதன் அடிப்படையில் வீதியில் இடம்பெறும் விபத்தின் போது நிறுத்தாமல் பயணித்தல், அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் விபத்து குறித்து முறையிடாதிருத்தல், மக்களுக்கு தீங்குவிளைவிக்கும் அல்லது ஆபத்து ஏற்படுத்தக்கூடிய வகையில் தரமற்ற வாகனங்களை செலுத்துவதன் மூலம் விபத்துக்களை ஏற்படுத்துதல் போன்ற குற்றங்களுக்கு 10 தண்டனை புள்ளிகள் வழங்கப்படும். ஆபத்தை தோற்றுவிக்கும் வகையில் அதிவேகமாக பயணித்தல் மற்றும் பொறுப்பற்ற வாகனங்களை செலுத்தினால் அக் குற்றங்களுக்கு 8 புள்ளிகள் வழங்கப்படும். மேலும் தண்டனைக்குரிய குற்றங்கள் பின் வருமாறு, விபரத்தை தவிர்த்துக் கொள்ள தவறுதல் 6 புள்ளிகள், கவனயீனமாகவும் ஆபத்தான வகையிலும் அதிவேகத்திலும் வாகனத்தை செலுத்தல் 8 புள்ளிகள், ஏனையோர் வீதியை பயன்படுத்துவதை கவனத்தில் கொள்ளாது முறையற்ற வகையில் வாகனத்தை செலுத்தல் 8 புள்ளிகள், விபத்தின் பின்னர் வாகனத்தை நிறுத்தாது சரியான தகவல்களை வழங்காது விடல் 10 புள்ளிகள், விபத்து தொடர்பில் அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்காமை 10 புள்ளிகள், குறித்த வேகத்தின் எல்லையை மீறுதல் 6 புள்ளிகள், வலது புறத்தை அல்லது நடைபாதையை கடைப்பிடிக்காமை 2 புள்ளிகள், முன்னால் பயணிக்கும் வாகனங்களை கவனிக்காது தெளிவற்ற விதத்தில் முந்திச் செல்லுதல் 6 புள்ளிகள், இடதுபுறமாக முந்திச் செல்வதை தவிர்த்தல் 4 புள்ளிகள், இடது புறமாக வரும் வாகனங்களுக்கு இடம் கொடுக்காது விடல் 4 புள்ளிகள், சரியான காரணமின்றி பிரதான வீதியிலிருந்து தொலைதூரத்திற்கு பின்னோக்கி வாகனத்தை செலுத்தல் 4 புள்ளிகள், வாகன சமிக்ஞைகளை கடைப்பிடிக்க தவறுதல் 6 புள்ளிகள், பொலிஸாரினால் வழங்கப்படும் கை சமிக்ஞைகளை கடைப்பிடிக்க தவறுதல் 6 புள்ளிகள், அதிகமாக புகைக்கும் வாகனங்களை செலுத்துதல் 6 புள்ளிகள், குறிப்பிடப்பட்ட தரத்திற்கு அப்பால் அதிக சத்தமுடைய தொடர்ச்சியாக சத்தம் (ஹோன்) எழுப்புதல் 6 புள்ளிகள், குறித்த தரத்திற்கு அப்பால் இரைச்சலுடைய இயற்திரங்கள் மற்றும் ஹோன் பயன்படுத்தல் 6 புள்ளிகள், தரம் குறைந்த வாகனங்களை பயன்படுத்துவதன் மூலம் வீதியில் செல்லும் மக்களுக்கு ஆபத்தை ஏற்படுத்தல் 10 புள்ளிகள், வாகன பட்டியை சாரதியோ அன்றேல் முன் ஆசனத்தில் இருப்பவரோ அணியாது தவிர்த்தல் 3 புள்ளிகள், வாகனத்தை முந்திசெல்லும்போது மூலை வளைவு, மலைப்பாங்கான பிரதேசம், முச்சந்தி, பாதசாரி கடவை, முந்திச் செல்லக் கூடாத இடங்கள், மக்கள் அதிகமாக நடமாட்டமுள்ள பகுதி, வீதியின் சிறுபாங்கான பகுதி, வீதி குறுக்கறுப்பு பகுதி, இரண்டு வெள்ளை கோடுகள் கொண்ட பகுதி இவற்றை கவனத்தில் கொள்ளத் தவறினால் 4 புள்ளிகள், பாதசாரி கடவையில் நிறுத்தாமல் பயணித்தால் 6 புள்ளிகள், மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் போது தலைக்கவசம் அணியாது இரண்டுக்கு மேற்பட்ட நபர்களை ஏற்றிச் செல்லுதல் 4 புள்ளிகள், வாகனத்தை செலுத்தும் போது கையடக்கத் தொலைபேசிகளை பயன்படுத்தல் 4 புள்ளிகள்.(அ-7)

## பேருந்து விபத்தில் கடற்படையினர் காயம்

(கொழும்பு)

மூதூர் பச்சனூர் பகுதியில் கடற்படையினரின் பேருந்து வண்டியொன்று விபத்துக்குள்ளானதில் 20 கடற்படையினர் காயமடைந்துள்ளனர்.

பிற்பகல் இரண்டு மணியளவில் குறித்த பேருந்து வண்டி வீதியை விட்டுவிலகி ஏரியொன்றினுள் வீழ்ந்து விபத்துக்குள்ளானதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோகண தெரிவித்துள்ளார்.

குறித்த பேருந்து வ ்டி சேருநுவரவில் இருந்து நிலாவெளி நோக்கிப் பயணித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

காயமடைந்தவர்களில் 13 பேர் மூதூர் வைத்தியசாலையிலும் ஒன்பது பேர் திருகோணமலை வைத்தியசாலையிலும் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)



நயினாதீவு நாகவிகாரையில் நேற்று முன்தினம் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, வடமாகாண கடற்படைக்கட்டளைத்தளபதி ரவி விஜய குணவர்த்தன, ஜனாதிபதியின் மகன் யோசித ராஜபக்ஷ ஆகியோர் வழிபாட்டில் ஈடுபட்டதைப் படத்தில் காணலாம்.

(படம்:-என்.குமார்)

# குரோதத்தை குரோதத்தால் வெற்றிகொள்ள முடியாது

## ஜனாதிபதி தெரிவிப்பு



அரசாங்கம் இலவசக் கல்விக்கும் சுகாதாரத்துக்கும் முக்கியமளித்து ஏனைய சகல உட்கட்டமைப்பு வசதிகளையும் அபிவிருத்தி செய்வதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அமரர் அநுர பண்டாரநாயக்காவின் நினைவாக வத்துபிட்டிவலவில் சிகிச்சை கட்டடத்தையும் இரத்த வங்கியையும் திறந்து வைக்கும் வைபவத்தில் ஜனாதிபதி உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அநுர பண்டாரநாயக்காவின் இதயத்தை நன்கு தெரிந்த ஒருவரென்ற வகையில் அவ ரைப் பற்றிய பல விடயங்களைக் கூற இய லும் என்றும் தெரிவித்தார். பெற்றோர் என்ற வகையில் குரோதத்தை நாம் குரோதத்தால் வெற்றிகொள்ள முடியாது என்பதை நம்புகிறோம். 30 வருட கால பயங்கரவாதத்தை தோற்கடித்ததோடு நாட்டின் சகல மக்களும் சாதி, மத, பிரதேச பேதங்களை மறந்து ஒற்றுமையுடன் செயற்படுகின்றனர்.

இன்று பயங்கரவாதத்தைத் தோற்கடித்த பின் தமிழ் வாலிபரோ சிங்கள வாலிபரோ பயங்கரவாதத்தால் மரணிப்பதில்லை. அப்படியான சமாதான சூழலில் மனித உரிமைகள் பற்றிய குற்றச் சாட்டுக்கள் எமது நாட்டின் மீது சுமத்தப்படுகின்றன. நாட்டுக்குச் சுதந்திரம் கிடைக்கும் போது செயற்பட்ட விதத்தில் அபிவிருத்திப் பணிகளிலும் மக்கள் செலுத்தும் ஒத்துழைப்பை நான் பாராட்டுகின்றேன்.

பண்டாராநாயக்காவின் தரிசனத்தை முன்கொண்டு செல்ல அநுரபண்டார நாயக்க அர்ப்பண சிந்தனையுடன் பாடுபட்டார். அவர் மீண்டும் நம் மத்தியில் பிறந்து நாட்டுக்கும் இனத்துக்கும் சேவை செய்ய வேண்டுமென்று பிரார்த்திருக்கின்றேன் என்றார்.

வரலாற்றுப் புகழ்மிகு அத்தனகல ரஜமகா விகாரையின் அதிபதி கலாநிதி சங்கைக்குரிய பன்னல ஸ்ரீ ஆனந்த தேரர் உட்பட மகாசங்கத்தினரின் மதவழிபாடுகளுடன் புதிய கட்டடத்தின் பெயர்ப்பலகையை ஜனாதிபதி திரைநீக்கம் செய்து வைத்ததோடு அநுர பண்டாரநாயக்கவின் உருவப்படம் ஒன்றையும் ஜனாதிபதி திரை நீக்கம் செய்து வைத்தார். (அ-2)

# கொழும்பில் குடிநீர் சுவையில் மாற்றம்; மக்கள் அச்சமடைய தேவையில்லை

(கொழும்பு)

கொழும்பிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் விநியோகிக்கப்படும் நீரின் சுவையில் கடந்த ஒரு வாரகாலமாக மாறுதல் ஏற்பட்டுள்ளமைக்கு காரணம் குடிநீருடன் சற்று கூடுதலான அளவு கடல் நீர் கலந்துள்ளமையேயாகுமென நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இதனால் குடிநீரின் தரம் எந்த வகையிலும் பாதிப்படையவில்லையெனக் கூறிய அவர், இதற்காக பொதுமக்கள் அச்சமடையத் தேவையில்லையெனவும் கூறினார். கடல் அலைகளின் எழுச்சி காரணமாக கடந்த சில நாட்களாக களனி கங்கையில் சற்று கூடுதலான அளவில் கடல் நீர் கலந்துள்ளது.

இருப்பினும் இது உடனடியாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. இதன் காரணமாக வழமைக்கு மாறாக நீரின் சுவையில் வித்தியாசம் காணப்பட்ட போதிலும் அதன் குணம் மாற்றமடையவில்லை. போதியளவு குளோரின் சேர்க்கப்பட்டு சுத்திகரிக்கப்பட்டதன் பின்னரே இந்நீர் நுகர்வுக்கென விநியோகிக்கப்படுவதனால் பொதுமக்கள் இது குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லையெனவும் நீர்வழங்கல் சபையின் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

(அ-2)

# தீராப்பிரச்சினைகளை தீர்க்க மக்களை சந்தித்தார் வாசுதேவ

(கொழும்பு)

பொதுமக்களின் நெருக்கடிகளை ஆராயும் நோக்கில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார நேற்றைய தினம் கிளிநொச்சிக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டார். கிளிநொச்சி சென்ற அவர் அன்றைய தினம் கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலயத்தில் பொது மக்களை சந்தித்துள்ளார்.

இதனிடையே கிளிநொச்சி மாவட்ட புதிய செயலக கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவும் அமைச்சர் தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது செய்தியாளர்கள் மத்தியில் கருத்து வெளியிட்ட அவர், நாங்கள் இன்று கிளிநொச்சி மக்களை சந்திக்க வந்திருக்கின்றோம். எமது கட்சியின் உறுப்பினர்கள் சிலர் என்னை கிளிநொச்சிக்கு மக்கள் குறைகளை ஆராயுமாறு வேண்டுகோள் விடுத்தார்கள். அதன்படி மக்களின் தனிப்பட்ட பிரச்சினைகள், பொதுப் பிரச்சினைகள் என்பவற்றை கேட்டறிந்தேன். பொது பிரச்சினைகள் குறித்து நான் உரிய தெளிவை பெற்றுக்கொண்டேன்.

இதற்கமைய காணிகளை மீளப் பெற்றுக் கொள்வதில் உள்ள பிரச்சினைகள், விவசாயம் மற்றும் வாழ்வாதாரம் என்பன குறித்து அவர்கள் என்னிடம் கூறினார்கள். அதற்கான அரசாங்க உதவிகளை அவர்கள் கோரியிருந்தார்கள்... பாதைகள் சீரமைப்பு மற்றும் மாணவர்கள் பாடசாலை செல்வதற்காக போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய தேவைப்பாடுகளும் இங்கு உள்ளன.

இதனைவிட சிறைச்சாலைகளில் இருக்கின்ற இளைஞர், யுவதிகளை விடுவிக்க வேண்டும் எனவும் மக்கள் மத்தியில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அவர்களில் பெரும்பாலானவர்கள் தாய், தந்தையர்கள் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். அவர்களை மனிதாபிமான அடிப்படையில் விடுதலை செய்ய வேண்டும் என்பதற்கு நான் இணங்குகிறேன் என்றார். (அ-2)

# துஷ்பிரயோகச் சம்பவங்கள் நாட்டில் அதிகரித்து உள்ளன

## அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பெண்கள், சிறுவர்கள் மீதான துஷ்பிரயோக செயற்பாடுகள் நாட்டில் அதிகமாகி வருவதுடன் குறிப்பாக யாழ். குடாநாட்டில் பால்ய வயதினர் மீதான துஷ்பிரயோக செயற்பாடுகள் அதிகரித்து காணப்படுகின்றது என சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்துள்ளார்.

புத்தூர் வடக்கு மந்திரி மலை தமிழ்மதி சனசமூக நிலையத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழாவும் பலநோக்கு மண்டப திறப்பு விழா நிகழ்வுகள் நேற்று முன்தினம் (11) சனசமூக நிலையத்தலைவர் கஸ்தூரன் தலைமையில் நடைபெற்றபோது நிகழ்வின் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் ,

தவறான அரசியல் வழிநடத்தல்கள் காரணமாகவே யுத்தம் உருவாகியது. ஆனால், யுத்த காலத்தை விட தற்போதைய சூழலிலேயே சமூகப் பிரச்சினைகள் அதிகமாக உருவாகி வருகின்றது.

இதனால் ஒரு முடிவு செய்துள்ளோம். பெண்கள், சிறுவர்கள் மீதான குற்றச் செயல்களில் ஈடுபடுவோருக்கு அதிகபட்ச தண்டனைகளை வழங்க முடிவு செய்துள்ளதாக குறிப்பிட்டதுடன் இக் குற்றத்தடுப்பு நடவடிக்கையை யாழ்.குடாநாட்டில் இருந்து ஆரம்பிக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இந் நிகழ்விற்கு விசேட அதிதியாக கலந்து கொண்ட ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் வலி.கிழக்கு (கோப்பாய்) பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தனதுரையில்,

இப்பிரதேசத்தின் உடனடித்தேவையான வீதிப் புனரமைப்பு தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் சனசமூக நிலையத்திற்கான மின் இணைப்பை மேற்கொள்ள சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு விரைவான நடவடிக்கை மேற்கொள்வதாக உறுதியளித்தார். (அ-2)

## ஊஞ்சல் கயிறு இறுக்கி சிறுவன் உயிரிழப்பு

விளையாடிக்கொண்டிருந்த சிறுவன் ஒருவனின் கழுத்தில் ஊஞ்சல் கயிறு இறுகியதால் அச்சிறுவன் உயிரிழந்த சம்பவம் பொகவந்தலாவையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

தமிழ் பாடசாலையில் தரம் ஐந்தில் கல்வி கற்கும் புவனேஷ்வரன் கிஷாந்தன் (வயது10) என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்தவன் ஆவான்.

இச்சிறுவன் ஊஞ்சல் கட்டி விளையாடிக்கொண்டிருந்த போதே அவனது கழுத்தில் ஊஞ்சல் கயிறு இறுகியதாக பொகவந்தலாவை பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக போக வந்தலாவை மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (அ-2)

# கூட்டமைப்பை விலைகொடுத்து வாங்க சில தீயசக்திகள் முயற்சிக்கின்றன

## அரியநேத்திரன் எம்.பி

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜெனீவா செல்லாத காரணத்தை காட்டி தமிழத்தேசியக் கூட்டமைப்பினை பிளவு படுத்துவதற்கு சில தீய சக்திகளும் அரச சார்பு ஊடகங்களும் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக குற்றம்சாட்டியுள்ள மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் இந்த விடயத்தில் தமிழ் மக்கள் விழிப்புடன் நடந்து கொள்ள வேண்டுமென்றும் அவர் பகிரங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

களுவங்கேணி விவேகானந்த வித்தியாலயத்தின் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே இந்த வேண்டுகேளை விடுத்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு ஜெனீவா அமர்வுக்கு செல்லவில்லையென பலரும் பலவிதமாக கதைகிறார்கள்.

இவர்களின் இந்த விமர்சனங்களையும் கருத்துக்களையும் நாம் வரவேற்கின்றோம். மேலும் இவர்களின் கருத்துக்களை பரிசீலனை செய்வதற்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தயாராக இருக்கின்றது. இதில் எதுவித மாற்றுக் கருத்துகளுக்கும் இடமில்லை.

எமது மக்களும் புலம் பெயர்ந்து வாழ்கின்ற மக்களும் எமது தமிழ் தேசியத்தை நேசிக்கின்ற ஊடகங்களும் இதனை நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

இப்பொழுது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் இருக்கின்ற 13 பாராளுமன்ற உறுப்பினர்களில் இருந்து ஒருவரை கூட விலைக்கு வாங்கலாம் அல்லது பிரிக்கலாம் என்பதை அரசாங்க தரப்பினர் எண்ணுவது பகல்கனவாகும்.

இந்த சதி வலைக்கு அரசாங்கத்துடன் இருந்து செயற்பட்டு கொண்டிருக்கின்ற சில ஊடகங்கள் உறுதுணையாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தயவு செய்து இந்த உண்மையை எமது மக்கள் கண்டிப்பாக புரிந்து கொள்ள வேண்டும்.

இவர்கள் நினைப்பதை போன்று அல்லது அரசாங்கம் நினைப்பதை போன்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுன்ற உறுப்பினர்களில் ஒருவரை கூட விலைக்கு வாங்கிவிட முடியாது.

எனவே, எங்களுக்கு வாக்களித்த மக்களும் எங்களை நேசிக்கின்ற புலம்பெயர்ந்த மக்களுக்கும் எந்தவித துரோகங்களும் நாங்கள் செய்ய மாட்டோம். யாராவது செய்வதையும் நாங்கள் அனுமதிக்கமாட்டோம் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

## சுவிஷேச மாநாடு

(யாழ்ப்பாணம்)

இயேசு ஜீவிக்கிறார் சபையின் 34 ஆவது வருட சுவிஷேச மாநாடு 16,17,18 ஆம் திகதிகளில் மாலை 5 மணி முதல் யாழ். நகர சபை மைதானத்தில்(துரையப்பா மைதானம் அருகில்) நடைபெறவுள்ளது.

இவ் ஆசீர்வாத பெருவிழாவில் தேவ செய்தியினை எம். ஆர் இராஜேந்திரம், சி.வி இராஜேந்திரம் ஆகியோர் வழங்கவுள்ளனர். (அ-7)

# விடுதலைப்புலிகளை நசுக்கியாச்சு; குரலை நசுக்க வேண்டும் இறைவா!




தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் குரலை சர்வதேசத்தில் நசுக்க வேண்டும் என்று கோரி தென்னிலங்கை அரசியல்வாதிகள் பலரும் போதி பூசை வழிபாடுகளை ஒழுங்கு பண்ணி நடத்தி வருகிறார்கள்.

கண்டியில் உள்ள விகாரையிலும் இவ்வழிபாடுகள் சில இடம்பெற்று இருக்கின்றன.

அமெரிக்க கொடி, புலிச்சின்னம் ஆகியவற்றுடன் பதாகைகள் வெளியிட்டு வீதிகளில் தொங்கவிட்டு இருக்கின்றனர் பல அரசியல்வாதிகள்.



ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பை சேர்ந்த டிலும் அமுனுகம எம்.பியால் ஒழுங்கு செய்யப்பட்ட போதி வழிபாடு குறித்த பனர் ஒன்று பேராதனையில் உள்ள வீதி ஒன்றில் தொங்குவதை படத்தில் காணலாம். (அ-2)

# நேர்முகத்தேர்வுக்கு திகதி பிற்போடல்

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய கலாசாலை ஆங்கில பாடநெறிக்கான ஆசிரிய பயிற்சி நேர்முகத் தேர்வு எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நடைபெறவுள்ளது என கல்வி அமைச்சின் ஆசிரிய கல்வி நிர்வாக பிரிவை மேற்கோள்காட்டி கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் வே. கா. கணபதிப்பிள்ளை அறிவித்துள்ளார்.

இந்நேர்முகத்தேர்வு நாளை மறுதினம் வியாழக்கிழமை மகரகம ஆசிரிய கலாசாலையில் நடைபெற இருந்ததே பிற்போடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-7)

யா/ புத்தூர் மடிஹே பஞ்ஞசீக வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் சான்றிதழ் வழங்கி கௌரவித்த வீராங்கனைகளுடன் விருந்தினர்கள், அதிபர் ஆகியோர் நிற்பதையும் படங்களில் காணலாம்.

# இந்தியாவின் கோரிக்கையை நிராகரித்த பிரிட்டன் பிரதமர்

ஒலிம்பிக் போட்டிகளுக்கான பங்களிப்புகளிலிருந்து டவ் கெமிக்கல் நிறுவனத்தை நீக்க முடியாது என்று பிரிட்டன் பிரதமர் டேவிட் கருமன் தெரிவித்துள்ளார்.

லண்டனில் இந்த வருடத்திற்கான ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற உள்ளது.

ஒலிம்பிக் போட்டிகளுக்கான பங்களிப்புகளில் போபால் விஷவாயு சம்பவத்தில் தொடர்புடைய டவ் கெமிக்கல்ஸ் நிறுவனமும் பங்கேற்கிறது.

இதற்கு இந்தியா எதிர்ப்பு தெரிவித்ததோடு மட்டுமல்லாமல் டவ்கெமிக்கல்ஸ் நிறுவனத்தை பங்களிப்புகளிலிருந்து நீக்க வேண்டும் என்ற கோரிக்கையையும் வைத்திருந்தது. இந்நிலையில் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் டவ் நிறுவனத்தினை கைவிடும் பேச்சுக்கே இடமில்லை என்று உறுதியாக தெரிவித்துள்ளார்.

தனியார் ஊடகம் ஒன்றிற்கு அளித்த பேட்டியில் அவர் கூறிதாவது,லண்டனில் இந்தாண்டு நடைபெற உள்ள ஒலிம்பிக் போட்டியின் பங்களிப்பு முழுவதையும் டவ் கெமிக்கல் நிறுவனம் மற்றும் பன்னாட்டு ஒலிம்பிக் குழு உரிமை பெற்றுள்ளது.

பன்னாட்டு ஒலிம்பிக் குழுவிற்கும், டவ் கெமிக்கல்ஸ் நிறுவனத்திற்கும் எந்த பிரச்சினையும் இல்லை. இந்த சூழ்நிலையில் இந்தியாவின் கோரிக்கை குறித்து தற்போது விவாதிக்க இயலாது என்று தெரிவித்துள்ளார்.

# யூ டி யூப்பில் இணைந்த பிரதமர் அலுவலகம்



சமூகவலைதளங்களில் தனது கணக்குப் பதிவுகளை தொடங்கியுள்ள பிரதமர் அலுவலகம் தற்போது யூ டியூப்பிலும் இணைந்துள்ளது.

prime minister office india என்ற பெயருடன் தொடங்கப்பட்டுள்ள இந்த சேவையின் மூலம் நாட்டில் உள்ள ஒவ்வொரு குடிமகனும் பிரதமர் அலுவகத்துடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

பிரதமரின் தொலைத்தொடர்பு துறை ஆலோசகரா ஊடகவியலாளர் பங்கஜ் பச்சோரி நியமிக்கப்பட்டதிலிருந்து பிரதமர் அலுவலகம் அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சிகளை அதிகளவில் தன்வசப்படுத்தி நவீனமயமாக வருவது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# ஜனாதிபதி பிரதீபா பட்டேலின் உரைக்கு கோஷம் எழுப்பிய தி.மு.க

(புதுடில்லி)

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதி உரை தொடங்குவதற்கு முன்பாக ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் அங்கம் வகிக்கும் தி.மு.க.எம்.பிக்கள் கோஷம் எழுப்பி கவனத்தை ஈர்த்தனர்.

ஐ.நா. மனித உரிமை குழுவின் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களிக்க வேண்டும் என்று வலியுறுத்தியும் தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையினர் தாக்குதலைக் கண்டித்தும் அவர்கள் கோஷம் எழுப்பினர்.

பின்னர் சிறுபான்மையினருக்கு உள் ஒதுக்கீடு வழங்குவது தொடர்பாக தனது உரையின் போது ஜனாதிபதி பிரதீபா பட்டேல் குறிப்பிட்டபோது நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் நேற்று காலை ஜனாதிபதி பிரதீபா பட்டேல் உரையுடன் தொடங்கியது.

ஜனாதிபதி பிரதீபா பட்டேல் தனது உரையைத் தொடங்குவதற்கு முன்பாக தி.மு.க. எம்.பிக்கள் கோஷம் எழுப்பியது சற்று நேரம் சலசலப்பை உண்டாக்கியது. (அ-2)

## பாரதச் செய்தி



உத்தர பிரதேச முதல்வராக பதவியேற்கவுள்ள சமாஜ்வாதி கட்சி மாநிலத் தலைவர் அகிலேஷ் யாதவ், கட்சியின் மூத்த தலைவர்கள் முகமது அசம் கானே (இடது) மற்றும் சிவ்பால் சிங் யாதவ் (வலது) ஆகியோருடன் கவர்னர் ஜோஷியை சந்தித்து பூங்கொத்து வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# இலங்கையில் கால் பதிப்பது சீனாவா? பாகிஸ்தானா?

## அமெ. பிரேரணைக்கு காரணம் இதுவே

(சிதம்பரம்)



தமிழர்களுக்கு காங்.கட்சி விரோதமானது அல்ல என்பதை மக்களுக்கு உணர்த்த வேண்டும் என காங்.மாநிலத் தலைவர் ஞானதேசிகன் பேசினார்.


கடலூர் மாவட்டம் காட்டுமன்னார் கோவிலில் நடந்த இளைய பெருமாள் சிலை திறப்பு விழாவில் பங்கேற்ற அவர் பேசியதாவது, காங். கட்சியில் மட்டுமே பேசுவதற்கு ஜனநாயக உரிமை உள்ளது. வேறு எந்தக் கட்சிக் கூட்டத்திலும் கட்சியினர் பேசுவதற்குகூட உரிமை கிடையாது. இலங்கை முல்லைப்பெரியாறு மீனவர்கள் பிரச்சினை என எதுவாக இருந்தாலும் காங். கட்சி தமிழர்களுக்கு விரோதமானவர்கள் போல் சித்திரிக்கப்படுகிறது. அப்படிப்பட்ட எண்ணத்தை முறியடிக்க வேண்டும். இலங்கையில் காலூன்றுவது சீனாவா பாகிஸ்தானா என போட்டி போடும் நிலையில் அவைகளை முறியடிக்க இலங்கை அரசு மீது மனித உரிமை மீறல் குறித்த தீர்மானத்தை அமெரிக்கா கொண்டு வந்துள்ளது.

இலங்கையை மிரட்டி வர்த்தக இலாபத்திற்காக அந்த தீர்மானத்தை அமெரிக்கா கொண்டு வந்திருந்தாலும் இந்திய அரசு ஆதரிக்க வேண்டும் என தமிழக காங். மத்திய அரசை வலியுறுத்தி வருகிறது. இலங்கை மீனவர்களை விடுவிக்கும் முயற்சியில் மத்திய அரசு வெற்றி பெற்றுள்ளது. நாம் தமிழர்களுக்கு விரோதிகள் இல்லை என்பதை உணர்த்த வேண்டும் என அவர் பேசினார். (அ-2)

# அமெரிக்க விழாவுக்கு செல்ல 25 இலட்சம் கேட்ட நடிகர் வடிவேலு

## தமிழ் சங்கத்தினர் அதிர்ச்சி

(சென்னை)



நடிகர் வடிவேலுவின் அரசியல் நடவடிக்கைகள் திரையுலகில் அவருக்கு பின்னடைவை ஏற்படுத்தின. கடந்த சட்டசபை தேர்தலில் தி.மு.க. கூட்டணியை ஆதரித்தார். விஜயகாந்தை கடுமையாக விமர்சித்து பிரசாரம் செய்தார்.

தேர்தலில் தி.மு.க. அணி தோல்வியை தழுவியதால் வடிவேலுவுக்கு சினிமா வாய்ப்புக்கள் குறைந்தது. நில ஆக்கிரமிப்புகள் சர்ச்சைகளையும் சந்தித்தார். தற்போது அவருக்கு பட வாய்ப்புக்கள் இல்லை.

கவிஞர் வைரமுத்து சமீபத்தில் ஒரு விழாவில் பேசும் போது வடிவேலுவை மிகச் சிறந்த காமெடி நடிகர் என்றும் அவரை திரையுலகினர் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

சினிமாவில் அவர் பிசியாக இருந்த போதும் இதுபோன்ற அழைப்புக்கள் வந்தன. ஆனால் அவர் போகவில்லை தற்போது கைவசம் படங்கள் இல்லாததால் தமிழ் சங்க விழாவுக்கு வர வடிவேலு ஒப்புக் கொண்டார்.

இதையடுத்து விழா ஏற்பாடுகளை அமெரிக்க தமிழர்கள் தடபுடலாக செய்து வந்தனர். ஆனால் திடீரென்று அமெரிக்க தமிழ் சங்க விழாவில் பங்கேற்க தனக்கு ரூ. 25 இலட்சம் தர வேண்டும் என்று வடிவேலு நிபந்தனை விதித்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

இதனால் தமிழ் சங்கத்தினர் அதிர்ச்சி அடைந்துள்ளனர். இதுகுறித்து அமெரிக்காவில் இருந்து விழாக் குழுவை சேர்ந்த ஒருவர் கூறும் போது வடிவேலு ரூ. 25 இலட்சம் கேட்பார் என்று எதிர்பார்க்கவில்லை.

இவ்வளவு பணத்தை கொடுத்து வடிவேலுவை விழாவுக்கு அழைத்து வர யாருக்கும் விருப்பம் இல்லை. எனவே, வடிவேலு இல்லாமலேயே விழாவை நடத்த முடிவு செய்துள்ளோம் என்றார். (அ-2)

# அகதிகள் முகாமில் இருப்பவர்களுக்கு இலங்கை வருவதற்கு விருப்பமில்லை

## கணக்கெடுப்பில் தகவல்

(திண்டுக்கல்)

அகதிகள் முகாமில் தங்கியிருப்பவர்களுக்கு அரசு உதவித்தொகையை அதிகமாக்கியதையடுத்து அவர்கள் இலங்கை செல்ல விரும்புவில்லை என கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

இலங்கையில் இனக்கலவரம் ஏற்பட்டதையடுத்து 1984 முதல் தமிழர்கள் அகதிகளாக வந்தனர். இவர்கள் தமிழகத்தில் உள்ள 117 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அ.தி.மு.க. அரசு பொறுப்பேற்றவுடன் அகதிகள் முகாமில் உள்ள குடும்பத்தின் தலைவருக்கு ஆயிரம் ரூபாய் அடுத்த பெரியவருக்கு 750 ரூபாய் அதற்கு அடுத்து உள்ளவர்களுக்குத் தலா 400 ரூபாய் வழங்கவும் அரிசி கிலோ 57 காசுக்கு வழங்கவும் உத்தரவிட்டது.

முதியவர்களுக்கு மாதந்தோறும் தனியாக ஆயிரம் ரூபாய் வழங்கவும் உத்தரவிட்டது. தற்போது இலங்கை செல்வதற்கு விருப்பம் குறித்து அனைத்து அகதிகள் முகாம்களிலும் தாசில்தாரர்கள் கணக்கெடுப்பு நடத்தினர். இதில் பலரும் இங்கிருந்து செல்வதற்கு விருப்பம் இல்லை என்றே தெரிவித்துள்ளனர்.

ஆனால், அதற்கான காரணம் கண்டறியப்படவில்லை. அரசின் நலத்திட்டங்களையும் தங்களுக்கு வழங்க வேண்டும் என்று இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கடந்த சில மாதங்களுக்கு முன் ஆர்வமாக சிலர் தமிழகத்தில் உள்ள அகதிகள் முகாமில் இருந்து இலங்கை திரும்பினர். ஆனால், தமிழர் பகுதிகளில் இன்னமும் முழுவதாக நிலைமை சீரடையவில்லை என்று தகவல்கள் அதிகமாக வெளிவருகின்றன. தற்போது அரசு வழங்கும் நிதியும் அதிகரித்திருப்பதால் இலங்கை நிலைமை கண்டு அச்சப்பட்டு இவர்களில் சிலர் திரும்ப விருப்பம் இல்லாமல் இருக்கலாம் என்று கூறப்படுகின்றது. (அ-2)

# பயங்கரவாத நடவடிக்கை சர்வதேசம் எதிர்க்கவில்லை

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளினால் நாட்டில் மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத நடவடிக்கைகளை சர்வதேச சமூகம் எதிர்க்கவில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் 30 ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட பயங்கரவாத நடவடிக்கைள் குறித்து சில நாடுகள் மௌனம் காத்து வந்ததாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள், பாரியளவிலான படுகொலைகள் உள்ளிட்ட பல குற்றச் செயல்களில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டனர்.

எனினும் பயங்கரவாதத்தை இல்லாதொழித்த அரசாங்கத்தின் மீது சில நாடுகள் தற்போது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளன.

உயிரிழப்புக்கள் இடம்பெறாத சந்தர்ப்பத்திலேயே சில நாடுகள் மனித உரிமை மீறல் குறித்து குரல்கொடுத்து வந்துள்ளன.

யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் நாட்டின் சகல இனங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளின் உயிர்களும் பாதுகாக்கப்பட்டுள்ளன.

பலம்பொருந்திய நாடுகளினால் மேற்கொள்ளப்படும் உரிமை மீறல்கள் தொடர்பில் உலக சமூகம் எதிர்ப்பை வெளியிடுவதில்லை என்றார். (அ-2)

# ஜெனீவா பிரேரணைக்கு ஆதரவாக வாக்களியுங்கள்

## அ.சார்பற்ற நிறுவனங்கள் மலேசியாவுக்கு கடிதம்

(கொழும்பு)

அமெரிக்காவினால் இலங்கைக்கு எதிராக மனிதவுரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனைக்கு சார்பாக வாக்களிக்குமாறு மலேசிய பிரதமருக்கு மனுவொன்று அனுப்பப்பட்டுள்ளது.

51 அரச சார்பற்ற அமைப்புகள் ஒன்றிணைந்து இந்த மனுவை மலேசிய பிரதமர் நஜீப் துன் சாக்கிற்கு கையளித்துள்ளார். இந்தியாவை தளமாக கொண்ட 51 அரச சார்பற்ற அமைப்புகளை உள்ளடக்கிய அக்கறையுள்ள பிரஜைகளின் குழு என்ற அமைப்பினரே இலங்கைக்கு எதிராக இந்த கோரிக்கையை விடுத்தள்ளனர்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு ஆதரவளிக்க தவறும் பட்சத்தில் மலேசியா சர்வதேசத்திடம் வெட்கித் தலைகுனிய வேண்டியேற்படும் என அந்த அமைப்பின் இணைப்பாளர் கே. ஆறுமுகம் தெரிவித்தார். எனினும் இது குறித்து இலங்கை அரசாங்க தரப்பினர் இதுவரை எந்தவித நிலைப்பாடுகளும் வெளியாகவில்லை. (அ-2)



வட இந்தியாவில் பிரசித்தி பெற்ற ஹோலி பண்டிகை கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நேற்றைய தினம் கொண்டாடப்பட்டதை படத்தில் காணலாம்.

# இரு மாதங்களில் 29 மரணங்கள்

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த வருடத்தின் முதல் இரண்டு மாதங்களில் மாத்திரம் நாட்டில் 7 ஆயிரத்து 400 பேர் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதில் 29 மரணங்கள் சம்பவித்துள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

கடந்த பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடும் போது ஜனவரி மாதத்தில் டெங்கு நோய் பரவல் அதிகரித்துள்ளது. அதிகமான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்திலேயே இணங்காணப்பட்டுள்ளனர்.

டெங்கு நுளம்பு பரவாதிருக்கும் வண்ணம் சூழலை பாதுகாப்பாக வைத்துக் கொள்வது பொதுமக்களின் கடமை எனக்கூறியுள்ள சுகாதார அமைச்சு தொடர்ந்து காய்ச்சல் காணப்பட்டால் உடன் வைத்தியரை நாடுமாறும் அறிவுறுத்தல் விடுத்துள்ளது. (அ-2)

# முன்னாள் போராளிகளும் அரசியலில் ஈடுபடமுடியும்

## சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்நாட்டில் கிளர்ச்சி செய்த மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர்கள் அரசியலுக்குள் வரமுடியுமானால் ஏன் முன்னாள் விடுதலைப்புலிகள் போராளிகளுக்கு வர முடியாது என புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சர் கேள்வி எழுப்பினார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை சுற்றுலாப் பயணத்தை மேற்கொண்டு நுவரெலியாவிற்கு வருகை தந்த முன்னாள் விடுதலைப்புலிப் போராளிகளிடம் உரையாடிய சந்தர்ப்பத்திலேயே அமைச்சர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

வவுனியா மருதமடு, வவுனியா பூந்தோட்டம், பொலநறுவை வெலிகந்த, பொலநறுவை புதிய சேனாதீர ஆகிய புனர்வாழ்வு முகாமில் இருந்து விடுதலை பெற்று எதிர் வரும் 30 ஆம் திகதி தங்களது கிராமங்களுக்கு செல்விருக்கும் சுமார் 500 ஆண், பெண்போராளிகள் புனர்வாழ்வு அமைச்சின் ஏற்பாட்டில் இந்த சுற்றுலாப்பயணத்தை மேற்கொண்டுநுவரெலியாவிற்குவருகைதந்தார்கள்.

இங்கு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தொடர்ந்தும் கூறுகையில், இந்த நாட்டில் அரசாங்கத்திற்கு எதிராக கிளர்ச்சி செய்த ஜே.வி.பி.அங்கத்தினர்கள் இன்று பாராளுமன்றத்திலும் மாகாண சபைகளிலும் உள்ளூராட்சி சபைகளிலும் உறுப்பினர்களாக இருக்கின்றனர். விடுதலைப்புலிகள் முன்னாள் போராளிகளும் பாராளுமன்றத்திற்கும் மாகாண, உள்ளூராட்சி சபைகளுக்கும் வர முடியும்.

உரிமைகளைள தவறான முறையில் பெற முயற்சிக்ககூடாது. ஜனநாயக ரீதியில் உரிமைகள் பெற்றுக்கொள்ள வேண்டும். மனித உரிமைகள் என்பது சகல மக்களுக்கம் இருக்கின்றது. ஆகையால் புனர்வாழ்வு பெற்றுச் செல்லும் முன்னாள் விடுதலைப் போராளிகளும் ஜனநாயக ரீதியில் அரசியலில் ஈடுபட்டு செயற்பட முன்வர வேண்டும் என கூறினார். (அ-7)

# வள்ளிபுனம் படுகொலை சந்தேக நபர் கைது

முல்லைத்தீவு-வள்ளிபுனம் சுதந்திரபுரம் பகுதியில் இளம் குடும்பஸ்தர் கோரமாக வெட்டிக்கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கொலையுண்டவரின் உறவினர் ஒருவர் சந்தேகத்தின் பேரில் முல்லைத்தீவு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலையுண்டவரான கந்தசாமி மகேந்திரனின் மரணவிசாரணை கிளிநொச்சி நீதிமன்றத்தில் பதில் நீதவான் எஸ்.விஜயராணியினால் மேற்கொள்ளப்பட்டு பிரேத பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

இரவு ஓட்டோவில் வந்த சந்தேக நபர் இவரை வாளால் கோரமாக வெட்டியதாக முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் குறிப்பிடப்பட்டது. (அ-7)

# வெளிவரும் சனல் 4 காணொளியால் இந்தியாவுக்கும் தலையிடிதான்

## இந்திய நாளேடு சுட்டிக்காட்டு

(கொழும்பு)

சனல்-4 வெளியிடப் போகும் அதிர்ச்சி தரும் புதிய காணொளி ஜெனீவாவில் இலங்கை மட்டுமன்றி இந்தியாவையும் கூட சங்கடப்படுத்துவதாக அமையும் என்று இந்திய நாளேடு ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக, அந்த நாளேடு வெளியிட்டுள்ள செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது, பிரித்தானியாவின் சனல்-4 தொலைக்காட்சியின் அதிர்ச்சி தரும் புதிய காணொளி இலங்கையின் போர்க்குற்றங்களை அம்பலப்படுத்தும்.

அது ஜெனீவாவில் அமெரிக்காவின் தீர்மானத்தை எதிர்த்து துணிவுடன் போராடும் சிறிலங்காவின் வெளிவிவகார அமைச்சரையும் கூட இலங்கைப் படையினரின் கொடூரங்கள் குறித்து உடனடி விசாரணை நடத்தக் கோரும் வகையில் அமையக் கூடும்.

கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி எடுக்கப்பட்ட வெளிப்படையான காட்சிகள் வரும் புதன்கிழமை இரவு 10.55 மணியளவில் பிரித்தானியாவில் சனல்-4 தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகவுள்ளது.

இது ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இலங்கை பிரதிநிதிகளை மட்டும் சங்கடத்தில் ஆழ்த்தப்போவதில்லை. இந்தியாவையும் கூட சங்கடத்தில் ஆழ்த்தும் இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. (அ-2)

# ஜெனீவா தீர்மானம் தொடர்பில் பேச கருணாநிதிக்கு உரிமையில்லை

## டி.ராஜேந்தர் தெரிவிப்பு

இலங்கையில் தமிழர்களை கொன்று குவிக்கும் போது மத்திய அமைச்சரவையிலிருந்து வெளியேறாமல் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிக்க வேண்டுமென மத்திய அரசை கேட்க கருணாநிதிக்கு எந்த தகுதியும் இல்லை என லட்சிய தி.மு.க.கட்சியின் தலைவர் விஜய ரி.ராஜேந்தர் தெரிவித்துள்ளார். சிறிவில்லி புத்தூர் சென்ற விஜய ரி.ராஜேந்தர் அங்கு செய்தியாளர்களைச் சந்தித்த போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

காங்கிரஸ் அரசு இலங்கை தமிழர்களுக்கு துரோகம் இழைத்து விட்டது எனவும் முல்லைப் பெரியாறு பிரச்சினையில் கேரளாவில் ஆளும் காங்கிரஸ் அரசை மத்திய அரசு கண்டு கொள்ளாமல் தென் தமிழக மக்களுக்கு துரோகம் இழைத்து விட்டது எனவும் அவர் குற்றம் சுமத்தினார். (அ-7)

# தேர்தல் ஆணையாளர் நேற்று சந்திப்பு

(கொழும்பு)

தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய நேற்றைய தினம் தேர்தல் கண்காணிப்பு குழுக்களை சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது தேர்தல் விவகாரங்கள் தொடர்பில் பல்வேறு விடயங்கள் பேசப்பட்டுள்ளதாக தேர்தல்கள் திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

குறிப்பாக தேர்தலில் வாக்களார் பெயர் பட்டியலில் இடம்பெற்றுள்ள இரட்டைப் பதிவுகள் தொடர்பில் இதன்போது பேசப்பட்டது என கூறப்படுகிறது. (அ-2)

பொய்யால் கவரப்பட்டவன் மனம் நல்ல விஷயங்களை சுவை காணாது.

—ஹொரேஸ்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# எட்டாங் கட்டளைக்கு எழுதும் தீர்ப்புப் போன்றது

ஜெனிவாத் தீர்மானம் இலங்கையைப் பெரிதாகக் கட்டுப்படுத்தாது என்று இலங்கைக்கான ஜெனிவாவின் விசேட தூதுவர் தமரா குணநாயகம் தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடரில் இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்படும் தீர்மானம் நிறைவேற்றப்படுமாயினும் அது இலங்கையைக் கட்டுப்படுத்தாது எனத் தமரா குணநாயகம் கூறுவதானது 'சுய ஆற்றுகை' சார்ந்த விடயம்.

எனவே அதுபற்றி யாரும் அதிகம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லை.

முன்பெல்லாம் இலங்கையில் 'எட்டாங் கட்டளைக்கு எழுதல்' என்ற நீதிமன்றத் தீர்ப்பு முறை இருந்தது. அந்தத்தீர்ப்பு முறையானது சம்மந்தப்பட்டவரின் கௌரவம் சார் விடயத்தை பாதிப்பதாக இருக்கும்.

எட்டாம் கட்டளைக்கு எழுதப்பட்டவர் என்றாலே அவர் தொடர்பாக எதிர்மறையான சிந்தனையே மற்றவரிடம் வெளிப்படும்.

எட்டாம் கட்டளைக்கு எழுத்தப்பட்டவர் மேடை ஏறி எவ்வளவுதான் நியாயத்தை முன்வைத்தாலும் அவை அரங்கேற மாட்டா.

அது போன்றதுதான் இலங்கைக்கு எதிரான ஜெனிவாத் தீர்மானமும்.

இலங்கை அரசு போர்க்குற்றம் இழைத்துள்ளது. அது தமிழர்களை இரண்டாம் தரப்பாகவே கருதிவந்துள்ளது என்ற வாதங்களை மெய்ம்மைப்படுத்துவதாக ஜெனிவாத்தீர்மானம் அமையும்.

இலங்கைக்கு எதிரான ஜெனிவாத் தீர்மானம் நிறைவேற்றப்படும் சந்தர்ப்பத்தில், அது தொடர்பில் பதில் அறிக்கை ஒன்றை இலங்கை அரசானது, மனித உரிமை பேரவைக் கூட்டத் தொடரில் முன்வைக்கும் என்று தமரா கூறியுள்ளார்.

தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் அதனைக் குறை கூறுவதாகவோ அல்லது மேற்குலகம் இலங்கைக்குத் துரோகம் இழைத்துவிட்டது என்று கர்ச்சிப்பதாகவோ அந்தப் பதிலறிக்கை இருக்க முடியாது.

பதிலறிக்கை, தீர்மானத்தைக் கண்டிப்பதாக இருந்தால் அது நாற்பத்தேழு நாடுகள் அங்கம் வகிக்கும் ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையை அவமரியாதைப்படுத்துவதாக அமையும்.

எனவே இலங்கையின் பதிலறிக்கை தீர்மானத்தில் முன்மொழியப்பட்டவற்றுக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பதாகவே அமைய வேண்டும்.

அதிலிருந்து இலங்கை அரசு மீறுமாக இருந்தால், அது அரசின் அறியாமையின் உச்சகட்டமாக இருக்கும் என்றே கூறவேண்டும்.

# துஷ்பிரயோகங்களில் ஈடுபட்டால் ஆயுள் முழுவதும் சிறை வைக்க வேண்டும்

## அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பெண்களுக்கு எதிரான வன்முறையில் ஈடுபடுவோர் மற்றும் சிறுவர்களை துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்குவோர் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அத்தகையோரை வாழ்நாள் முழுவதும் சிறையில் அடைக்க வேண்டும் என சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த தெரிவித்துள்ளார்.

யு.ஆர்.பிரென்ட் பவுண்டேசன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற சர்வதேச மகளிர் தினக்கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் பால் நிலை சமத்துவத்தில் இலங்கை ஏனைய நாடுகளுக்கு முன் உதாரணமாக உள்ளது.

சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார அமைச்சினால் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிராக இடம்பெற்று வரும் வன்முறைகளைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பெண்பிள்ளைகளை பாதுகாப்போம் என்னும் தொனிப்பொருளில் இந்தவருடம் எமது அமைச்சு சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பல செயற்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளது.

எமது நாட்டில் குறிப்பாக வடக்கிலும் கிழக்கிலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளும் சிறுவர் துஷ்பிரயோகங்களும் அதிகரித்து காணப்படுகின்றன.

இவற்றைக் கட்டுப்படுத்த வேண்டுமானால் பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை வாழ்நாள் முழுவதும் சிறை வைக்க வேண்டும். அப்போதுதான் இவற்றைக் குறைக்கவோ முற்றாக கட் டுப்படுத்த முடியும்.

இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு ஊடகங்களின் பங்களிப்பும் மிகவும் அவசியம்.

ஊடகங்கள் பெண்கள் மற்றும் சிறுவர்களுடன் தொடர்புடைய விடயங்களை கையாளும் விதம் அவர்களுக்கு மீண்டும் பாதிப்பை ஏற்படுத்துவதாகவே உள்ளது.

சர்வதேச நாடுகளின் அழுத்தங்களுக்குமத்தியிலும் இந்தநாட்டில் ஜனாதிபதி பாரிய அபிவிருத்தி பணிகளை மேற் கொண்டு வருகின்றார்.

பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை நாடளாவிய ரீதியில் நியமித்து இவ்வாறு பெண்களுக்கு எதிரான வன்முறைகள், சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்களைக் கட்டுப்படுத்த ஜனாதிபதி ஒத்துழைப்பு வழங்கியும் வருகின்றார்.

இதேவேளை இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, வடமாகாணத்தின் பிரதம செயலாளர் திருமதி விஜயலக்சுமி ரமேஸ், ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வஸ்திரி அலன்ரின், யாழ்.அரச அதிபர் திருமதி இமல்டா சுகுமார், யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, யு.ஆர்.பிரெண்ட் பவுண்டேசன் நிறுவனத் தலைவர் க.செவ்வேள், ஜனாதிபதியின் செயலாளரின் மனைவி திருமதி இந்திராணி சுகதாஸ, வடமாகாண கலாசார திணைக்களப் பணிப்பாளர் திருமதி ஸ்ரீதேவி எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-6)

# தாதியர்களுக்கு மீள் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மாகாணசபை நிர்வாகத்தின் கீழ் இயங்கும் வைத்திய சாலைகளில் நிலவும் தாதியர் பற்றாக் குறையினை நீக்குவதற்கு ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

63 வயதிற்குட்பட்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம். நியமனம் பெற விரும்புவர்கள் இல.572/3 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையுடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஏ)

# நிர்வாகத்தெரிவு

(யாழ்ப்பாணம்)

ஏழாலை சொர்ணாம்பிகை சமேத அம்பலவாணேசுரர் ஆலய பரிபாலன சபை தெரிவு அண்மையில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மானிப்பாய் தொகுதி தலைவர் க.கௌரிகாந்தன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது பரிபாலன சபைத் தலைவராக சி.பாலசுப்பிரமணியம், துணைத்தலைவராக சைவத்திரு சி.கந்தசாமி, செயலாளராக க.மகா தேவன், உப செயலாளராக இ.உதயகுமாரன், பொருளாளராக நா.இலட்சுமி காந்தனும் ஆறு நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் வலி.தெற்கு பிரதேச சபை தவிசாளர் தி. பிரகாஷ், கலாசார உத்தியோகத்தர் திருமதி எஸ்.பத்மராணி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (அ-7)

## 6 கிலோ மீற்றர் நடந்து செல்லும் பரிதாபம்

# இறுப்பிட்டி வரையான பஸ்சேவையை மேற்கொள்ள மக்கள் கோரிக்கை

(புங்குடுதீவு)

வீதிபுனரமைக்கப்பட்டு சுமார் ஒரு வருடம் கடந்துள்ள போதிலும் புங்குடுதீவு இறுப்பிட்டி ஊடான பஸ்சேவையை வடபிராந்திய போக்குவரத்துச்சபை மேற்கொள்ளவில்லை என அப்பகுதி மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

பெருங்காட்டுச் சந்தியிலிருந்து இறுப்பிட்டி வரையிலான சுமார் 6 கிலோமீற்றர் நீளமான இப்பாதையை நான்கு கிராம சேவையாளர் பிரிவை சேர்ந்த 400 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் பயன்படுத்துகின்றனர்.

இந் நிலையில் கடந்த ஒரு வருடத்திற்கு முன்பாக வீதி குன்றும் குழியுமாக காணப்படுவதாகக் காரணம் காட்டி பஸ்சேவைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டன.

இதனால் மக்கள் கால் நடையாகவே தமது பயணத்தை தொடர்ந்தனர். ஆனால் தற்போது வீதி புனரமைக்கபட்டு போக்குவரத்திற்கு இலகுபடுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் தனியார் பஸ்சேவைகள் தினமும் மூன்று தடவைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவை போதுமானதாக காணப்படவில்லை.

இதனால் இறுப்பிட்டி மக்கள் கொளுத்தும் வெயிலில் ஆறு கிலோமீற்றர் தூரத்திற்கு நடந்தே தமது பயணத்தை மேற்கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

என்வே வடபிராந்திய போக்கு வரத்துச்சபையின் யாழ்ப்பாணம்–குறிகாட்டுவான் சேவையில் ஈடுபடும் பஸ்கள் இறுப்பிட்டி கழுதைப்பிட்டி துறைமுகம் வரையும் தமது சகல சேவைகளையும் மேற்கொள்ளவேண்டும் என மக்கள் கோரியுள்ளனர்.

இது தொடர்பில் சகல தரப்பினரிடமும் பல தடவைகள் முறையிட்டுள்ள போதிலும் எந்தவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அவர்கள் குற்றம்சாட்டியுள்ளனர். (எ-1)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## விரலால் கூட தீண்டாதீர்கள்




ஆயிரம் ஆண்டுகள் கங்கையில் நீராடியிருக்கிறேன், காய்கறி உணவை மட்டுமே சாப்பிட்டு வருகிறேன் என்று நீ சொல்வதனால் ஆன்மீகவாதியாகி விட மாட்டாய். இதெல்லாம் உன் பெருமையை பறைசாற்றவே உதவும்

ஆயுள் முழுவதும் நல்லநூல்களை படிப்பதாலும் பேரறிஞர் ஆவதாலும் ஒருவன் ஆன்மீக உணர்வை பெற முடியாது. சொற்பொழிவு நிகழ்த்தி கூட்டம் சேர்ப்பதும் ஆன்மீக பேற்றை அடைய உதவாது. அன்பின் மூலமாகத் தான் ஆன்மீக உணர்வைப் பெற முடியும். அன்பிற்கே அத்தகைய வலிமை இருக்கின்றது.

மனதையும் உடலையும் பலவீனப்படுத்தும் எந்தப் பொருளையும் உன் விரலால் கூட தீண்டக்கூடாது. அதற்குரிய பக்குவத்தை நீ பெற்றால் தான் ஆன்மீகத்தின் நுனியிலாவது கால் வைக்க முடியும்.

ஆன்மீக உணர்வை பெறாத வரை நம் நாடு நிச்சயமாக மறுமலர்ச்சி அடையாது நாட்டை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்ல ஆன்மீக வழிகளை பின்பற்றி நடக்க உறுதியெடுக்க வேண்டும்.

# 90 ரொக்கெட் குண்டுவீச்சு தாக்குதலில் பதினைந்து பாலஸ்தீனர்கள் உயிரிழப்பு



இஸ்ரேலிய விமானங்கள் காசா பகுதியில் நடத்திய விமானத் தாக்குதலில் 15 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர். இந்த சம்பவத்தால் பாலஸ்தீனத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இஸ்ரேலிய படையினருக்கும் ஹமாஸ் அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள காசா பகுதியில் ஏற்பட்ட வன்முறையின் போது திடீரென விமானப் படைத்தாக்குதலை இஸ்ரேல் தொடுத்தது.

இஸ்ரேல் நடத்திய இந்தத் தாக்குதலில் முதலில் 2 பேர் கொல்லப்பட்டதாக தகவல்கள் வெளியாகின. தற்போது இந்த உயிர்ப்பலி 15 ஆக உயர்ந்துள்ளது.

இந்தத் தாக்குதலின் போது ஹமாஸ் அமைப்பைச் சேர்ந்த முக்கிய தலைவர் ஒருவரும் கொல்லப்பட்டார்.

இந்தத் தாக்குதல் குறித்து இஸ்ரேல் பாதுகாப்புப் படையினர் கூறுகையில்,

காசா பகுதியில் இருந்து இஸ்ரேலுக்குள் வெள்ளிக்கிழமை முதல் 90 ரொக்கெட்டுக்களை வீசித் தாக்கினர். இதில் 8 பேர் காயமடைந்தனர். (அ-2)

# ஆப்கானில் 100 ஆண்டுகளுக்கு பின்னர் புகையிரதசேவை


(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தண்டவாளம் அமைக்கும் பணிகள் முடிவடைந்ததால் அங்கு 100 ஆண்டுகளுக்கு பின்னர் புகையிரத சேவை இடம் பெறவுள்ளது. ஆசியா கண்டத்தில் உள்ள நாடுகளில் புகையிரதம் ஓடாத நாடாக ஆப்கானிஸ்தான் இருந்து வந்தது.கிழக்குப் பகுதியில் ஆங்கிலேயர்களின் மிரட்டலுக்கும் வடக்கு பகுதியில் ரஷ்ய இராணுவத்தின் அச்சுறுத்தல் காரணமாகவும் அங்கு ஆட்சி செய்த மன்னர் புகையிரத போக்குவரத்துக்கான நடவடிக்கையை தொடங்கவில்லை.

இதனால் அங்கு புகையிரத தண்டவாளம் அமைக்கும் பணி நடைபெறவில்லை. வீதிகள் மூலம் மட்டுமே வாகன போக்குவரத்து நடைபெற்றது. இந்த நிலையில் 100 ஆண்டுகளுக்குப் பின்னர் தற்போது தான் முதன் முறையாக அங்கு புகையிரத போக்குவரத்து தொடங்கியுள்ளது.

இதை அப்பகுதி மக்கள் ஆர்வத்துடனும் ஆச்சரியத்துடனும் பார்த்தனர். இதுபோன்று மேலும் 6 புகையிரத பாதைகளை அமைக்க ஆப்கானிஸ்தான் அரசு திட்டமிட்டுள்ளது.இதனால் அயல் நாடுகளான பாகிஸ்தான், இந்தியா, ஈரான், சீனா, தஜிரிஸ்தான், துர்க்மெனிஸ்தானுடான வர்த்தகம் விரிவடைய வாய்ப்பு ஏற்படும். இதற்காக ஆப்கானிஸ்தானுக்கு உதவ அண்டை நாடுகள் முன்வந்துள்ளன. (அ-2)

# சர்தாரி மீதான வழக்குகளுக்கு அரசியல் சட்டப்படி முடிவு-கிலானி



பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரி மீதான ஊழல் வழக்குகள் குறித்த விவகாரத்தில் அரசியல் அமைப்புச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கும் என பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ரசா கிலானி தெரிவித்துள்ளார்.

இது குறித்து கடந்த 8 ஆம் திகதி உச்ச நீதிமன்றம் விடுத்த உத்தரவில் சர்தாரி மீதான ஊழல் வழக்குகளுக்கான ஆதாரங்களை பெறுவதற்காக சுவிட்சர்லாந்து அதிகாரிகளுக்கு கடிதம் எழுதி எதிர் வரும் 21 ஆம் திகதிக்குள் தகவல் பெற வேண்டும் எனவும் இதற்காக சட்ட வல்லுநர்களை கலந்தாலோசிக்க வேண்டிய் அவசியம் இல்லை எனவும் பிரதமர் கிலானிக்கு அறிவுறுத்தியிருந்தது.இது குறித்து நேற்று முன்தினம் கிலானி கூறுகையில்,

என்மீது இரு வழக்குகள் உச்ச நீதிமன்றத்தில் உள்ளன. இந்த இரண்டையும் ஊடகங்கள் குழப்பிக் கொள்கின்றன.

மற்றொன்று ஜனாதிபதி சர்தாரி மீதான வழக்குகளை நடத்துவது குறித்த வழக்கு. எனினும் இவ்வழக்கில் நான் அரசியல் அமைப்புச் சட்டப்படி நடந்து கொள்வேன் என்று கிலானி தெரிவித்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (அ-2)

# உலக தரிசனம்

# இறுதிச்சடங்கு ஊர்வலத்தில் பங்கேற்றவர்களில் 13 பேர் பலி

பாகிஸ்தானில் பெஷாவர் அருகேயுள்ள பாதா ஹேர் நகரில் இறுதிச்சடங்கு ஊர்வலம் ஒன்று நேற்று முன்தினம் நடந்தது. அப்போது தற்கொலை படை தீவிரவாதி திடீரென்று வெடிகுண்டை வெடிக்கச் செய்தான். இதில் பொதுமக்கள் 13 பேர் உயிரிழந்தனர். 32 பேர் படுகாயம் அடைந்தார்கள். இந்தத்தாக்குதலில் ஈடுபட்ட தீவிரவாதி உடல் சிதறி உயிரிழந்தான். பால்பேரிங்குகளில் வெடி மருந்து நிரப்பி அதை பெல்டாக அணிந்து வந்து இந்த தாக்குதலை அவன் நடத்தியதாக பொலிஸார் தெரிவித்தனர். ஆனால், இதற்கு எந்த தீவிரவாத அமைப்பும் பொறுப்பு ஏற்கவில்லை. (அ-2)

# பாகிஸ்தானில் இந்து இளம் பெண்கள் கட்டாயத்தின் பேரில் மதமாற்றம்

பாகிஸ்தானில் உள்ள சிந்து மாகாணத்தில் மாதந்தோறும் 20 முதல் 25 இந்து இளம்பெண்கள் கடத்திச் செல்லப்பட்டு கட்டாய மதமாற்றம் செய்யப்படுகின்றார்கள் என்று மனித உரிமை கழகம் குற்றம்சாட்டியுள்ளது. இதனால் அச்சம் அடையும் இந்து குடும்பங்கள் வீடுகளை காலி செய்து விட்டு வேறு இடத்துக்கு செல்லும் அவல நிலை ஏற்படுவதாகவும் கூறப்பட்டது.தற்போது சிந்து மாகாணத்தில் வசிக்கும் இந்து இளம் பெண்கள் கட்டாய மதமாற்றம் செய்து திருமணம் செய்யப்படுகிறார்கள் என்ற தகவல் வெளியாகி இருக்கின்றது. இதுபற்றி பாகிஸ்தான் மனித உரிமை கழக அதிகாரிகள் கூறுகையில்,

சிந்து மாகாணத்தில இந்து சமுதாயத்தை சேர்ந்த இளம்பெண்கள் கட்டாயமாக இஸ்லாம் மதத்துக்கு மாற்றம் செய்யப்படுகின்றார்கள். மாதந்தோறும் சராசரியாக 20 பேர் முதல் 25 பேர் இவ்வாறு மதமாற்றத்துக்கு ஆளாகின்றார்கள். தற்போது கடுமையான சட்டம் இல்லாததால் அதை சில சமூக விரோதிகள் பயன்படுத்திக் கொள்கின்றார்கள். எனவே இந்த கட்டாய மத மாற்றத்தை கருத்தில் எடுத்துக்கொண்டு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் கூறினார். (அ-2)

# ஆப்கானில் பரிதாப சம்பவம்; 15 அப்பாவி மக்கள் உயிரிழப்பு

ஆப்கானிஸ்தானில் நேட்டோ படை முகாம் உள்ளது. அங்கிருந்து அமெரிக்கப் படையை சேர்ந்த வீரர் ஒருவர் நேற்று முன்தினம் அதிகாலை துப்பாக்கியுடன் முகாமை விட்டு வெளியேறினார். அருகில் இருக்கும் நஜீபான், அல்கோசை ஆகிய 2 கிராமத்திற்குள் சென்று வெறி பிடித்தவனை போல துப்பாக்கியால் பொதுமக்களை சரமாரியாக சுட்டான். பின்னர் அவன் இராணுவ முகாமுக்கு திரும்பினான்.

இந்த சம்பவத்தில் ஹஜீசமாத் என்பவரது குடும்பத்தை சேர்ந்த 11 பேரும் மற்றொரு குடும்பத்தை சேர்ந்த 4 பேரும் பரிதாபமாக உயிரிழந்தனர். இது தொடர்பாக நேட்டோ அதிகாரிகள் கூறுகையில்,

சம்பந்தப்பட்ட இராணுவ வீரர் உடனடியாக கைது செய்யப்பட்டார். ஆப்கானிஸ்தான் அதிகாரிகள் ஒத்துழைப்புடன் விசாரணை நடபெறும். இந்த துயர சம்பவத்தில் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு ஆழ்ந்த வருத்தத்தை தெரிவித்து கொள்கின்றோம் என்று தெரிவித்தனர்.(அ-2)

# 100 செயற்கைக்கோள்களை விண்ணில் செலுத்த சீனா களம் இறங்கியுள்ளது

விண்வெளி ஆய்வில் அமெரிக்காவும் ரஷ்யாவும் முன்னணி வகிக்கின்றன. அவற்றுக்கு போட்டியாக தற்போது சீனாவும் களம் இறங்கியுள்ளது. கடந்த ஆண்டு ரஷ்யா 36 செயற்கை கோள்களை விண்ணில் செலுத்தியது. அமெரிக்கா 20 செயற்கை கோள்களை ஏவியது. ஆனால், சீனா 18 செயற்கை கோள்களை அனுப்பியுள்ளது.

எனவே, இந்த ஆண்டு 30 செயற்கை கோள்களை அனுப்ப திட்டமிட்டுள்ளது. அது மட்டுமன்றி வருகிற 2015 ஆம் ஆண்டுக்குள் 100 செயற்கைக் கோள்களை விண்ணில் நிலை நிறுத்தும் முடிவில் தீவிரமாக உள்ளது. அதற்கான நடவடிக்கையில் விஞ்ஞானிகள் இறங்கியுள்ளனர்.

இந்த தகவலை சீனா விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்ப கார்பரேன் துணை ஜெனரல் மானேஜர் ஷாங் ஜியான்ஹெங் தெரிவித்துள்ளார்.

சீனா சந்திரனில் கடந்த 2007 ஆம் ஆண்டு முதல் ஆய்வு மேற்கொண்டு வருகிறது. இந்த ஆண்டு இறுதியில் ஷென்ஷ்-9 என்ற விண்கலத்தில் வீரர்களை அனுப்ப உள்ளது. (அ-2)




ஸ்பெயின் நாட்டு அரசு, சிக்கன நடவடிக்கைகளுக்கான தொழிலாளர் சட்டத்தில் சில திருத்தங்களை கொண்டு வந்துள்ளது. அதற்கு பாராளுமன்றமும் ஒப்புதல் தெரிவித்து விட்டது. இதை எதிர்த்து நேற்று முன்தினம் அந்நாட்டின் 60 நகரங்களில் தொழிற்சங்கங்கள் பிரமாண்டமான பேரணிகளை நடத்தின. தலைநகர் மாட்ரிட்டில் நடந்த பேரணி இது. இதையடுத்து எதிர்வரும் 29 ஆம் திகதி பொது வேலை நிறுத்தத்திற்கு சங்கங்கள் அழைப்பு விடுத்துள்ளன.


# இலங்கை-இந்தியா இன்று மோதல்

இந்தியா, பாகிஸ்தான், பங்காளதேஷ், இலங்கை ஆகிய 4 நாடுகள் பங்கேற்கும் ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் டாக்காவில் நேற்றுமுன்தினம் தொடங்கி நடைபெற்று வருகின்றது.

முதல் ஆட்டத்தில் பாகிஸ்தான் 21 ஓட்டங்களால் பங்களாதேஷை தோற்கடித்திருந்தது.

ஆசிய கிண்ண கிரிக்கெட் போட்டியின் 2-வது லீக் ஆட்டம் டாக்காவில் இன்று நடக்கின்றது. இதில் இந்தியா - இலங்கை அணிகள் மோதுகின்றன.

இந்திய அணி சமீபத்தில் அவுஸ்திரேலியாவில் நடந்த 3 நாடுகள் போட்டியில் இறுதி




ஆட்டத்துக்குக்கூட தகுதி பெறவில்லை.

இதனால் ஆசிய நடப்புச் சம்பியனான இந்திய அணி இழந்த பெருமையை மீட்கப் போராடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அணித்தலைவர் தோனியிடம் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக ஷேவாக் ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் இருந்து நீக்கப்பட்டார்.

அத்தோடு தோனிக்கு எதிரான மற்றொரு மூத்த வீரரான காம்பீருக்கு துணைத் தலைவர் பதவி கொடுக்கப்படவில்லை. இளம் வீரர் விராட் ஹோலிக்கு அந்தப் பொறுப்பு வழங்கப்பட்டது.

டெண்டுல்கர் தனது 100-வது சதத்தை அடிக்க முடியாமல் திணறி வருகின்றார். கடந்த ஒரு ஆண்டுகளாக அவர் சதம் அடிக்கவில்லை. இதனால் ஆசிய கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் முத்திரை பதிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளார்.

காம்பீர், விராட் ஹோலி, ரெய்னா, அணித் தலைவர் தோனி ஆகியோரது துடுப்பாட்டம் நல்ல நிலையில் உள்ளது. இலங்கைக்கு எதிராக அவுஸ்திரேலியாவில் கடைசியாக மோதிய போட்டியில் ஹோலி அதிரடியில் அபார வெற்றி பெற்றது.

இலங்கை அணி துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு ஆகிய 3 துறைகளிலும் சிறப்பாக உள்ளது. அணித்தலைவர் ஜெயவர்த்தன, டில்சான், சங்ககார, சண்டிமல், தரங்க போன்ற சிறந்த துடுப்பாட்ட வீரர்களும் இலங்கை அணியில் உள்ளனர். பந்துவீச்சில் மலிங்க, குலசேகர இந்தியாவுக்கு நெருக்கடியை கொடுக்க உள்ளனர். இன்றைய ஆட்டம் இலங்கை நேரப்படி பிற்பகல் 1.30 மணிக்கு தொடங்குகின்றது.

நியோ கிரிக்கெட் சனலில் இந்தப் போட்டி நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படுகின்றது. இரு அணி வீரர்களின் விபரம் வருமாறு,

**இலங்கை**

ஜெயவர்த்தன (அணித்தலைவர்), மத்யூஸ் (துணைத்தலைவர்); டில்சான், சங்ககார, சண்டிமல், உபுல்தரங்க, திரிமன்னே, பெரேரா, குலசேகர, மலிங்க, மகரூப், லக்மல், பிரசன்ன, சேனநாயக்க.

**இந்தியா**

தோனி (அணித் தலைவர்), விராட் ஹோலி (துணைத்தலைவர்), டெண்டுல்கர், காம்பீர், சுரேஷ் ரெய்னா, யூசுப் பதான், ரோகித் சர்மா, ரவிந்திர ஜடேஜா, இர்பான் பதான், மனோஜ்திவாரி, அஷ்வின், விநேய் குமார், பிரவீண்குமார், அசோக் டிண்டா, ராகுல் சர்மா.

# பாகிஸ்தான் அணிக்கு அபராதம்

ஆசிய கிண்ணப் போட்டிகளின் நேற்று முன்தினப் போட்டியில் தாமதமாக பந்து வீசியதன் காரணமாக பாகிஸ்தான் அணிக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

வழங்கப்பட்ட நேரத்திற்குள் பாகிஸ்தான் அணி இரண்டு ஓவர்களை குறைவாக வீசியிருந்தது. இதன்காரணமாக அணியின் தலைவர் மிஸ்பா உல் ஹக்கிற்கு 40 சதவீத தண்டப்பணமும் ஏனைய வீரர்களுக்கு ஊதியத்தின் 20 சதவீதமும் தண்டப்பணமாக விதிக்கப்பட்டுள்ளது.

போட்டி மத்தியஸ்தர் டேவிட் பூண் இந்த தண்டனையை விதித்தார். சர்வதேச கிரிக்கெட்சபை விதிகளின் படி தாமதமாக வீசப்படும் ஒவ்வொரு ஓவருக்கும் 10 சதவீத தண்டப்பணம் அறவிடப்படுவதோடு அணியின் தலைவருக்கு இரு மடங்கு தண்டபணம் அறவிடப்படுகிறது.

நேற்று முன்தினப்போட்டியில் மிஸ்பா உல் ஹக் தாமதமான ஓவர்கள் காரணமாக தண்டிக்கப்பட்டுள்ள நிலையில், அடுத்த 12 மாதங்களுக்குள் இன்னொரு தடவை மிஸ்பா உல் ஹக் தலைவராக உள்ள வேளையில் பாகிஸ்தான் அணி தாமதமாக பந்துவீசினால் மிஸ்பா உல் ஹக்கிற்கு ஒரு போட்டித் தடை விதிக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை...

அமெரிக்கா தனிநாட்டுக்கான போராட்டத்தை நடத்தி வருகின்றது.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக அமெரிக்காவால் கொண்டு வரப்பட்ட பிரேரணையை எதிர்கொள்ள அரசாங்கம் இந்தியாவின் உதவியை நாடிச் செல்லுகின்றது.

ஆனால் இந்தியா சுயநலவாத நாடாகும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இலங்கைக்கு ஜெனிவாவில் வைத்து உதவி செய்யாது.

பயங்கரவாதத்தை நாட்டில் முற்றாக ஒழித்துள்ள போதிலும் அதனை அனுபவிக்க கூடிய சூழலை வெளிநாட்டு சக்திகளும் பிரிவினைவாத கொள்கைவாதிகளும் விடுவதில்லை. இதனொரு வெளிப்பாடே ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை.

இந்நிலையில், நாட்டைப் பாதுகாக்க தற்போது பங்களிப்புடன் செயற்பட வேண்டியுள்ளது. இலங்கை அரசாங்கம் ஜெனிவாவில் இந்தியாவை நம்பாது மாற்று உத்திகளைக் கையாள வேண்டும் என குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார். (எ-11)

## பௌத்த...

னியாவில் கத்தோலிக்க ஆலயத்திற்குள் நுழைந்து மேற்கொள்ளப்பட்ட அடாவடித்தனத்தை இடதுசாரி முன்னணி கடுமையாகக் கண்டிக்கின்றது.

அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகளான ஜாதிக ஹெல உறுமயவின் சம்பிக்க ரணவக்க மற்றும் தேசிய சுதந்திர முன்னணியின் விமல் வீரவன்ச ஆகியோர் கடவுள்களாக போற்றப்படுகின்றனர்.

அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தால் பொலிஸார் அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்கின்றனர். ஆனால் நாம் ஆர்ப்பாட்டம் நடத்தினால் கண்ணீர்ப் புகைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்படுகின்றது.

இலங்கையில் இனவாதத்திற்கு தூபமிட்ட மேற்குறிப்பிட்ட இருவரும் இன்று கிறிஸ்தவ, இந்து, முஸ்லிம் மதங்களுக்கு எதிராகத் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளனர். அரசாங்கம் இன்று சிங்கள, பௌத்தவாதத்திற்கு அடிபணிந்துள்ளது என அவர் கூறினார். (எ-11)

## பிரபாகர...

பதலளிக்கும் வகையில் உண்மையை உலகுக்கு காட்ட இராணுவம் விரும்புகிறது.

எனவே இறுதிப் போர் குறித்து முறையான, ஒத்திசைவான ஆதாரங்களின் அடிப்படையில் விவரணப் படமொன்றை நாம் தயாரிக்க ஆரம்பித்துள்ளோம் என அவர் கூறினார்.

பிரபாகரனின் மரணம் குறித்த உண்மைத் தகவல்களை இப்படம் கொண்டிருக்கும். சம்பந்தப்பட்டவர்கள், அப்போது அங்கிருந்தவர்கள் இதற்காக நேர்காணப்படுவர்.

இதன்மூலம், நந்திக்கடலில் உண்மையில் என்ன நடந்தது என்பதை உலகம் அறிந்து கொள்ள வாய்ப்புக் கிட்டும் எனவும் அவர் தெரிவித் தார். (எ-11)

## இலங்கை-இந்திய...

மேற்கொண்டது.

அவர்களது விசாரணையின் பிரகாரம் அப்படியொரு சம்பவம் நடைபெறவில்லை என தெரிய வந்துள்ளது.

மீனவர்கள் தாக்கப்பட்டமை தொடர்பாக இந்திய ஊடகங்கள் ஆதாரமற்ற வதந்திகளை செய்தியாக வெளியிட்டிருந்தன.

இலங்கை கடற்படையின் மீது வீண்பழி சுமத்துவதன் பின்னணியில் மறைமுகமான சக்திகள் செயற்படுவதாக தென்படுகின்றது.

இவை இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் இருக்கின்ற ஆழமான புரிந்துணர்வையும் நட்புணர்வையும் கெடுக்கச் சதி செய்துள்ளன.

இலங்கைக் கடற்படையும், இந்தியக் கடற்படையும் அர்ப்பணிப்புடன் மனிதாபிமான நடவடிக்கையில்ஈடுபட்டு வருகின்றன.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் இரு நாட்டு கடற்படையினரும் மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். இந் நடவடிக்கை தொடர்ந்தும் இடம்பெறும். எமது கடற்பரப்பில் மீனவர்களுக்கு இடையூறு ஏற்பட்டால் அவர்களுக்கு உதவ இலங்கைக் கடற்படை எப்பொழுதும் தயாராகவே உள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.(எ-11)


## காரைநகர் அரசடிக்காடு கதிர்காமசுவாமி கோவில்

காரைநகர் மத்தி

### பொது அறிவித்தல்

மேற்படி கோவிலின் பிரதம குருக்களும், பரம்பரைப் பொறுப்பாளரும், அதிபருமாகிய ஸ்ரீநிவாச ஐயர் மேருகிரீசுவரச் சர்மா ஆகிய யான் இத்தால் வட இலங்கை வாழ் முருகனடியார்கட்கும் ஆலயத் தொண்டர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் தெரியப்படுத்துவது யாதெனில்,

23.04.2007 அன்று ஆலய முன்றலில் ப்ரமஸ்ரீ நா. ஞானசம்பந்தசர்மாவைத் தலைவராகவும் திரு. சுப்பிரமணியம் பாக்கியராஜா அவர்களைப் பொருளாளராகவும் தெரிவு செய்த உறுப்பினர்களைக் கொண்ட "ஆலயத் திருப்பணிச்சபை" தொடர்ந்து எனது அனுமதியுடனும், ஆதரவுடனும் தனது தொண்டுகளைச் செவ்வனே செய்து விரைவில் ஆலயப் புனருத்தாரண கும்பாபிஷேக வைபவம் பற்றிய தினங்களைப் பொதுமக்களுக்குப் பிரசுரங்கள் மூலம் தெரியப்படுத்துவார்களென இத்தால் தெரியப்படுத்துகிறேன்.

திருப்பணி வேலைகளின் வரவு - செலவு பற்றிய இடைக்கால அறிக்கை வெளியிட்டு ஆதரவாளர்கள், நன்கொடையாளர்கள் பற்றிய விபரம் பிரசுரிக்கப்படும்.

ஆகவே,மேற்படி திருப்பணிச் சபை தவிர்ந்த வேறெந்த நபர்கட்கும், ஸ்தாபனங்கட்கும், உறவினர்கட்கும் ஆலய சம்பந்தமான பிரசுரங்கள், அறிவித்தல்கள், பத்திரிகை விளம்பரங்கள், செய்திகள் வெளியிடுவதற்கு அனுமதியும், அதிகாரமும் என்னால் வழங்கப்படவில்லையென்பதை உறுதிப்படுத்தி இத்தால் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்.

இங்ஙனம்

| | | |
|---|---|---|
| ஸ்ரீ நிவாச ஐயர் மேருகிரீசுவர சர்மா | நா. ஞானசம்பந்த சர்மா | சு. பாக்கியராஜா |
| அதிபர், பொறுப்பாளர், பிரதம குருக்கள் | தலைவர், திருப்பணிச்சபை | பொருளாளர் |
| 0027126502065 | 0213218803 | 0773302069 |

(7693)


## பிரபாகரன் குறித்த பர...

தொடர்ச்சியாக இலங்கையின் கொலைக் களங்கள் தண்டனைக்குட்படுத்தாத குற்றங்கள் என்ற பெயரில் புதிய ஆவணப் படத்தை அது தயாரித்துள்ளது.

இதில் பாலச்சந்திரன் படுகொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. அதிலேயே பிரபாகரன் குறித்த காட்சிகளும் இடம்பெற்றிருப்பதாகவும் தற்போது தகவல்கள் கூறுகின்றன.

கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் ஓடக்கூடிய இந்தப் புதிய வீடியோவில், உள்ள காட்சிகள் குறித்து இந்த வீடியோ காட்சியில் உள்ள நம்பகத்தன்மையை பரிசோதித்து இவை உண்மைதான் என்று தெரிவித்துள்ள தடயவியல் நிபுணர் பேராசிரியர் டெரிக் பௌண்டர் கூறுகையில்,

சனல் 4 நிறுவனத்திற்கு பாலச்சந்திரன் படுகொலைச் சம்பவம் தவிர்த்து அவனது தந்தை வேலுப்பிள்ளை பிரபாகரன் குறித்த ஒரு படமும் கிடைத்தது.

அதில் பிரபாகரனின் தலையில் மிக பலத்த காயம் காயம் காணப்பட்டது. அவரை நிர்வாணப்படுத்தி சித்திரவதை செய்த பின்னர் துப்பாக்கியால் கொலை செய்ததாக உணர்கின்றோம்.

இந்த வீடியோ காட்சி அதிகார பூர்வமானது அல்ல என்றும் நாங்கள் உணர்கின்றோம். பிரபாகரனும் பாலச்சந்திரன் பாணியில் கொடூரமாக கொல்லப்பட்டிருப்பதாக உணர்கின்றோம்.

அவரது தலையில் பாய்ந்துள்ள குண்டுக் காயத்தைப் பார்க்கும் போது மிக சக்தி வாய்ந்த துப்பாக்கியால் அவர் சுடப்பட்டிருக்க வேண்டும்.

ஒரு ஆயுதப் போரின் போது ஒருவரை ஒரே ஒரு துப்பாக்கிச் சூட்டில் கொல்லுவது என்பது இயலாத காரியம். அது சாத்தியமும் இல்லை.

ஆனால் பிரபாகரன் கொல்லப்பட்ட விதத்தைப்பார்க்கும் போது அவரை உயிருடன் பிடித்து பின்னர் கொலை செய்திருக்க வேண்டும் என்று கருதுகின்றோம்.

மேலும் அசையாத நிலையில் ஒருவரைச் சுடும்போது எப்படிப்பட்ட குண்டுக்காயம் ஏற்படுமோ அதேபோலத் தான் இந்தக் குண்டுக்காயமும் தெரிகிறது. எனவே பிரபாகரனையும் கூட கட்டி வைத்து சுட்டுக் கொன்றிருக்கலாம். நந்திக் கடல் பகுதியில் இருந்து பிரபாகரனின் உடல் மீட்கப்பட்டதாகவும் அரசு கூறியது.

அந்தப்படத்தில் பிரபாகரன் என்று கூறப்பட்டவரின் உடலில் ஒட்டுத்துணி கூட இல்லாமல் இருந்தது. மேலும் அந்தப் படம் தொடர்பாக பல்வேறு சர்ச்சைகளும் எழுந்தன.

முதலில் சீருடை அணிந்த நிலையில் பிரபாகரன் உடல் என்று காட்டினர். பின்னர் உடைகள் இல்லாமல் ஒரு உடலைக்காட்டினர். பிறகு சேறு படிந்த நிலையில் ஒரு உடலைக் காட்டினர்.

மேலும் பிரபாகரனின் மரணச் சான்றிதழையும் இதுவரை இலங்கை அரசு இந்தியாவுக்கு கொடுக்கவில்லை.

இதனால் பிரபாகரன் உண்மையில் உயிரிழந்து விட்டாரா என்பது குறித்து இதுவரை உறுதியான தகவல் எங்குமே இல்லை. இந்த நிலையில் சனல் 4 பட வீடியோக் காட்சிகள் புதிய திருப்பத்தை ஏற்படுத்துமா என்பது அதைப் பார்த்த பிறகுதான் கூற முடியும். (எ-11)

# போர்க் குற்றங்களைத் தடு...

செவ்வியில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இச் செவ்வியில் அவர் மேலும் கூறியுள்ளதாவது,

ஐக்கிய நாடுகள் சபையின் ஆவணங்கள், விக்கிலீக்ஸ் வெளியிட்ட அமெரிக்காவின் இரகசிய தகவல் குறிப்புகள் மற்றும் ஐ.நாவின் முன்னாள் மூத்த அதிகாரி ஜோன் ஹோம்ஸின் செவ்வி ஆகிய இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக சுமத்தப்பட்ட பல குற்றச்சாட்டுக்களை உறுதிப்படுத்தியுள்ளன.

சர்வதேச சமூகம் இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட போரின்போது படைத்தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனிதவுரிமை மீறல்களை தடுக்கத் தவறியமைக்கு முக்கிய காரணங்கள் உள்ளன.

தீவிரவாதத்துக்கு எதிராக அப்போது நடத்தப்பட்ட உலகளாவிய போர் என்ற மேற்குலகத்தின் நிகழ்ச்சிநிரலை, ராஜபக்ஷ அரசாங்கம் தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் திட்டமிட்ட வகையில் படுகொலை செய்யப்பட்டுள்ளதை சனல் தொலைக்காட்சி வெளியிடவுள்ள புதிய ஆவணப்படம் தெளிவாக உறுதிப்படுத்துகிறது.

படைத்தரப்பைச் சேர்ந்த ஒருவரால் பதிவு செய்யப்பட்ட இந்த காணொளிகள் உரிய நிபுணர்களால் நுணுக்கமாக ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு உண்மையானது என உறுதி செய்யப்பட்டுள்ளது.

பாலச்சந்திரன் மீதிருந்த காயத்தின் தன்மையின் மூலம் அவரின் மரணம் ஒரு மோசமான படுகொலை என்பதை உறுதி செய்கிறது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த தலைவர்கள் மற்றும் போராளிகளும் திட்டமிட்ட வகையில் படைத் தரப்பினரால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்பதை இப் படுகொலை உறுதிப்படுத்துகிறது.

இலங்கையில் இடம்பெற்ற போரின் போது பொதுமக்கள் வேண்டுமென்றே இலக்கு வைத்து தாக்கப்பட்டமைக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, படைத்துறைச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, அப்போதைய இராணுவத் தளபதி சரத் பொன்சேகா உள்ளிட்ட உயர் மட்ட அதிகாரிகளின் கட்டளையே காரணம் என இப் புதிய ஆவணப் படம் சுட்டிக் காட்டுகின்றது.

படைத்துறை மிகவும் ஒழுக்கமானது எனவும், நல்ல முறையில் ஒருங்கிணைக்கப்பட்டது எனவும், தமது கட்டுப்பாட்டின் கீழேயே போர் நடத்தப்பட்டதாகவும் ஜனாதிபதியும், படைத்துறைச் செயலாளரும் தொடர்ச்சியாக தெரிவித்திருந்தனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமானப் பணியாளர்கள் பாதுகாப்புக் கருதி மறைந்திருந்த பதுங்குகுழிகள் மீதும், அதனைச் சுற்றியும் திட்டமிட்ட வகையில் படைத் தரப்பினரால் எறிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இச் சம்பவம் தொடர்பில் ஐ.நா. பணியாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்தது கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் சரத் பொன்சேகாவுக்கும் நேரடியாகத் தெரியப்படுத்தப்பட்டது.

இப்போர் தவிர்ப்பு வலயம் மீதான படைத் தரப்பினரின் தாக்குதல்களை இலங்கையின் ஆட்சிபீடம் நன்றாகவே அறிந்திருந்தது என்பதை உறுதிப்படுத்துகின்றது.

மனித குலத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு இவர்களே நேரடியான பொறுப்புடையவர்கள் ஆவர்.

பொதுமக்களை கேடயங்களாக பாவித்தமை உள்ளிட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களை எவரும் மறுக்கவில்லை. இவர்களின் போர் மீறல்களும் ஆதாரப்படுத்தப்பட்டுள்ளன என அவர் இச் செவ்வியில் மேலும் தெரிவித்துள்ளார். (எ-11)



இலங்கைக்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள ஆறு நாட்டுத் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள் நேற்று ஜனாதிபதியை அலரி மாளிகையில் சந்தித்தபோது...

## மின்சாரம் தாக்கி...

தவராசசிங்கம் உமாகுமாரி (வயது 47) என்ற குடும்பப் பெண்ணே மரணமானவராவார்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-11;24)

## சனல் 4 வெளியிட்ட...

காட்சியின் ஆவணப்படத்தைப் பயன்படுத்தி இலங்கைக்கு இழிவை ஏற்படுத்துவதில் தீவிரமாகச் செயற்படுகின்றனர். சனல் 4 தொலைக்காட்சி வெளியிட்ட முதலாவது காணொளியை நாம் ஆழமாக ஆராய்ந்து பார்த்தோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளால் கொலை செய்யப்பட்ட சிறுவர்கள், குழந்தைகள் மற்றும் பெண்கள் தொடர்பில் ஆயிரக்கணக்கான காணொளிகளை எம்மால் தயார் படுத்த முடியும்.

அவர்கள் சிறுவர்களைக் கொலை செய்ததை எம்மால் உறுதிப்படுத்த முடியும். எமது படைத்தரப்பினர் இத்தகைய கொலைகளில் ஈடுபடவில்லை. மனிதாபிமானப் போரைத் தான் நாம் நடத்தினோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன் நீதிக்குப் புறம்பாக படைத் தரப்பினரால் படுகொலை செய்யப்பட்டுள்ளமை குறித்து சனல் 4 தொலைக்காட்சி உறுதிப்படுத்தியுள்ள நிலையில், பந்துல ஜெயசேகர இவ்வாறு கூறியுள்ளார். (எ-11)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 1935 . 01 . 10



மறைவு 2012 . 02 . 12

## அமரர் சீவரத்தினம் மகேஷ்வரி

எமது குடும்பத் தலைவி

**அமரர் சீவரத்தினம் மகேஷ்வரியின்**

வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள்

இன்று 13.03.2012 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத் தருணம் தாங்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்

91, இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

[7696]

## விழிசிட்டி ஞானவைரவ சுவாமி ஆலய வருடாந்த பொதுக்கூட்டம் 18.03.2012

விழிசிட்டி புளியடி ஞானவைரவர் ஆலய வருடாந்தப் பொதுக் கூட்டத்தை 18.03.2012 (ஞாயிறு) காலை 10.00 மணியளவில் ஆலய மண்டபத்தில் நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத் தருகின்றோம்.

ஆலய புனருத்தாரண பணிகள் நிறைவடையும் நிலையில் உள்ளமையால் 08.04.2012 அன்று மகா கும்பாபிஷேகம் நடாத்துவது எனவும் தீர்மானிக்கப்பட் டுள்ளது. எனவே இவை தொடர்பான முக்கிய விடயங்களும் கலந்துரையாடப்பட வேண்டியுள்ளதால் அனைவரையும் தவறாது சமுகம் தருமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

வைத்திய கலாநிதி க. சிவபாலன் (தலைவர்) — ச. ஜனார்த்தனன் (செயலாளர்)

(7692)

உங்கள் வெளிநாட்டுக் கல்விக் கனவை நனவாக்க!
உங்கள் வெளிநாட்டுக் கல்வியை மலேசியாவில் ஆரம்பித்து அடுத்த வருடமே
விரும்பிய நாட்டுக்குச் செல்லுங்கள்!



UK, Australia, New Zealand, USA, Canada
பட்டக்கல்வியை வழங்கும்
மலேசிய உயர்கல்விக் கண்காட்சி (2nd Edition)
with SPOT ADMISSION
SkillsMalaysia
INTI UCSI UNIVERSITY Curtin University of Technology SUNWAY UNIVERSITY SEGi University College KLIUC LIMKOKWING UNIVERSITY OF CREATIVE TECHNOLOGY
தூதரக நேர்முகத் தேர்வு இல்லை! வங்கிப்பணம் காட்டத் தேவையில்லை!
யாழ்ப்பாணத்திலேயே விசா அனுமதி!
A/L, O/L முடித்தவர்களும், O/L முடிக்காத 18-45 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கும்
தொழில்வாய்ப்புடன் கூடிய பட்டக்கல்வி வாய்ப்புக்கள்
மார்ச் 15 வியாழன்
யாழ் ஜானம்ஸ் ஹொட்டேல்
காலை 9.00 மாலை 5.00
அனுமதி இலவசம்!
மார்ச் 14, புதன் 9.00 மணிக்கு
யாழ் வீரசிங்கம் மண்டபத்தில்
கனவு மெய்ப்படவேண்டும்
சான்றிதழுடன் கூடிய
கல்வி - தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு
பெற்றோரே! உங்கள் பிள்ளைகளுடன் நேரில் வந்து அவர்களது பட்டக்கல்விக் கனவை நனவாக்குங்கள்
ஏற்பாடு:
கல்வி வழிகாட்டல் பிரிவு
சிகரம் ஊடக இல்லம்
இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
T.P.: 021 300 80 60 Email: SikaramMedia@gmail.com
In Association with Winning Magnitude
Be a winner Study • Job • Business
Supported and Endorsed by:
Ministry of Higher Education, Malaysia
High Commission of Malaysia
ஊடக அனுசரணை: சிகரம்

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.03.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.